# ரமணிசந்திரனின்

# மாயமெல்லாம் நானறிவேன்...



# மாயமெல்லாம் நானறிவேன்

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

அந்த “வினோதம்” வணிக மையத்தில். எல்லாக் கடைகளுமே உலகத்தரம் வாய்ந்தவை என்று சொல்லிவிட முடியாது, ஆனால். சில கடைகள் இன்னமும் பழைய பாரம்பரியத்தை அப்படியே கடைப்பிடித்து வந்தன,

அவற்றுள் ஒன்றில். உண்மையான தோல் பொருட்கள். செருப்புகள். ஷூக்களோடு கைப்பைகளும் பெல்ட்களும் கிடைக்கும், அடக்க விலைக்கு மேல். சிறு லாபம் வைத்து விற்பார்கள், பின் புறத்தில். குடும்பமே உட்கார்ந்து வேலை செய்யும்,

அதே போல. ஹைதராபாத் முத்துக்களில் பல்வேறு அணிகலன்களைச் செய்து விற்கும் கடையும் ஒன்று உண்டு, அவர்களது தயாரிப்புகளில். முத்து உரிந்துவிட்டது என்று புகார் வந்ததே இல்லை,

யுகேந்திரன் குடும்பத்தினரின் “சுரபி” பல்பொருள் அங்காடிக்கு இந்த இரண்டு கடைகளிலும் யுகேந்திரன் நிறையப் பொருட்கள் வாங்குவான், அதுவும் நேரடியாகவே சென்று வாங்குவான்,

ஆட்களை அனுப்பினால். முதலாளியிடம் இச்சகம் பாடுவதற்காக அதிகம் குறைத்துக் கேட்டுப் பேரம் பேசி. இப்போது இருக்கும் நல்லுறவைக் கெடுத்துவிடக் கூடும் என்கிற அச்சம் அவனுக்கு உண்டு,

அவனைக் கண்டதுமே நியாயமான விலை போட்டு. மொத்தமாக வாங்குவதால். அதிலும் கொஞ்சம் பில் கழிவும் தருவார்கள், அது பெரிய தொகை இல்லை என்றாலும். கொள்முதல் விலையில் எவ்வளவு குறைந்தாலும். அதுவும் ஒரு வகை லாபம்தானே?

மரியாதையும் பிரியமுமான இந்த உறவைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்பதாலும். இங்கே கொள்முதலுக்கு யுகேந்திரனே வருவான்.

அன்று தோல் பொருள் கடையில். சில தினுசு கைப்பைகள். பெல்ட்களுக்குப் பணம் கொடுத்து. “பாக்” பண்ணச் சொல்லிவிட்டு. முத்து நகைக் கடையைநோக்கி நடந்தபோதுதான் அவன். அந்த அழகியைப் பார்த்தான்,

சின்ன வயதில். அவனது பள்ளிக்கூடப் பருவத்தில். கோடை விடுமுறைக்குச் செல்லும்போது. அவனை ஒத்த வயதுள்ள பேரக் குழந்தைகளுக்கு. அவனுடைய பாட்டி சொல்லும் கதைகளுள் ஒன்றில். ராஜகுமாரனும் மந்திரி குமாரனும். உலக அனுபவம் பெறும் பொருட்டு. தேசாந்தரம் போவதாக வரும், அப்போது அரசகுமாரன். சுவரில்

வரையப் பட்டிருந்த ஓர் அழகான பெண்ணின் படத்தைப் பார்த்து. திக்பிரமை கொண்டு சிலை போல அங்கேயே நின்றுவிட்டானாம் என்று பாட்டி கதையைச் சொல்வார்கள்,

யுகேந்திரன். அவனுடைய சித்தப்பா. அத்தை பிள்ளைகள் எல்லோரும் கேலி செய்வார்கள், அதெப்படி சிலைபோல நிற்க முடியும்? மூச்சு விட்டானா இல்லையா? காற்றில் முடி கூட ஆடாதா? அதுகூட எப்படி அசையாமல் இருக்கும் என்று பேரன்கள் பேத்திமார் எல்லோரும் பாட்டியைக் கலாய்ப்பார்கள்,

இப்போது. கிட்டத்தட்ட அதே நிலை யுகேந்திரனுக்கு! சற்று நேரம் மூச்சுக் கூட விட்டானா இல்லையா என்று. அவனுக்கே தெரியாது, அந்த அளவுக்கு அசைவற்ற நிலை! இப்படியா. ஒருத்தி அழகாக இருப்பாள்!

கடைக்குள்ளிருந்து ஏதோ பார்சலுடன் வெளியே வந்துகொண்டிருந்தாள், அடிக்கடி வந்து போகும் கடை போலும், விடைபெறும் விதமாக லேசான புன்னகை,. அதில் கீற்றாக வெளித் தெரிந்து மின்னலடித்த முத்துப் பல் வரிசை. சற்றே திரும்பி அடியெடுத்து வைத்த நிலையில். மென்கொடி போல ... பெண்களை ஏன் கொடிகளுக்கு ஒப்பிடுகிறார்கள் என்று இப்போதல்லவா. தெரிகிறது! நடக்கும்போது. அந்த மாதிரிக் காற்றில் ஆடும் கொடி போன்ற உடலமைப்பு

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே. அவள் நடந்தவாறே கையிலிருந்த பாக்கெட்டை. அவளது தோளில் மாட்டியிருந்த சற்றுப் பெரிய பையினுள் வைத்துக்கொண்டு. அடுத்திருந்த கடைக்குள் புகுந்துவிட்டாள்,

ஓஹோ! இவளும் இந்த வணிக மையத்தில் அடிக்கடி வாங்குவாள் போல!

என்ன கடை என்று பார்த்தவனுக்கு வியப்பாக இருந்தது, ஆடைகளில் பூவேலை செய்வதற்குப் பயன்படும். கல். ஜரி. சம்கி போன்ற பொருட்கள்! இவற்றைப் பயன்படுத்திச் செய்த பொருட்களை வாங்குவாள் என்று பார்த்தால். இவள் மூலப் பொருட்களை அல்லவா வாங்குகிறாள்!

ஒருவேளை. தன் கையே தனக்குதவி என்று. தன் உடைகளுக்குரிய அலங்கார வேலைகளை. அவளே செய்துகொள்வாள் போல! ஆனாலும். ஜின்சும் டாப்பும் அணிந்திருக்கும் இவள். அவைகளை எங்கே ஒட்டி என்ன கைவேலை செய்வாள்?

தானும் எதையாவது வாங்கப் போவது போல. கடையின் உள்ளே போய். என்ன. எதற்கு வாங்குகிறாள் என்று நோட்டம் பார்க்கலாமா என்று ஒரு தரம் நினைத்துவிட்டு. மறு கணமே அந்த எண்ணத்தை விடுத்தான்,

“சுரபி”யிலேயே இந்தப் பொருட்களை விற்பனை செய்கிறார்கள்தான், பாக்கெட் பாக்கெட்டாகப் பல்வேறு தினுசுகள் வைத்திருந்தார்கள், எண்ணியும். சிறு கைத்தராசில் நிறுத்தும் அந்தப் பிரிவின் விற்பனைப் பொறுப்பில் இருந்த பெண்கள். அவற்றை விற்பதையும் கூட. அவ்வப்போது சூப்பர்மார்க்கெட்டைச் சுற்றி வந்து கண்காணிக்கும்போது. யுகேந்திரன் பார்த்திருக்கிறான்,

ஆனால். என்னவோ அந்தப் பொருட்கள் அவனது ஆர்வத்தைத் தூண்டியது இல்லை, என்னதான் தங்கம் வைரம் போல மின்னினாலும். இந்தப் பொருட்கள் அவற்றைப் போலத் தோன்றும் போலிகளே என்பதால் அப்படியோ. என்னவோ. இந்தப் பொருட்களில் அவனுக்கு லயிப்புத் தோன்றியதில்லை, எதெது என்னென்ன என்று கூடத் தெரியாது,

அதனால். அந்தக் கடைக்குள் சென்று என்ன கேட்பது என்று புரியாமல். தன் அறியாமையைக் காட்டி அசடு வழிய ... முக்கியமாக அவள் முன்னிலையில் அசடு வழிய அவனுக்கு விருப்பமில்லை!

அத்தோடு. அவன் வாங்க வேண்டிய முத்துக் கோத்த அணிகளும். அவள் சென்றிருக்கும் கடையைப் பார்த்தாற்போலத்தான் அமைந்திருந்தது, நேரத்தை வீணாக்காமல். அந்தக் கடையில் வேலையைப் பார்த்தவாறே. அந்த அழகி வருவதையும் கண்காணிக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது,

எனவே. முத்துக் கடைக்குள் சென்று. சரங்கள். கழுத்தணிகள். கைவளைகள் என்று. கொண்டு வந்திருந்த லிஸ்ட் படி ஆர்டர் கொடுத்தான்,

பரத நாட்டிய அலங்காரத்துக்கு உரிய செட் இரண்டு வகைகளில் பத்து என்று அவன் சொல்லும்போதே. அந்த அழகி. அந்த அலங்காரக் கைவேலைப் பொருள் கடையிலிருந்து வெளியே வரவும். யுகேந்திரன் சட்டென எழுந்துவிட்டான்,

“யுகேந்திரன் சார். என்ன எழுந்துவிட்டீங்க? எல்லாம் பில் போட்டு பாக் பண்ணக் கொஞ்ச நேரம். பத்தே பத்து நிமிசம் ஆகும், உட்காருங்கள், டீக்குச் சொல்லியிருக்கேன், இதோ வந்திடும் குடித்துவிட்டுப் போவலாம், அதுக்குள்ளே சாமானும் ரெடியாயிடும்,”

என்றான் கடைக்காரன. பதவிசாக,

அதற்குள். ஜின்ஸ் அழகி காஃபி ஷாப்புக்குள் செல்வது தெரியவும். யுகேந்திரன் மறுபடியும் அமர்ந்தான்,

இந்த காஃபி  ஷாப்பில். எதுவும் தாமதமாகவே நடக்கும், காலில் வென்னீரை ஊற்றிக்கொண்டு பறப்பது போல அவசரப்படுகிறவர்களுக்கு இது இடம் அல்ல,  வருகிறவர்களும். மெல்ல உட்கார்ந்து. நிதானமாகவே உண்டு. அல்லது அருந்திக் கிளம்புவார்கள்,

உட்புறத்தில். ஓரளவு இலகு உண்டியோடு பேச்சு வார்த்தைகள் நடப்பதும் உண்டு,

இங்கிருந்து சற்றே திரும்பிப் பார்த்தால். காஃபி ஷாப் வாயிலும் தெரியத்தான் செய்கிறது,

டீயை மரியாதையுடன் மறுத்துவிட்டு. “பாக்” பண்ணியவற்றைக் காரில் வைத்து வருமளவும் காத்திருந்தபோதும். அழகி வெளியே வரவில்லை,

கார்ச் சாவியை வாங்கிக்கொண்டு. அவனும் காஃபி ஷாப்பை அடைந்து வாயிற் புறமாக சற்று ஓரமாகப் பக்கவாட்டில் உட்கார இடம் கிடைத்த மேஜையில். உள்ப்பக்கம் பார்த்தபடி அமர்ந்து  ஒரு காஃபிக்குச் சொல்லிவிட்டுப் பார்த்தால். அந்த வெளிப் பகுதியில். அவனுடைய கதாநாயகியைக் காணோம்,

உள்பக்கம் ஏதேனும் சாப்பிடப் போயிருப்பாள் போல!  நாமும் உள்ளே போகலாமா என்று யோசிக்கும்போது. காஃபி வந்துவிட. அதை மெல்ல அருந்தியபடி. அங்கேயே காத்திருந்தான், எப்படியும் இந்த வழியாகத்தானே வெளியே செல்ல வேண்டும்?

தனியாக உட்கார்ந்து இருந்ததாலோ. அல்லது. அந்த அழகியைப் பார்க்கும் ஆர்வமோ. அங்கே அவன் கழித்த பதினைந்து நிமிஷங்களே. பல மணி நேரம் போல அவனுக்குத் தோன்றியது,

இங்கிருந்து வெளியே செல்வதற்கு வேறு வழி இருக்கிறதோ என்று கூட ஒரு சந்தேகம் வந்தது, எழுந்து உள்ளே போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான் என்று பேரரைக் கூப்பிட்டு. காஃபிக்கான பில் பணத்தை வைத்தபோது. உஎள்ளிருந்து யாரோ வந்தார்கள்,

வேறு யாருமல்ல, அவளேதான், சும்மா அல்ல, ஏதோ சொல்லிக்கொண்டு வந்தாள்,                 குரலும் தேன்தான், ரசனையோடு பேச்சைக் கவனித்தால். தேனாகப் பாய்வதற்குப் பதிலாக. அது அமிலத்தை அள்ளிக் கொட்டியது,

செம கடுப்புடன். “பாருங்கள். சிவா. உங்களிடம் என் பொறுமை முழுதாகத் தீர்ந்துவிட்டது, இனிமேலும் உங்கள் மனைவியிடம். இதை மறைப்பது கூடவே கூடாது, அடுத்த வாரம் சந்திக்குமுன். ஒன்று. அவளிடம் நீங்கள் சொல்கிறீர்கள், அல்லது. நானே. உங்கள் வீட்டுக்கே போய் அவளிடம். நேராகச் சொல்லிவிடுவேன்!” என்று. யாரோ ஒரு “சிவா”வை. அவள் மிரட்டிக் கொண்டிருந்தாள்,

இந்தப் பேச்சின் பொருளை அறிய. அகராதியைப் பார்க்க வேண்டியது இல்லை!

உள்ளே போவோருக்கு வழிவிட்டு. சற்றே பின்தங்கி வந்த ஒருவனோடு பேசினாள் போலும், சற்றே பின்புறமாகத் திரும்பியவாறே வந்து கொண்டிருந்தாள்,

இந்த நிலையிலும் என்ன அழகு!

சேச்சே! கடவுள் இப்படிப் பண்ணியிருக்கக் கூடாது! இவ்வளவு அழகாக ஒருத்தியைப் படைத்து. இவ்வளவு கெட்ட புத்தியையும் கொடுத்திருக்கவே கூடாது! எவ்வ்வளவு ஏமாற்றமாக இருக்கிறது!

எரிச்சலும் வெறுப்புமாகப் பார்வையை வெளிப்புறமாகத் திருப்பி. அங்கே தெரிந்த காட்சிகளில் மனதைச் செலுத்தி. ஏமாற்றத்தை ஒதுக்க முயன்றான்,

ஆனால். அவளைத் தொடர்ந்து கேட்ட ஆண்குரல். அவனை மறுபடியும் உள்ளே திரும்ப வைத்தது,

ஏனெனில். “இல்லையில்லை, ப்ளீஸ், வேண்டாம். சுபா, அவள். சின்னப் பெண், என் மீது உயிரையே வைத்திருக்கிறாள், இதைத் தாங்கவே மாட்டாள், நீபோய் எதையும் சொல்ல வேண்டாம், சரியான சமயம் பார்த்து நானே சொல்லிவிடுகிறேன், இப்போது வேண்டாம், ப்ளீஸ். “ என்று கெஞ்சிய குரல். யுகேந்திரனுக்கு அறிமுகமான ஒன்று, ரொம்பவுமே!

யார் என்று பார்க்குமுன். ஒரு கல்லூரி மாணவர்கள் கும்பல். யுகேந்திரனுக்கும். அந்த இருவருக்கும் இடையே புகுந்து உள்ளே சென்றது,

ஆனால். அவளது கடுத்த குரல் மட்டும் இன்னமும் அழுத்தமாக அவனது செவிப்பறையில் மோதியது,

“சும்மாச் சும்மா இதே பாட்டைப் பாடாதீர்கள். சிவா, அப்படி யார் மனதும் கண்ணாடியால் செய்தது அல்ல. அதிர்ச்சி தாங்காமல் பொட்டென்று உடைந்து. சுக்கு நூறாகி விடுவதற்கு, நீங்கள் இப்படிப்

பேசும்போது எனக்கு எவ்வளவு எரிச்சலாக வருகிறது. தெரியுமா? பொறுமையும் குறைந்துகொண்டே போகிறது, வேண்டுமானால் பாருங்கள்,. சீக்கிரமே ஒரு நாள். நானே போய். உங்கள் மனைவியிடம் எல்லாவற்றையும். பொட்டென்று போட்டு உடைத்துவிடப் போகிறேன், அதற்குள் நீங்கள் முந்திக் கொள்ளுங்கள், இல்லாவிடடால். அப்புறம். என்னிடம் வருத்தப்பட்டுப் பயனில்லை, அவ்வளவுதான் சொல்வேன், வருகிறேன்" என்றவள். உள்ளே செல்வோரின் கூட்டம் சற்றுக் குறையவே. மடமடவென்று வேகமாக வெளியே சென்றுவிட்டாள்,

"சுபா ...சுப்ரியா ...கொஞ்சம் நில்லு, ப்ளீஸ " என்றபடி. இயன்றவரை வேகமாக. அவளைப் பின் தொடர்ந்து சென்ற. அந்தத் துரோகக் கணவனுடைய துரதிர்ஷ்டசாலி மனைவி. அவனுடைய சொந்தச் சித்தப்பா மகள் வானதி!

அவர்களுடைய மொத்தக் குடும்பங்களிலுமாகப் பிறந்திருந்த இரண்டே பெண்களில். இவள் பெரியவள்,

கல்கியின் "பொன்னியின் செல்வ"னைப் படித்துவிட்டு. "குந்தவை" என்று பெய்ர் வைக்க ஆசைப்பட்டு. உடன் பயில்வோர். "குந்து" குந்தி என்று கேலி செய்வார்கள் என்று அடுத்த பிடித்த பெயராக "வானதி" என்று பெயர் வைத்தார்கள், அருமையாக வளர்த்து. வெகு சிறப்பாக. பல லட்சங்களை வாரிவிட்டு. திருமணத்தை நடத்தி. இரண்டே மாதங்கள்தான் முடிந்திருக்கின்றன!

புருஷன் என்றால். தங்கை பைத்தியாமாக இருக்கிறவள்! இப்போதைக்கு ஒரே மருமகன் என்று. குடும்பமே மாப்பிள்ளை மாப்பிள்ளை என்று உருகுகிறது!

இவனானால். இங்கே. இன்னொரு தொடுப்புடன். தரம் கெட்டுக் குலவுகிறானா?

எட்டிப் பிடித்து இரண்டு அறை விட வேண்டும் போல. யுகேந்திரனின் உடல் துடித்தது!

ஆனால் ,இல்லை, கூடாது, கை நீட்டுவது எளிது, ஆனால். பின் விளைவு மோசமாக இருக்கும், எப்படியும் விஷயம் வெளிப்பட்டுவிடும், தங்கை தாங்கமாட்டாள், சித்திக்கு வேறு ரத்தக் கொதிப்பு இருக்கிறது! இம் எனுமுன் படபடப்பு வந்துவிடும்,

அதனால். அவனே ... யுகேந்திரனே முயன்று. அவளை. அந்தக் காதகியை. அந்தக் கிராதகியை எப்படியாவது வெட்டி விட முயற்சிக்க வேண்டும், அவளை விரட்டிய பிறகு. மருமகன் முட்டாளுக்குப் புத்தி

சொல்லியோ. மிரட்டியோ நல்லபடியாக மனைவியோடு வாழச் செய்ய வேண்டும், அதை வானதிக்கோ. அவளுடைய பெற்றோருக்கோ. ஏன். சொந்த பந்தத்தில் வேறு யாருக்குமே கூடத் தெரியாமலே செய்து முடிக்க வேண்டும்,

இதுதான் சரியான திட்டம்! உருப்படியான ஒரே வழி!

எப்படிச் செய்வது என்று யோசித்தபடியே. அவர்கள் அறியாமல். முக்கியமாகத் தங்கை கணவன் கண்டுவிடாமல். யுகேந்திரன் அவர்ளைப் பின் தொடர்ந்தான்,

அவள் யார். என்ன செய்கிறாள். எங்கே இருக்கிறாள் என்று எல்லாம் தெரிந்தாக வேண்டுமே! இப்போது போலவே. கடவுளாகப் பார்த்து அவர்களைக் கண்ணில் காட்டுவார் என்று சும்மா இருக்கக் கூடாதல்லவா?

“வினோதம்” சற்று உயரத்தில் அமைக்கப் பட்டிருந்தது, கதவை அடுத்துப் படியிறங்கிக் “கார் பார்க்கிங்” செல்ல வேண்டும்,

அங்கங்கே நின்று இருவரும் வாதாடுவது தெரிந்தபோதும். சிவானந்தன் தன்னைக் கண்டுவிடக் கூடாது என்பதற்காகச் சற்றுத் தூரமாகவே பின் தொடர்ந்ததால். அவர்கள் பேசுவதை. யுகேந்திரனால் கேட்க முடியவில்லை, ஆனால். அவள் எதையோ வற்புறுத்துவதும். சிவானந்தன் மறுப்பதும் அவர்களது முகபாவம். சிறு கையசைவுகளால் தெளிவாகவே புரிந்துகொள்ளும்படியாக இருந்தது,

அவள் வற்புறுத்துவதும். இவன் மறுப்பதும் எதை என்பது. அவன் அறிந்ததுதானே?

அவ்வளவு அவசரமாடி. உனக்கு என்று உள்ளூரக் கொதித்தபோதும் தன்னைக் காட்டிக்கொள்ளாமலே. யுகேந்திரன் கவனித்தான்,

கடைசியாக. “எப்படியோ போய்த் தொலை” என்பது போன்ற அலுத்த பாவனையுடன் அவள் தலையசைக்க. கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு. சிவானந்தன் ஏதோ கூற. இருவரும் படியிறங்கிச் சென்றானர்,

ஓடிப்போய்ப் பார்த்தால். எதிர்ப்புறமாகச் சாலையின் மறுபுறத்தில் நிறுத்தியிருந்த காரை நோக்கி. சிவானந்தன் சென்று கொண்டிருந்தான்,

மகளுக்காகச் சித்தப்பா வாங்கிக் கொடுத்த கார்தான்,

நல்ல வேளையாக. அந்தக் காரில். அந்த இன்னொருத்தியை.

அவன் ஏற்றிச்  செல்லவில்லை, அந்த அளவேனும் நாகரீகம் இருக்கிறதே!

அவள் எங்கே என்று பார்த்தால். “வினோதத்”தின் பின் புறமாக அமைந்திருந்த

“டு  “வீலர் பார்க்”கை நோக்கி அவள் சென்று கொண்டிருந்தாள்,

ஓடிப் போய்க் காரில் ஏறிக்கொண்டு. யுகேந்திரன் அவளைப் பின்தொடர்ந்தான்,                 அவள் மொப்பெட்டில் எதிர்த்திசையில் சென்றாள், சற்று தூரம் சென்றதும். வண்டிச் சாவியை வாட்ச்மேனிடம் கொடுத்துவிட்டு. ஒரு பெரிய கட்டிடத்தின் உள்ளே சென்று வண்டியை நிறுத்திவிட்டு. அவள் உள்ளே செல்வது தெரிந்தது,

இங்கே. இவள் யாராக இருக்கக் கூடும்?

கேட் அருகே காரை நிறுத்திக்கொண்டு. “என் காரையும் உள்ளே நிறுத்துவாயாப்பா?” என்று காவலாளியிடம் கேட்டான்,

“இல்லைங்க, இங்கே ஓனருங்க. வேலை செய்யிறவங்க வண்டிங்களைத்தான் நிறுத்தலாம், நீங்கள அந்தப் பக்கம் கார்ப் பார்க்கிலே நிறுத்திட்டு வாங்க,” என்றான். அவன்,

ஆக. அவளது பணியிடம் இது! அதாவது. கல்யாணம் ஆன ஆண்களை மயக்குவது தவிர. ஏதோ பணியும் செய்யும் இடம் போலும்!

அவளது பெயரென்ன? ஏதோ. சுபா. சுப்ரியா என்றானே. மச்சான்!

பார்க்கலாம், உன் பெயர் தெரிந்துவிட்டது,. உன் இருப்பிடமும் தெரிந்துவிட்டது. பெண்ணே! இனி உன்னை ஓட ஓட விரட்டுகிறேன். பார் என்று தனக்குள் கறுவினான் யுகேந்திரன்!

# அத்தியாயம் -2

சுப்ரியா என்ற அழகியின் மாய வலையிலிருந்து. தங்கை கணவனைக் காப்பாற்றுவதைத் தன் ஒருவனின் பொறுப்பாய்த் தானாகவே எடுத்துக்கொண்ட யுகேந்திரன். அதற்கான முயற்சியை. உடனேயே தொடங்கினான்,

எதையும் தள்ளிப் போட்டு ஆறஅமரத் திட்டமிடவும் முடியாமல். அந்த சுப்ரியாதான். பொறுமை தீர்ந்துகொண்டு இருப்பதாக மிரட்டியிருக்கிறாளே! என்னதான் சிவானந்தன் கெஞ்சிக் கூத்தாடி அவளைத் தற்சமயத்துக்குத் தடுத்து வைத்திருந்தபோதும். அவள் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கக் கூடிய எரிமலைதானே?

எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ. அவ்வளவு சீக்கிரமாக. அந்த வெடிகுண்டை அணைத்தாக வேண்டும்,

ஹூம்! என்ன மாதிரி அணைக்க. அவளைப் பார்த்ததுமே ஆசைப்பட்டான்! இப்போது. அவளை எதனோடு ஒப்பிட வேண்டியிருக்கிறது!

தொழிலில் ஈடுபட்டு. இந்த ஆறு ஆண்டுகளில். அவனது மதிப்பீடு. இந்த அளவு கேவலமாகத் தவறாகிப் போனது. இதுதான் முதல் தடவை!

வெற்றி மேல் வெற்றியாகச் சேரச் சேர. அவனுக்குக் கொஞ்சம் தலைக்கனம் ஏறிவிட்டது போலும்! பயங்கரமாகச் சறுக்கிவிட்டான்!

யானைக்கும் அடி சறுக்கும்!

போகட்டும், தன்னைத் தானே வெளிப்படுத்தி. பெற்றோர் மற்றோர் முன்னே வெளிப்படையாகத் தன்னைத் தரம் இறக்கிக் கொள்ளுமுன். கடவுள் காப்பாற்றினார் என்று எண்ணிக்கொண்டபோதும். அவனால் அதில் ஆறுதலோ. திருப்தியோ அடைய. முடியவில்லை,

இருந்திருந்து. அந்த சுப்ரியா கெட்டவளாகிப் போனாளே என்று. அவனுக்கு வருத்தமாகவே இருந்தது, வருத்தத்தோடு. கோபமாகவும்!

எதற்கும் ... என்று. அவள் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் மனதில் கொணர்ந்து யோசித்துப் பார்த்தான், அந்த வார்த்தைகளுக்கு. வேறு பொருள் இருக்கக் கூடுமோ என்ற அற்ப ஆசை!

“சிவா” என்ற அழைப்பே நெருக்கத்தைக் காட்டுவது என்றாலும். சற்று சாதாரணமாகப் பழகினாலே. இப்படிப்பட்ட பெயர்ச் சுருக்கங்கள்

இப்போது சகஜம்தான், எனவே. அதில் தப்பு சொல்ல முடியாது,

ஆனால். தொடர்ந்து சுப்ரியா சொன்ன வார்த்தைகள்?

“பொறுமை தீர்ந்து விட்டது. மனைவியிடம் சொல்லியே ஆக வேண்டும்” என்றால் என்ன அர்த்தம்? இருவரின் தொடர்பைத் தெரிவித்து. அவளை விரட்ட வேண்டும் என்பதுதானே? “அடுத்த வாரம் சந்திக்கு முன்” என்று கெடு வேறு, அதாவது. வழக்கமாகச் சந்தித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள்!

அப்படி இன்னொருத்தியிடம் ஆசை இருந்தால். வானதியை அவன் மணப்பானேன்? சித்தப்பா கொடுத்த கார். மற்ற சீர் வரிசைகள் காரணமா? அப்படியும் சொல்வதற்கில்லை, ஏனெனில். அவன் குடும்பமே வசதி உள்ளதுதான், வரதட்சிணை என்று எதையும் அங்கிருந்து கேட்கவுமில்லை, எல்லாமே. சித்தப்பாவாகச் செய்ததுதான்,

ஒரு வேளை எதிர்பார்த்திருக்கலாம், ஏனெனில். மகளுக்கு அதைக் கொடுப்பேன்,. இதைக் கொடுப்பேன் என்று சித்தப்பா நிறையப் பேரிடம் பெருமையடித்திருப்பது. யுகேந்திரனுக்கும் தெரியும்,

ஆனால். அதைக் கொண்டு. சிவாவைக் குற்றவாளியாக்க முடியாது,

அத்தோடு. சிவானந்தனுக்கே. மனைவியிடம் ஒரு பரிவு. பிரியம் இருக்கத்தான் செய்கிறது, சின்னப் பெண்,. தாங்க மாட்டாள் என்று உருகுகிறானே! அந்தப் பச்சாதாபத்தை வைத்துத்தான். அவனைத் திருத்த முயற்சிக்க வேண்டும்,

திருத்துவதென்ன? இந்தப் பேய் விலகிவிட்டால். மச்சான் தானாகத் திருந்திவிடுவார்!

ஆனால். அந்தப் பரிவு கூடத் தாங்காமல். அவள் மனம் கண்ணாடியல்ல. உடைந்துவிடாது என்று இரக்கமின்றிச் சொன்னாளே. அந்த ராட்சசி!

இருக்கட்டும், அந்த வார்த்தைகளுக்காகவே. அவளை உடைத்துக் காட்ட வேண்டும்! உடை. உடையென்று. அதே சுக்கு நூறாக உடைக்க வேண்டும்,

இந்த அளவு கடந்த ஆத்திரத்துக்கு. எந்த அளவு சித்தப்பா மகளிடம் கொண்டுள்ள தங்கைப் பாசம் காரணம்,?. எந்த அளவுக்குச் சொந்த ஏமாற்றம் காரணம் என்று இனம் பிரித்துப் பார்க்க அவனுக்கு விருப்பமில்லை,

இப்போதைக்கு அந்த சுப்ரியாவைப் பழி வாங்க வேண்டும் அவ்வளவுதான்!

திரும்பத் திரும்பக் குறுக்கிட்ட சொந்த உணர்வுகளைப் பிடிவாதமாக ஒதுக்கிவிட்டு. அடுத்துச் செய்வது பற்றி. யுகேந்திரன் திட்டமிடலானான்,

முதல் படியாக. சித்தப்பா மகள் வானதியைப் போய்ப் பார்க்க. அவன் முடிவு செய்தான், தங்கைக்குக் கணவன் பற்றி. ஏதாவது வருத்தம். உறுத்தல் ... வெறும் நெருடலேனும் ஏற்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள எண்ணினான்,

அவளுக்கு நடப்பு விவரம் எதுவும் தெரியாது என்றாலும். என்னவோ. பெண்களுக்கு இது போன்ற விஷயங்களில். உள்ளுணர்வு ஏதோ சொல்லும் என்பார்களே,. வானதிக்கும் அப்படி ஏதேனும் வேறுபட்ட உணர்வு தோன்றியிருக்கிறதா என்று தெரிந்து கொள்ளலாம் என்று. ஒரு நாள் மாலையில். அவளது வீட்டுக்குச் சென்றான்,

வானதிக்கு அவனைப் பார்த்ததும். ஒரே கொண்டாட்டம்,

“வாண்ணா. வா.வா.வா! ஏது. இத்தனை யுகங்கள் கழித்து. தங்கை ஒருத்தி இருப்பது நினைவு வந்துவிட்டது? ஆஹா! இப்போதல்லவா தெரிகிறது. சீசன் இல்லாத நேரத்திலும். சில நாட்களாக மழை இங்கே வெளுத்துக் கட்டுவதன் காரணம்!” என்று கிண்டலடித்துச் சிரித்தாள்,

இது. பொய்ச்சிரிப்பா? நிஜமானதுதானா? உள்ளத்தின் வேதனையை மறைத்துக்கொண்டு. அவனுக்காக ஒன்றும் வானதி நடிக்கவில்லையே?

அவனது கூரான பார்வையில். அவள் முகம் கேள்விக் குறியாயிற்று,

“என்னண்ணா. அப்படிப் பார்க்கிறாய்? என்னமோ குற்றவாளியைக் குறுக்கு விசாரணை பண்ணுகிற வக்கீல் பார்ப்பது போல இருக்கிறது? உண்மையாகவே. நாலு நாட்களாக மழை பெய்யத்தான் செய்கிறது. அண்ணா! நீ பார்க்கவே இல்லையா? எங் ...கே? “சுரபி”யை விட்டு வெளியே வந்தால் அல்லவா. மழை பெய்வதும். வெய்யில் அடிப்பதும். உனக்குத் தெரியும்? காலையில் உள்ளே போனால். ராத்திரிதானே. வெளியே வருகிறாயாம்! அன்றைக்குப் பெரியம்மா ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டார்கள்... ,”

“அப்ப்பா! கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டுதான் பேசேன், மாப்பிள்ளை எங்கே. வனி? இன்னும் காணோம்?” என்று யுகேந்திரன்.

தங்கையிடம் கணவர் பேச்சை எடுத்தான்,

முகம் வாடுகிறதா என்று கவனித்துப் பார்த்தால். வினாடிக்குள் அவளது முகம் பூவாய் மலர்ந்தது,

“சிவா இதோ வந்துவிடுவார். அண்ணா, அவருக்காக வாழைப்பழ அல்வா. நானே செய்தேன் என்று சொன்னேனா? கையில் இருக்கும் வேலையை முடித்துவிட்டு. உடனே வந்து விடுவதாகச் சொன்னார், சொல்லி அரை மணி நேரம் ஆயிற்று,. இன்னும் காணவில்லை! எங்கே போக்குவரத்து நெரிசலில் மாட்டியிருக்கிறாரோ. என்னவோ? இருவருக்கும் ஒன்றாகத் தரலாம் என்று நினைத்தேன், பரவாயில்லை, இப்போது நீயேனும் சாப்பிடு. அண்ணா, இது சூடாகச் சாப்பிட்டால்தான் ரொம்ப நன்றாக இருக்கும், கூடக் காரத்துக்குக் காலிஃப்ளவர் பஜ்ஜியும் இருக்கிறது,” என்று அண்ணனுக்கு உண்டி எடுத்துவர உள்ளே சென்றாள் வானதி,

கூடவே சென்றபடி. “ஆகா. மாப்பிள்ளை வரத் தாமதம் ஆவதின் காரணம் இப்போது தெரிகிறது, இதைச் சாப்பிட்டபின் வாயைத் திறக்க முடியாதோ என்ற பயம்! அதுதானே. வனி? எத்தனை முறை அப்படி நடந்ததோ. பாவம்!” என்று கிண்டலடித்தபடி கூடவே சென்றான் யுகேந்திரன்,

“ஏய். அண்ணா! இப்படிக் கேலி செய்தாயோ. உனக்கு ஒன்றுமே தர மாட்டேன்! என் பலகாரங்கள் எல்லாம் எவ்வளவு ருசியாக இருக்கும் தெரியுமா? அன்றைக்கு. அப்பா. தம்பி எல்லாம் வழித்து வழித்துச் சாப்பிட்டார்கள், நீயும் சாப்பிட்டுப் பார். அப்புறம் அவருக்கே இல்லாமல். இன்னும் போடு போடு என்பாய்!” என்று கிண்ணத்தைக் கழுவி அதில் அல்வாவை எடுத்து வைத்தாள் வானதி,

“கொஞ்சமாக வைம்மா, இந்த நேரத்தில் இனிப்பு அதிகம் வேண்டாம், இதற்கு மேல். அதிக உடல் உழைப்பு இராது என்பதால். அப்படியே தொப்பையாக மாறிவிடும், பஜ்ஜியும் ஒன்று போதும்,” என்றான் அண்ணன்,

அவனை விசித்திரமாகப் பார்த்தாள். தங்கை, “என்னண்ணா. நீயும் அவர் மாதிரியே பேசுகிறாய்? நன்றாக இல்லை என்பதை. அப்படி நாசூக்காகச் சொல்லுகிறாரோ என்று உள்ளூரக் கஷ்டப்பட்டுக் கொண்டேன், அப்பா கூடச் சொன்னார். இந்த வயதில் சாப்பிடாமல் எப்போது உண்பது என்று கேட்டார், ஆனால். அப்புறம் வைக்க வைக்கச் சாப்பிடத்தான் செய்தார், “ என்றாள் அவள்,

சிவானந்தனின் சிறு தொந்தி நினைவு வர. “என்னம்மா செய்வது?

மாப்பிள்ளை சிவாவுக்கு அருமையான மனைவி. நீ கிடைத்துவிட்டாய்! எனக்கு அப்படியா? வரப் போகிறவள் என்னைப் பார்த்து. இந்தத் தொப்பை மாஸ்டர் எனக்கு வேண்டாம் என்றுவிட்டால்? அதற்குப் பயந்துதான். இப்படி அளவோடு சாப்பிட்டு. உடம்பைக் கச்சிதமாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று சோகம் போலச் சொன்னான் அவன்,

"சும்மாக் கதை விடாதே. யுகாண்ணா, இன்றைக்கு நீ இம் என்று சம்மதமாய்த் தலையாட்டினாலும். உன்னை மணக்கப் பல பெண்கள் தயார், நீதானே. தொழில். தொழில் என்று சொல்லிக்கொண்டு விலாங்கு மீனாய் நழுவிக்கொண்டு இருக்கிறாயாம்! பெரியம்மா வருத்தப்பட்டதாக. அம்மா சொன்னார்கள்," என்றாள் தங்கை,

"அடடா! இந்த அம்மாவுக்கு உறவினரைப் பார்த்தாலே. பிள்ளையைப் பற்றிக் குற்றப் பத்திரிகை படிப்பதுதான் வேலை போல! ஆனாலும். அதில் ஒரு முக்கியமான விஷயம் பார்த்தாயா? இப்படி ஒட்டிய வயிறோடு இருப்பதால்தான். பல பெண்கள் என்னை மணக்கத் தயாராக இருப்பதே, தொப்பையெல்லாம். கல்யாணம் ஆனவர்களின் "ட்ரேட் மார்க்" வனிம்மா," என்று ஏதோ பேசி சமாளித்துவிட்டுக் கிளம்பினான்,

ஆனால். அவ்வளவு நேரமும் வீடு வந்து சேர்ந்திராத. சிவானந்தன் மீது. அவனுக்கு மிதமிஞ்சிய ஆத்திரமும் வந்தது,

புதுப் பெண்டாட்டி ஆசையாகச் செய்து வைத்தால். தொண்டையில் வழுக்கிக்கொண்டு உள்ளே போக வேண்டாமா? பாவம். கல்லூரிப் படிப்பை முடித்ததும் நேராகக் கல்யாணமாகி வந்திருக்கும் சின்னப் பெண். கை நோகச் சமைத்திருக்கிறாள்! சட்டியை வழித்து முழுங்காமல். வேண்டாம் என்று அவன் எப்படிச் சொல்லாம்?

இதைத்தான். "கிளி போல மனைவி இருக்க. குரங்கு போல ஒருத்தியிடம் மயங்கிக் கிடப்பது" என்று சொல்வார்கள் போலும் என்று நினைக்கும்போதே. சேச்சே. அவள் ஒன்றும் குரங்கு போல இல்லை என்று. யுகேந்திரனின் மனம் முரண்டியது,

சரியாகச் சொவதானால். அவளைப் பேரழகி என்றுதான் சொல்ல வேண்டும்,

அப்படிப்பட்ட அழகி. தன்னை மட்டமாக நினைத்துவிடுவாளோ என்ற பயம் போல என்று. இப்போது எரிச்சல் உண்டாயிற்று, அல்லது. தொப்பையைக் குறைக்கும்படி. அவளே சொல்லியிருக்கலாம்! அதனால்தான். கஷ்டப்பட்டுச் செய்கிறவள் மனைவி ஆயிற்றே என்பது

கூட இல்லாமல். வேண்டாம் என்று சாப்பிட மறுக்கிறான் போல!

அது மட்டுமல்ல, ஆசையாகச் சமைத்து வைத்துக்கொண்டு மனைவி காத்திருந்தால். இன்னும் இவன் எங்கே சுற்றிக்கொண்டு
ஓஹோ! அந்த ராட்சசியோடுதான். ஐயா பேசிக் கொண்டிருக்கிறாரோ? இருக்கட்டும்,. இன்னும் எத்தனை நாள் இது தொடர்கிறது என்று பார்க்கலாம்!

போரின் அடுத்த கட்டம் பற்றி யோசித்தபடியே வீடு திரும்பி யுகேந்திரன். நேராகத் தாயை நாடிச் சென்றான்,

வீட்டை அடைந்து. தாயிடம் சென்ற யுகேந்திரன். சந்தோஷமாக “மிஸ்ஸியம்மா” படத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த தாயைப் பார்த்ததும். ஆத்திரத்துடன் “அம்மா. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று சீறினான்,

மகனிடம் இந்த மாதிரிக் குரலைக் கேட்டே அறிந்திராத யோகலட்சுமி. டீவியை மௌனத்தில் வைத்துவிட்டு. வியப்புடன் மகனைப் பார்த்தாள், “என்னடா அப்பா . ஓய்வு நேரத்தில் டீவி பார்ப்பது. சட்டப்படி குற்றம் என்று எனக்கு இதுவரை. தெரியாதே! இந்தச் சட்டம் எப்போது போட்டார்கள்?” என்று. புருவம் உயர்த்திக் கேட்டாள்,

“அம்மா. ப்ளீஸ்! அப்படி ஒரு சட்டமும் போடவில்லை என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும், சும்மா. வேடிக்கை பேசுவதாக எண்ணி. எதையாவது சொல்லாதீர்கள்! சும்மாவே ... “

“சும்மாவே என்னடாம்மா?”

“சும்மாவே. நான் “டென்ஷனி”ல் இருந்தேன், “

“அமைதியாக இருந்தால்தானே. புத்தி ஒழுங்காக வேலை செய்யும்? அதனால்தான் எங்கோ இடி இடித்தற்கு. என்னிடம் வந்து கத்தினாய் போல?” முறுவலித்தாள் தாய்,

எங்கோ அல்ல, நம் குடும்பங்களின் அருமைப் பெண் வீட்டில்தான் என்ற வார்த்தைகள். யுகேந்திரனின் தொண்டை வரை வந்து அடங்கின,

சொல்லி விடலாம், இன்னொரு மூளையும் சேர்ந்து யோசிக்கும்தான், ஆனால். விஷயம் பரவி விடும், அம்மா. சித்தி. அத்தை ஆகிய இந்தக் குடும்பங்களுடைய இல்லத்தரசிகள் எல்லோரும் ரொம்பவும் நெருக்கம், அதிலும் வானதி. எல்லாக் குடும்பங்களுக்குமே செல்லப் பெண்!

ஆனால். அதற்காகச் சும்மா இருப்பதும் . நிச்சயமாகக் கூடாது!

எப்படிச் சொல்வது என்று அவன் யோசிக்குமுன். “என்னப்பா விஷயம்?” என்று மகன் முகத்தைக் கூர்ந்து பார்த்து. மெல்லக் கேட்டாள் தாய்,

இது ஆபத்தான விசாரணை! இந்தக் கேள்விக் கணைகளிள் மாட்டிக் கொள்ளக் கூடாது,

முகத்தை எரிச்சலுற்றவன் போல வைத்துக்கொண்டு. “பின்னே என்னம்மா? பெண் பெண் என்று உருகுவீர்கள். வானதி இங்கே வந்து மாசக் கணக்கில் ஆகவில்லையா? “ என்று கேட்டான் அவன்,

“மாதக் கணக்கிலா? கல்யாணம் ஆகியே. இரண்டு மாதங்கள்தான் ஆகிறது, அப்புறமும். வீட்டுக்குக் கூப்பிட்டு. விருந்து வைத்து. சீரெல்லாம் செய்தோமே!” என்றாள் யோகலட்சுமி,

“அப்படியானால். இனி முறைப்படி மட்டும்தான் கூப்பிடுவீகளா? பட்டர் சிக்கன் செய்தால் சாப்பட வரச் சொல்வது ...அதெல்லாம் இனிக் கிடையாதா?”

“அட யாரடா. இவன்? புதிதாகத் திருமணமானவர்களைத் தொல்லை செய்யக் கூடாது என்று இருந்தால் ... “

“இருந்தால். மருமகன் நம்மோடு கலந்து பழகுவது எப்படி? வனி மாதிரி சிவா ஆக வேண்டாமா? சும்மாக் கூப்பிடுங்கள், இல்லையென்றால். அன்னியத் தன்மை. போகவே போகாது,” என்று அவன் சொன்னது. ஏற்புடையதாகத் தோன்ற. மறுநாளே பெண்ணை வீட்டுக்கு அழைத்தாள். பெரியன்னை,

கலகலவென்று சற்று நேரம் நன்றாகத்தான் கழிந்தது,

பிரச்சினை என்ன என்றால். மதியச் சாப்பாட்டுக்கு வருவதாக இருந்த மருமகனுக்கு வேலை வந்துவிட்டதால். “தப்பாக நினைக்க வேண்டாம்,” என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு. மற்றவர்களைச் சாப்பிட வைப்பதோடு. அவளும் சேர்ந்து சாப்பிடும்படி. மனைவியிடம் சொல்லிவிட்டான்,

கூடவே. மாலையில் வீட்டுக்கு அழைத்துச் செல்ல அவனே வருவதாகப் “ப்ராமிஸ்” பண்ணவும். யாருக்கும் இது தப்பாகவே தெரியவில்லை,

அவரவர் ஆளுக்கொரு தொழிலில் ஈடுபட்டிருந்ததால். திடுதிப்பென இது போலத் தவிர்க்க முடியாத பிரச்சினைகள் எழுவதும்.

அதறதகு ஏற்றபடி சமாளித்துப் போவதும் எல்லோருக்கும் பழகிவிட்டிருந்ததால். யாருக்கும் சிறு சந்தேகம் கூட எழவில்லை,

அதிலும் சிவானந்தனுடைய மனைவி மகாராணி. படு சுத்தம்! "பெரியப்பாவுக்கும் அண்ணனுக்கும் வைத்துக் கொடுத்துவிட்டு. நாம் சாவகாசமாகப் பேசிக்கொண்டே சாப்பிடுவோம். பெரியம்மா!" என்று. பெரியம்மாவோடு அரட்டை அடிக்க வாய்ப்புக் கிடைத்தது என்று சந்தோஷமே படத் தொடங்கிவிட்டாள்,

எதற்கும் ... என்று. "ஏன் வனிம்மா. சித்தப்பா வீட்டுக்காவது. அடிக்கடி வருவாரா? இப்படித்தானா?"என்று தங்கையிடம் கிளறிப் பார்த்தான்,

"ஐய்யோ. அங்கேயா. அண்ணா? அங்கே வாய் திறக்கவே கூச்சப் படுவார், பிறந்த வீட்டுக்குப் போய். "ஃப்ரீ"யாக இருந்துவிட்டு வராமல். என்னை ஏன் இழுக்கிறாய் என்பார், தம்பியோ. அவருக்கு மேல் வெட்கப்படுவான், சரிதான் என்று. நானும் விட்டுவிட்டேன்," என்று சிரித்தாள். அவள்,

"அப்படி விட முடியுமாம்மா? எப்போதுதான் பழகுவது?" என்றான் அவன் விடாமல்,

"டேய். டேய். ஒரேயடியாக பிடித்து இழுத்தால். வெறுத்துப் போகும்டா! நாலு விசேஷங்களில் பார்த்துப் பழகினால். தானாகவே இந்த ஒதுக்கம் போய்விடும், அப்புறம் பார். கோந்துப் போட்ட மாதிரி ஒட்டிக் கொள்வார், " என்று. விவரம் புரியாமல். அன்னை வேறு. சிவானந்தனுக்குச் சாதகமாகப் பேசினாள்,

பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு. "மாமியார். மாமனாரிடம் வெட்கமா? மைத்துனன் அதற்கும் மேலே போல! ஆமாம். உன்னிடமாவது நல்லபடியாகப் பழகுவாரா? உன்னிடமும் வெட்கம்தானா?" என்று வேடிக்கை போலக் கேட்டுவிட்டு. வானதியின் முகத்தை. ஆழப் பார்த்தான் யுகேந்திரன்,

முகம் செக்கர் வானமாகச் சிவக்க. "சீ. போண்ணா! என்னிடமெல்லாம் வெட்கப் படமாட்டார், பாருங்கள் பெரியம்மா. இந்த அண்ணன் என்னவெல்லாம் கேட்கிறான் ! இதெல்லாம் பேசாமல். சும்மாச் சாப்பிடச் சொல்லுங்கள்!" என்று. செல்லச் சிணுங்கலாகப் பெரியன்னையிடம் புகார் செய்தாள் அவள்,

"ஏய். ஆமாம்ப்பா, சின்னப் பெண்ணைப் போய். என்ன கேள்வி இது! அவள் சொல்வது போல. பேசாமல். உன் திருவாயை

மூடிக்கொண்டு சாப்பிடு!,"என்று  யோகலட்சுமி மகனை அதட்டினாள்,

அவள் சொல்லி முடிக்கு முன்னரே. கேவசமூர்த்தியும் மக்களும். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு சிரிக்கத் தொடங்கினர்,

"ஓ! வாயை மூடிக்கொண்டு சாப்பிடு என்றுவிட்டேனாக்கும், வார்த்தைக்கு வார்த்தை அப்படியே அர்த்தம் கண்டுபிடித்துச் சிரிக்க வேண்டுமா? எதற்காகச் சொன்னேன் என்று யோசிப்பதற்கு என்ன? " என்று அதட்டினாள் அன்னை,

கூடவே. "இந்தக் கேலியிலும் சிரிப்பிலும் சாப்பாட்டைக் கோட்டை விட்டு விடாதீர்கள், இன்னும் கொஞ்சம் மீன் புட்டு வைத்துக்கொள். வனி," என்று அவளுக்கு எடுத்தும் வைத்தாள்,

பேச்சினூடே வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று யோகம் பெண்ணை விசாரிக்க. அதற்கான விளக்கம் போல. மகள் ஒரு கைப்பையை எடுத்துக் காட்டினாள்,

பார்த்ததுமே. "என்ன அழகு!" என்று யோகம் அதை வாங்கி ஆராயலானாள்,

அழகான ரோஜா நிறத்திலிருந்து. அடர் வைலட் வரை வண்ணங்கள் பின்னிப் பிணைந்தாற்போல மாற. தெரிந்தும் தெரியாமலுமாக. சிவானி என்ற எழுத்துக்கள். அந்த வண்ணங்களிலேயே பளபளத்தன,

"இந்த மாதத் திருமண நாளுக்குப் பரிசாக. அவர் கொடுத்தார். பெரியம்மா, நிறுவனத்துக்காகக் கொஞ்சம் பரிசுப் பொருட்கள் வாங்கினாராம், இப்படி என்று இவர் சொன்னதும். இதைச் செய்து கொடுத்தார்களாம், நியாயமான விலையில். புதுமையாகச் செய்து தருகிறார்கள் என்று. சிவா அங்கேதான் நிறைய வாங்குவது," என்று பெருமையோடு கூறினாள் வானதி,

பெரியன்னையின் முகம் மலர்ந்தபோதும். கைப்பையின் ஓரத்தில். "ஸ்பெஷல்" என்ற நுண்ணிய எழுத்துக்களைக் கண்டுவிட்ட யுகேந்திரனுக்கு. உள்ளூரக் கோபம்

குமுறியது, இது. அந்தப் பெண் சுப்ரியாவின் நிறுவனத் தயாரிப்பு, அவன் ஏற்கனவே விசாரித்து. அறிந்திருந்தான்,

இந்தப் பெண். இப்படி அப்பாவியாக இருக்கிறாளே! இந்த மாதிரிப் பரிசுகளைப் பார்த்ததுமே. சந்தேகமாக யோசிக்கத் தெரியவில்லையே!

பேச்சினூடே. அவர்களுடைய குடும்பங்கள் எல்லாம் சேர்ந்து. ஒரு "கெட் டுகெதர்" வைக்கலாமா என்று தங்கையிடம். யுகேந்திரன் கேட்டான், "அவ்வப்போது பார்த்துப் பழக வேண்டும். வனி, இல்லாவிட்டால். மாப்பிள்ளைக்கு எங்கள் முக அடையாளமே மறந்து விடப் போகிறது!" என்று இலகுக் குரலில் மிரட்டினான்,

கணவனிடம் கேட்டுச் சொல்வதாகக் கூறிவிட்டுப் போனவள். மறுநாளே அண்ணனைக் கூப்பிட்டுப் பதில் சொன்னாள், புது வேலை ஒன்று எடுத்திருப்பதால். சிவானந்தனுக்கு ஓய்வே இல்லையாம், அதனால். இது பற்றிக் கொஞ்சநாள் கழித்து யோசிக்கலாம் என்றானாம்,

எதற்கு. இப்படி ஓடுகிறான்? மனைவி வீட்டாரோடு பழக. சிவானந்தனுக்கு என்ன தயக்கம்?

அந்த இன்னொருத்தியோடான பழக்கம் வெளிப்படும்போது. அதிக ஆட்களை எதிர்கொள்ளப் பயமா?

ஊகூம், இவனை நல்லவிதமாக இழுக்கும் முயற்சியில். இனி நாட்களை வீணடிக்கக் கூடாது, அடுத்த நடவடிக்கையை அவளிடம். அந்த சுப்ரியாவிடம் தொடங்க வேண்டும், ஊரை விட்டே விரட்ட வேண்டும், அதுவும் சீக்கிரமே!

# அத்தியாயம் -3

சிவானந்தனுக்காக. அவளை ஒழித்துக் கட்ட ஒருவன் முயற்சி செய்யக் கூடும்  என்ற சிறு சந்தேகம் கூட இல்லாமல். அதே சிவானந்தனைப் பற்றிய பலத்த சிந்தனையுடனேயே அன்று சுப்ரியா அவளது குட்டி அலுவலகத்தை நோக்கிச் சென்றாள்,

இந்த சிவா செய்வது சுத்த மடத்தனம்! எடுத்துச் சொன்னாலும். அவனுக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது?

மனைவி. குடும்பத்தார் என்றால். அப்படி பயப்பட வேண்டுமா? ஆண்பிள்ளை தானே? இன்னும் கொஞ்சம் தைரியமாக இருப்பதற்கென்ன?

தள்ளிப் போடப் போட. அவனுக்கு இன்னும்தானே. கஷ்டம் அதிகமாகும்? இதைக் கூடவா. ஒருத்தன் யோசிக்க மாட்டான்?

எப்படியோ போய்த் தொலையட்டும் என்று விடவும் முடியாமல். இவளது மனம் அல்லவா. கிடந்து அல்லாடுகிறது,

சரியானபடி சொல்லப் போனால். அவளுக்கு இது மிகவும் கெடுதலே ஆகும், சிவானந்தனைப் பற்றியே அடிக்கடி யோசித்துக் கொண்டிருந்தால். அவளது தொழில் என்ன ஆகும்?

வெளியே தெரிவது திறம்படச் செய்யும் கைவேலையே என்றாலும். அதற்கு அடிப்படையாகப் பயங்கரமான மூளை வேலை இருந்தால் ஒழிய. அவளது இந்தக் இந்தக் கைவேலை அவ்வளவாகப் பரிமளிக்காது, பத்தோடு பதினொன்று,. அத்தோடு இதுவும் ஒன்று என்று. வாங்குவோரின் மனதைக் கவரும் தன்மையே இல்லாது. வேறு பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துவிடும்,

அப்படியின்றி. வாங்குவோரைத் தூண்டும் விதமாக இருக்க வேண்டுமானால். அதற்கான அடிப்படை வேலை நிறையச் செய்ய வேண்டும், பயன்படுத்துகிறவர் யார். என்ன மாதிரிப் பின்னணி. எந்த மாதிரி வகுப்பினர். கல்வித்தரம் … இப்படி எவ்வளவோ ஆராய்ந்து. அதற்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டியது,

அதை விட்டு. வேறு விஷயங்களில் ஈடுபட்டு மனம் அலை பாய்ந்தால். விளைவு படு மோசமாக இருக்கும்,

அதனாலேயே. தொழிலில் ஒரு நிலைக்கு வருமுன். திருமணம் என்கிற பேச்சையே எடுக்கக் கூடாது என்று தாத்தா பாட்டியிடம்.

சுப்ரியா கண்டிப்பாகச் சொல்லியிருந்தாள், நல்லவேளையாக. அவளது முடிவுக்கு. அந்த இருவரின் ஆதரவும் முழுமையாக இருந்தது,

தன் காலில் நிற்க ஆசை என்று அவள் சொன்னதுமே. தாத்தா பாட்டி இருவருக்குமே ரொம்ப சந்தோஷம், அப்படித்தான் இருக்க வேண்டும் என்று. அவள் என்ன செய்யப் போகிறாள்? எப்படிச் செய்யப் போகிறாள் என்று ஆர்வத்தோடு கேட்டு. பேத்தியை உற்சாகப் படுத்தினார்கள்,

இன்னொருத்தி என்றால். இவ்வளவு காலமும் நம்மைப் பாரமாக நினைத்தார்களோ என்று எண்ணியிருக்கக் கூடும், அந்த அளவுக்கு அவளுக்கு ... அதாவது. அவளது கருத்துக்கு ஊக்கம் அளித்தார்கள்,

ஆனால். நினைவு தெரிந்த காலத்தில் இருந்து வளர்த்த மூத்த தலைமுறை பற்றி நன்கு அறிந்தவள். சுப்ரியா,

அத்தோடு. “செய்வதற்குக் கையில் ஒரு வேலையோ. தொழிலோ இருந்திருந்தால். என் பெண் அப்படி இடையில் போயிருக்க மாட்டாள்,” என்று அப்போதைக்கப்போது பாட்டி சொல்லும் வாசகம். நொந்த மனம் உணர்ந்து சொன்னது!

சொல்லப் போனால். பாட்டியின் அந்த வார்த்தைகள்தான். தன் காலில் நிற்கும் ஆர்வத்தை. சுப்ரியாவுக்கு ஏற்படுத்தியது என்று சொல்லலாம்,

அதன்படி. அவளும் கூடப் படித்த பிரதிமாவும் சேர்ந்து. இந்த நிறுவனத்தைத் தொடங்கினார்கள், அவர்கள் தயாரித்து விற்ற பொருட்களில். ஒரு தனித்தன்மை இருப்பதைக் குறிக்கும் விதமாக. நிறுவனத்துக்கு “ஸ்பெஷல்” என்று பெயர் வைத்தார்கள்,

பரிசுப் பொருட்கள் ... பெரும்பாலும். வெவ்வேறு விதமான பைகள். சணல். தடிமனான நூல். குருத்தோலை. நார் போல. இயற்கையோடு ஒன்றிப் போகிற பொருட்களைக் கொண்டு. சின்னதிலிருந்து. பெரிது வரை. வாடிக்கையாளர்கள் தேவைக்கேற்ப. கலை நயத்தோடு தயாரித்து விற்றார்கள்,

ஆர்டர் கொடுக்கிறவர்களின் தேவையைப் புரிந்துகொண்டு. அவர்களுக்கு ஏற்றவாறு. அழகாகவும். நியாயமான விலையிலும் செய்து கொடுக்க. சீக்கிரமே “பிரேக் ஈவன்” வந்து. ஓரளவு லாபமும் காணத் தொடங்கினார்கள்,

வாடிக்கை கூடவே. வடிவமைப்பு மட்டும் அவர்களே செய்ய. மற்ற கீழ் வேலைக்கு இரண்டு பேரை நியமித்தார்கள்,

இரண்டு பேருக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளிகள் ஆகிவிட்டோம் என்று பெருமிதம். இருவருக்குமே உண்டாயிற்று,

சந்தோஷமாக இருந்த இந்த நிலையில்தான். அந்த சிவானந்தன். அவர்களது தயாரிப்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டு. அவர்களது அலுவலகத்தை நாடி வந்தான்,

அவன். ஏன்தான் வந்தானோ என்று தோன்றும் அளவுக்கு. இப்போது நிலைமை மாறிவிட்டது!

பார்ட்னர் பிரதிமாவோடு விலைவாசி பற்றி உரையாடியபடியே வாங்கி வந்த மூலப் பொருட்களை சுப்ரியா காட்ட. இருவருமாக அத பற்றிக் கணக்கிட்டவாறே. உரிய இடத்தில் அடுக்கி வைத்தார்கள்,

“பார். பிரதிமா. இந்த ஜரி வளையம். கம்பிகள் எல்லாம் பத்து சதவீதம் விலை ஏறியிருக்கிறது, இவைகளைப் பயன்படுத்திச் செய்கிற பொருட்களுக்கு நாமும் கொஞ்சம் வில ஏற்றினால்தான். லாபம் குறையாமல் இருக்கும், என்னப்பா. இந்த இடம் தூசி தட்டவே இல்லையா? மரியம்மா வந்தாளா? இல்லை. இன்றும் மட்டமா?” என்று சிறு எரிச்சலோடு கேட்டாள்,

“வரவில்லை, அவளுக்குப் பதிலாக வேறு ஆள்தான் பார்க்க வேண்டும் ...” என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. வாயிற்புறத்துக் கண்ணாடிக் கதவில் யாரோ லேசாகத் தட்டினார்கள்,

“அடெடே. மறந்தே போனேன் பார்! நீ பர்ச்சேஸ் போயிருந்தபோது. உன்னைத் தேடி ஒரு பெண் வந்தாள்...மீண்டும் வருவதாகச் சொன்னாள், அதோ. அவள்தான்,” என்றாள் பிரதிமா,

“யாரிவள்? என்னை என்று எதற்காகப் பார்க்க வேண்டுமாம் ...” என்று முணுமுணுப்பாய் யோசித்தபடியே. “உள்ளே வரலாம்” என்பது போல. சுப்ரியா கையால் சைகை செய்தாள்

உள்ளே வந்த பெண்ணிடமும் அவள் அதே கேள்வியைக் கேட்கவும். கண்களில் ஆர்வத்தோடு அவளைப் பார்த்து. “ஏனென்றால். நான் உன் தங்கை,” என்றாள். அவள்!

திடுமென அழகான. கூடவே அழகுபடுத்திக் கொள்ளவும் தெரிந்த ஒரு பெண் வந்து நின்று. “நான் உன் தங்கை” எனவும். சுப்ரியா ஒரு கணம் திகைத்தாள்,

அவளுடைய தாயாருக்கு அவள் ஒரே மகள், தாத்தா பாட்டிக்கும். அம்மா ஒரே பெண்ணே! அப்படியிருக்க. இப்படி ...சுமார் பத்தொன்பது. இருபது வயது மதிக்கத் தகுந்த தங்கை ஒருத்தி. எங்கிருந்து முளைக்க

முடியும்? இருக்கிற பிரச்சினை போதாது என்று இப்படி ஒரு செமியோடு வேறு போராட வேண்டுமா?

ஒருவேளை. இது புது விதமான பிச்சையோ என்று தோன்ற. "இது என்ன புது மாதிரிக் கதை? சுற்றி வளைப்பதை விடுத்து. உனக்கு என்ன வேண்டும் என்று அதை முதலில் சொல்லு, ஆனால். நீ என்ன கதை சொன்னாலும். நாங்கள் தர்மதாதாக்கள் இல்லை, அதை முதலில் தெரிந்துகொண்டு கதை கட்டு!" என்றாள் சற்றுக் கடுமையான குரலில்,

"இது. கதை இல்லைக்கா, நான் மெய்யாகவே. உன் தங்கைதான்," என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக,

"ஏய் ... சும்மா ஏதாவது ரீல் விட்டு என் நேரத்தை வீணாக்காதே, துடைத்துப் பெருக்குகிறவள் வராமல். நானே எரிச்சலில் இருக்கிறேன், எதையாவது சொல்லி வாங்கிக் கட்டிக்கொள்ளாமல். உடனே இடத்தைக் காலி பண்ணு," என்று. முகத்திலும் குரலிலும் எரிச்சலை வெளிப்படையாகக் காட்டிச் சொன்னாள் சுப்ரியா,

"ஐயோ. வேலைக்காரி வரவில்லையா? கஷ்டம்தான், அதற்கு சாரிக்கா, ஆனால். நிஜமாகவே நான் உனக்குத் தங்கையேதான், " என்றாள் அவள் பிடிவாதமாக,

உதடுகளை இறுக மூடிக்கொண்டு மனதில் பத்துவரை எண்ணினாள் சுப்ரியா, பிறகே வாய் திறந்து. "இதோ பார. கத்தக் கூடாது என்று பார்க்கிறேன், எனக்குத் தங்கை யாரும் கிடையாது, இருக்கவும் வாய்ப்பில்லை, என் அம்மாவுக்கு நான் ஒரே பெண், அவர்களுக்கு வேறு எந்தக் குழந்தையும் பிறந்து. மருத்துவமனையில் தோலைந்தோ. செத்தோ போகவில்லை என்று எனக்குத் தெரியும், அதனால் எதையாவது உளறிக் கொட்டி எரிச்சல் மூட்டாமல். உடனே இங்கிருந்து போய்விடு," என்றாள் அவள் அதட்டலாக,

தோழியின் முகம் சினத்தில் சிவப்பதைக் கண்டு. "இதோ பார் " என்று பிரதிமா ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்தாள்,

ஆனால் வந்தவளோ. சிட்டுக் குருவி போலத் தலை சரித்து சுப்ரியாவைப் பார்த்தாள், சின்னச் சிரிப்புடன். "அம்மாவுக்கு ஒரே பெண்தான், ஆனால். அப்பாவுக்கு?" என்று கேள்வி கேட்டாள்,

தந்தை! கைக்குழந்தையோடு. நோயாளி மனைவியைக் கைவிட்டுப் போன மனிதன்! பல மாதங்களுக்குப் பிறகு. அனுப்பினவர் முகவரி இல்லாமல். "உனக்கும் எனக்கும் இனி என்றுமில்லை," என்ற வாசகத்தோடு கூடிய ஒரே ஒரு கடிதத்தோடு. அடியோடு காணாமலே

போனவர்!

குபீரென்று உள்ளே தீப்பிடிக்க. “எனக்கு அப்பாவே கிடையாது, மரியாதையாகப் போ வெளியே,” என்று கையை நேராக நீட்டி. வந்தவளுக்கு வாயிலைக் காட்டினாள். மூத்தவள்,

சிரிப்பு மறைய. “அப்பாவே கிடையாது என்று பெரியம்மாவை அவமானப் படுத்தாதே,” என்று. குரலில் ஒரு கம்பீரத்துடன் கூறினாள் மற்றவள்,

“ஏய் “என்று சுப்ரியா கையை ஓங்கி விட்டாள்,

அடுத்தவள் அப்போதும் அஞ்சவில்லை, மார்பின் குறுக்காகக் கையைக் கட்டிக்கொண்டு. “அக்கா. என்னை அடிப்பதால் உன் மனது சாந்தி அடையுமானால். அடித்து. உன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள், அங்கே என்ன கஷ்டம் நேர்ந்தாலும். அமைதியாகப் பொறுத்துக் கொள் என்று சொல்லித்தான். அம்மா என்னை இங்கே அனுப்பினார்கள், அறிந்தோ. அறியாமலோ செய்த பாவத்தைக் குற்றேவல் செய்தேனும் கழிக்க வேண்டும் என்று ....... “ என்று சொல்லிக்கொண்டே போனவளின் பேச்சில். சுப்ரியா குறுக்கிட்டாள்,

“....... என்று உன் அம்மா சொன்னாள்,. அதுதானே? அந்த வேலைக்கெல்லாம். இங்கே வேறே ஆள் இருக்கிறார்கள், நீ நடையைக் கட்டு, கிளம்பு!” என்று கறார்க் குரலில் உத்திரவிட்டாள்,

ஆனால். சின்னவள் பணிந்தால் அல்லவா?

“ஏன்க்கா. வேலைக்காரி வரவில்லை என்று இப்போதுதானே சொன்னாய்? இன்றைக்கு அந்த வேலையை. நான் செய்கிறேனே, “ என்று துடைப்பம் இருந்த இடத்தைத் தேடி எடுத்து சுத்தம் செய்யத் தொடங்கினாள்,

துடப்பத்தை அவள் பிடித்த தினுசைப் பார்த்ததும். பெரியவளுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது, இந்தப் பெண். அது போன்ற வேலைகளைச் செய்து பழகியவள் அல்ல,

அத்தோடு. பிராயசித்தம் செய்வதானால். தப்பு செய்தவர்களான. இவளுடைய தாயோ. தந்தையோ அல்லவா. செய்ய வேண்டும்?

ராமன் செய்த தப்புக்குக் கிருஷ்ணன் என்ன பரிகாரம் செய்வது? ராமன்தானே செய்ய வேண்டும்? செய்வதை எல்லாம் செய்துவிட்டு. பிராயசித்தத்தை மட்டும் பிள்ளைகள் தலையில் கட்டுவதா?

சின்னவளின் கையில் இருந்த துடைப்பத்தைப் பிடுங்கிக் கீழே

போட்டாள்,

மனதில் நினைத்ததைச் சொல்லி. "இதோ பார். இங்கே மொத்தக் கட்டிடத்தையும் பெருக்கி சுத்தம் செய்கிறவள். மற்ற வேலை முடிந்ததும் வந்து. இதைச் செய்து  கொடுப்பாள், அப்படி ஒரு பழக்கம் இருக்கிறது, அதனால். நீ எதுவும் செய்யத் தேவையில்லை! நீ சொன்னது போலப் பிராயச்சித்தம் என்றால். அதைச் செய்ய வேண்டியவர்கள். உன்னைப் பெற்றவர்கள், அவர்கள் எங்கேயோ குஷாலாக இருந்துகொண்டு. ஏதாவது வேலை செய்து பாவத்தைக் குறை என்று. உன்னை அனுப்பினார்களாக்கும்?" என்றாள் குமுறும் கோபத்துடன்,

சில கணங்கள் தலை குனிந்து நின்றாள் புதியவள், பிறகு. "நீ நினைப்பது போல இல்லையக்கா, அப்பாவுக்கு. ஒன்று மாற்றி ஒன்றாக விபத்துகள். எப்போதுமே நேர்ந்துகொண்டேதான் இருக்கின்றன, பெரியம்மா பற்றி முதலில் அம்மாவுக்குத் தெரியாது, ஆனால். அப்பாவுக்கு இந்த விபத்துகள் தொடரவும். மனதில் ரொம்பவும் உறுத்தி இருக்கிறது,  ஒரு தடவை சிகிச்சைக்காக மயக்க மருந்து கொடுத்தபோது. தன்னையறியாமல். அப்பா. பெரியம்மா பற்றிப் புலம்பினாராம்,

"அப்போது அம்மா கேட்டதற்கு. உனக்குச் சம்பந்தம் இல்லாதது என்றுவிட்டாராம்,

"இப்போது கடைசியாகக் காலில் பலத்த அடி, இரண்டு இடங்களில் எலும்பு நொறுங்கியே போய்விட்டதாம், அப்பாவிடம் வற்புறுத்திக் கேட்டுத் தெரிந்து. அம்மா என்னிடம் சொன்னார்கள்,

"இரண்டு பேரும் யோசித்தோம், முதலில். அம்மாவேதான் வர எண்ணினார்கள், ஆனால். எனக்கு அப்பா மேல் ரொம்பக் கோபமாக இருந்தது, படுக்கையில் இருக்கும் அப்பாவைப் பார்த்துக்கொள்ளும் பொறுமை. இப்போது எனக்கு நிச்சயமாக இல்லை,

"கொஞ்சம் வசதியான வாழ்வுதான் என்றாலும். முழு நேர நர்ஸ் எல்லாம் கஷ்டம், அப்பாவும் ரொம்பப் படுத்தி. நாலே நாளில் விரட்டிவிடுவார், தம்பிகள் வேறு. சின்னப் பையன்கள், அவர்களும் அம்மாவுக்குத்தான் அடங்குவார்கள்,

"பிள்ளைகளுக்காகப் பெற்றோர் பரிகாரம் பண்ணுவார்களாமே, உல்டாவாக. அப்பாவுக்காக. நான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்,

"இங்கே வந்து உன்னைப் பற்றி முழுதாக விசாரித்தேன்,

“அக்கா. நம் அப்பா ஒன்றும். பொறுப்பான தகப்பனார் கிடையாது, ஆனால். எனக்கு ஓர் அருமையாக அம்மா கிடைத்திருக்கிறார்கள், அம்மாவும் இல்லாமல் நீ வளர்ந்ததை அறிந்தபோது. நெஞ்சை அடைத்துக்கொண்டு அழுகை வந்தது,

“ஈடு செய்யவே முடியாத இழப்பு. அது, அதற்குப் பரிகாரம். பிராயசித்தம் எல்லாம் ஒன்றுமே கிடையாது, அதெல்லாம் வெறும் வெற்று வார்த்தைகள்! ஆனால். உனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று. என் மனது துடிக்கிறது,

“ஆனால். உதவி என்று எதையும் செய்வதற்கு இல்லாமல். நீயே ஒரு நிலையை ஏந்படுத்திக் கொண்டிருக்கிறாய், ஆனால். ராமருக்கு அணில் செய்த மாதிரி. உன் கூடவே இருந்து. ஏதா ...வது ...இப்படிப் பெருக்கித் துடைத்து இந்த மாதிரியேனும் ஏதாவது செய்ய. செய்து மனதை லேசாக்கிக் கொள்ள. என்னை அனுமதிப்பாயா. அக்கா? ப்ளீஸ்க்கா!” என்று கெஞ்சும் குரலில் வேண்டுதல் போல ஒரு கோரிக்கையோடு பேச்சை முடித்தாள்,

அலமாரியின் பக்கம் திரும்பி. இறுகி நின்றாள் சுப்ரியா, பதில்

கூறும் நிலையில் தோழி இல்லை என்பதை உணர்ந்து. பிரதிமா குறுக்கே வந்தாள், “வந்து ... இதெல்லாம் அப்படிச் சட்டென்று முடிவு செய்ய இயலாது ,அதனால். நீ போய்விட்டு இன்னொரு நாள் ... “ என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. “அவள் இருக்கட்டும். பிரதி,” என்றாள் சுப்ரியா கம்மிய குரலில்,

இரு பெண்களும் ஆவலும் கேள்வியுமாகப் பார்க்க. லேசாகத் தொண்டையைச் செறுமிக்கொண்டு. “இவள் அம்மாவுக்குப் பிறகுதான் விவரம் தெரிந்திருக்கிறது, அதனால் அதனால். அவர்கள் மேல் கோபப்பட முடியாது, “ என்றாள் தோழியிடம்,

“ஆமாம்க்கா, ஆமாம்க்கா! எனக்கே ஏழெட்டு வயது இருக்கும்போது. ஓடுகிற பஸ்சிலிருந்து இறங்கி. விழுந்து அப்பாவுக்கு அடி பட்டது, அப்போது விலா எலும்பு உடைந்து போயிற்று, அப்போதுதான் அம்மாவுக்குத் தெரிந்ததாம், ரொம்ப நேரம் அழுதார்கள் என்று எனக்குத் தெரியும், மற்றது ... அப்போது வேறு எதுவும் என்னிடம் சொல்லவில்லை, சொன்னால் புரிந்தும் இராது, அம்மா. எல்லா விஷயமும் சொன்னது இப்போதுதான்,அப்புறமாக. இருவரும் பேசி முடிவெடுத்து. நான் கிளம்பி வந்தேன், இங்கே உனக்கு உதவியாக இருக்கிறேன் என்றாலே. அம்மாவுக்கு ஆறுதலாகிவிடும், சம்பளம் கூட. வெறுமனே சாப்பாட்டுக்குத் தந்தால் போதும், அது கூட இப்போது

முடியாது என்றால் விட்டுவிடுக்கா, சொன்னால். அம்மாவே அனுப்புவார்கள், வேலை மட்டும் கொடு. அது போதும், என்ன வேலை வேண்டுமானாலும் செய்கிறேன். அக்கா, அக்கா. ப்ளீஸ்!"

தோழியர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்,

மற்றவளின் மனம் புரிந்துவிட. "இவ்வளவு பேசுகிறாய்! உன் பெயர் சொல்லவே இல்லையே?" என்று. பிரதிமா  கேட்டாள்,

"ச்சு,. அது வேறு!" என்று அலுப்புடன். புதியவள் பதில் சொன்னாள், "என் பெயர் வண்ணநிலா, நிலா என்றால். வெள்ளைதானேக்கா? அது என்ன "வண்ண" நிலா? கேட்டால். ஏழு வண்ணங்கள் சேர்ந்ததுதான் வெள்ளையாம்! அப்பா ... டியோவ்! நம் அம்மாகிட்டே. பேசவே முடியாதுக்கா,"

"நூலைப் போலச் சேலை என்று. ஒரு பழமொழி இருக்கிறது, நீயும். அம்மா மாதிரிதான் போல! ஆனால்.  பெயர் அழகாகத்தான் இருக்கிறது என்றாலும். முழ நீளமாக இருக்கிறது, வண்ணம் என்று அழைத்தாலும். அவ்வளவாகச் சரி வரவில்லை," என்று யோசித்தாள் சுப்ரியா,

"உலக மகா சிக்கலாக இருக்கும்போல? " என்றாள் பிரதிமா. புன்னகையோடு,

"அம்மா என்னை "மதி" என்பார்கள், சண்டை வரும்போது. தம்பிகள் என்னை "வள்வள்மதி என்பார்கள், " எனப் பதில் வரவும். எல்லோருக்கும் சிரிப்பு வந்தது,

"நன்றாகச் சண்டை போடுவாயாக்கும்! இருக்கட்டும், என்ன பெயரில் அழைப்பது என்று. யோசித்து முடிவு செய்வோம், உனக்குத் தையல் போல ஏதாவது கைவேலை தெரியுமா?  " என்று. விசாரித்தாள். சுப்ரியா,

கண்ணில் சிரிப்புடன். "முன்னே தெரியாது, ஆனால். நீ இன்ன தொழில் செய்கிறாய் என்று தெரிந்ததுமே. ஒரு தையல் வகுப்பில் சேர்ந்துவிட்டேன், இப்போது கையில் ஊசியைக் குத்திக்கொள்ளாமலே ஓட்டுநூல் போட்டுவிடுவேனாக்கும்!" என்று அவள் பெருமையாகச் சொன்ன தினுசில் மற்ற இருவருமே நகைத்தனர்,

"சரி சரி, இங்கேயே பழகிக் கொள்ளலாம், ஆனால். பழகிக் கொண்டாக வேண்டும், உட்கார்ந்து. உன் "பயோ டேட்டா"வை எழுதிக் கொடு, முறையாக வேலை செய்வதாகவே இருக்கட்டும், இன்னொருவரை வேலைக்குச் சேர்ப்பது பற்றி யோசித்துக் கொண்டுதான் இருந்தோம், ஆனால். சீக்கிரமே தகுதியை வளர்த்துக்

கொள், “ என்று ஓர் இருக்கையை அவளுக்குக் காட்டிவிட்டு. சுப்ரியா தோழியிடம் திரும்பினாள், “பிரதி. “வால் ஹேங்கிங்” வேலை முடிந்துவிட்டதாமா? கேட்டாயா? இன்னும். “டச்சப்” வேலை வேறு நாம் செய்தாக வேண்டும், “ட்யூ”வுக்கு  மூன்று நாட்கள்தான் இருக்கின்றன,” என்று. தொழில் விவரம் பேசத் தொடங்கினாள்,

“அடடா! இந்த ஆண்டுவிழா அழைப்புக்கு டிசைன் போட்டுக் கொண்டிருந்ததில். இதை மறந்தே போனேன். சுபி, கொஞ்சம் நீயே கேட்டுவிடேன், அல்லது. இந்த வேலைக்கு உன் தங்கையை பழக்கிவிடலாமா? “ என்று கேட்டாள் பிரதிமா,

“யாரை?” என்று அவளை ஒரு தரம் முறைத்தாள் சுப்ரியா,

எழுதுவதை நிறுத்தி நிமிர்ந்தவள் ஏக்கமாக நோக்கவும். “உறவு முறையெல்லாம். அலுவலகத்துக்குள் வரக் கூடாது, அப்புறம் வேலை நடக்காது, அதனால். பெயர் சொல்லியே குறிப்பிடு,” என்று தோழியிடம் சொல்லிவிட்டு. வண்ணமதியைப் பார்த்தாள் பெரியவள்,

“அந்த அக்கா சொன்னது கேட்டதா? என்னென்ன வேலைகள். எப்போது முடிக்க வேண்டும். கொடுக்க வேண்டும். போன்ற வேலைகளைக் குறித்து வைத்துக்கொண்டு செய்ய முடியுமா? அதைப் பொறுப்பாகச் செய்தாலே. எங்களுக்குப் போதும்,” என்றாள். தொடர்ந்து,

“நீ என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்க்கா, ஆனால். முதலில் கற்றுக் கொடுத்து விடுக்கா, அப்படியே “கப்”பென்று உடும்பாய்ப் பிடித்துக் கொள்கிறேன்,” என்றாள் தங்கை பதவிசாக,

இப்போது உள்ளே வந்து உட்கார்ந்துவிட்டது போலவா என்று நினைத்தாள் சுப்ரியா, தன்னை மீறி வந்த முறுவலை அடக்கிக்கொண்டு. “சரி. சரி, முதலில். பயோடேட்டாவை முடித்துவிட்டு வா, கற்றுத் தருகி ... யாருக்கு நேரம் இருக்கிறதோ. அவர்கள் கற்றுக் கொடுப்போம்,” என்றாள்,

“ரைட், முதல் வேலையாக. இந்த எண்ணுடன் பேசி. “வால் ஹேங்கிங்” பத்தும் தயாராகிவிட்டதா என்று கேள், பத்து மணிக்கே. இதை முடித்துத் தந்திருக்க வேண்டும்! இன்னும். இதில் எங்கள் வேலையும் இருப்பதால். எவ்வளவு சீக்கிரமாகத் தருகிறார்களோ. அவ்வளவுக்கு நல்லது, ஃபோன் பண்ணு,” என்றாள் பிரதிமா,

“இதோக்கா,” என்று எழுந்தவள். சற்றுத் தயங்கினாள்,

சுப்ரியா பேசாமலே பார்த்துக் கொண்டிருக்கவும். மேஜையில்

இருந்த கருவியை எடுத்து. “ஹலோ. “ஸ்பெஷல்” நிறுவனத்தில் இருந்து. அதில் புதிதாக வேலையில் சேர்ந்திருக்கும் வண்ணமதி பேசுகிறேன்,” என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு. பிரதிமா சொன்ன வேலையைச் செய்தாள்,

பேசி முடித்துவிட்டு. “இன்னும் ஒரு மணி நேரத்தில் அனுப்புகிறார்களாம்,” என்று விவரம் சொன்னாள்,

“குட், இந்த வேலை. இனி உன்னது,” என்று. என்றாள் சுப்ரியா,

விருப்பத்துடன் வந்ததால் விரைவிலேயே வேலையைக் கற்றுக்கொண்டு. வாயிலை அடுத்து. வரவேற்பு என்ற குறிப்புப் பலகை வைத்த மேஜையில் அமர்ந்து. சின்னவளும் பணியைத் தொடங்கினாள்,

இந்த நிலையில்தான். “ஸ்பெஷல்” நிறுவனம் அன்றுவரை அடைந்திராத ஒரு பெரிய “ஆர்டரு”டன். யுகேந்திரன். அந்த அலுவலகத்துள் புகுந்தான்,

# அத்தியாயம் - 4

“ஸ்பெஷல்” என்ற அழகான பெயர்ப் பலகையைப் பார்த்துவிட்டு. உள்ளே சென்ற யுகேந்திரனுக்கு. அந்தக் குட்டி அலுவலகத்தைப் பார்த்ததும் உள்ளூர ஏளனமாய் ஒரு சிரிப்பு வந்தது,

இந்தக் குட்டியூண்டு அலுவலகத்தை வைத்துக்கொண்டா. இந்த ஆட்டம் போடுகிறாள்?! அவன் இதை ஒரே மிதியில் நசுக்கிவிட மாட்டானா?

ஒருவேளை. இந்தக் குட்டி அலுவலகத்தைக் குபேரபுரி ஆக்கிவிடும் ஆவலில். ஆடுகிற ஆட்டமோ? சிவாவின் அலுவலகத்துக்கு வேண்டிய பரிசுப் பொருட்களை. இவளிடம்தானே வாங்குவதாம்! பெரிய அளவில் எலக்ட்ரானிக் பொருட்கள் விற்பனை நிறுவனம், விலை அதிகமான பொருட்களைக் கூடப் பரிசாகக் கொடுக்கலாம்!

அதற்காகத்தான் அவனைப் பிடித்தாளா? இப்போது. அவன் தந்ததை விடவும் பெரிய அளவில் “ஆர்டர்” கொடுத்தால். அவனிடம் சாய்வாளா?

பார்க்கத்தானே. போகிறான்!

ஆனால் எப்படியும் அவள் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடப் போவது நிச்சயம்! ஓட்டித்தான் ஆக வேண்டும்!

ஆனால். இந்தக் குட்டியூண்டு இடத்தையும் அலங்கரித்திருக்கும் விதத்தைப் பாராட்டத்தான் வேண்டும், மெத்தென்ற கம்பளம், பொருத்தமான சோஃபா கவர்... ,

“மூலோ.சார் ... “ என்ற குரல். சற்று உரக்கக் கேட்கவும். யுகேந்திரன் தன் யோசனையில் இருந்து மீண்டான்,

வரவேற்பில் இருந்த பெண். ஒரு தரத்துக்கும் மேலாகவே அவனை அழைத்திருக்க வேண்டும் என்பது புரிய. “ஒரே ஆச்சரியம்!” என்றான் சற்று அதிகப்படியான வியப்பைக் காட்டி, “பெசக் கூட முடியாத அளவுக்கு!”

“எ , என்ன ஆச்சரியம்?”

“ஊரில். இந்த நிறுவனத்தைப் பற்றி. ரொம்பப் பிரமாதமாகப் பேசுகிறார்கள், அலுவலகத்தைப் பார்த்தால். மூன்றாவது வாடிக்கையாளர் வந்தால் வெளியேதான் நிற்க நேரிடும் போல? அல்லது. நான்தான் தப்பான விலாசத்துக்கு வந்துவிட்டேனா? இது.

“ஸ்பெஷல்” நிறுவனம்தானே? “ என்று உரிய வார்த்தைகளைச் சொல்லாமலே. லேசாக மட்டம் தட்டிப் பேசினான் அவன்,

“சா ...ர். எங்கள்  பணியிடம் வேறே, இது சும்மா ஆர்டர் வாங்கவும். முடித்ததைக் கொடுக்கவும் மட்டும்தான், பெரிய மில்லுக்குச் சிறிய “ஷோ ரூம்” வைத்திருப்பது போல! இப்போது. நீங்கள் எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று. அதைச் சொல்லுங்கள், முதல் தடவை வந்திருப்பதால். ஆர்டர் கொடுப்பது பற்றிப் பேசத்தான் வந்திருக்க வேண்டும், நீங்கள் யார். உங்களுக்கு என்ன தேவை என்று சொன்னால். எங்கள் பாசுக்குத் தெரிவிக்கிறேன்,” என்று கறார்க் குரலில் கூறினாள் வண்ணமதி,

ரோஷம் வந்துவிட்டது போல! எவ்வளவுக்குக் கீழே இறங்கவும் தயாராக இருக்கும் முதலாளி பற்றி முழுதாகத் தெரியாததால் வந்த ரோஷம்! அந்த முதலாளியின் அழிவுதான் தேவை என்று மனதில் எண்ணிக் கொண்டான் யுகேந்திரன்,

தன் கார்டை எடுத்து. அவள் முன்னே போட்டுவிட்டு. அங்கே கிடந்த இருக்கை ஒன்றில். ஸ்டைலாக உட்கார்ந்தான், “பெரிய ஆர்டர், எங்கள் பெரிய வளர்ச்சிக்கு உதவியிருக்கும் வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும்.  நினைவில் நிற்கும்படி. ஒரு பரிசு கொடுக்க இருக்கிறோம், அந்தப் பரிசு பற்றிப் பேச வேண்டும்,” என்றான்,

“ஓஹோ!” என்றுவிட்டு. வண்ணமதி. தமக்கையை செல்லில் தொடர்பு கொண்டாள்,

“வந்து கொண்டிருக்கிறேன், ஐந்தே நிமிஷத்து தூரம், ஒருவேளை போக்குவரத்து நெரிசலில் தாமதம் ஆகலாம், எனவே. நீ பிரதிமாவிடமும் சொல்லு, ஒர்க்ஷாப்பில்தான் இருப்பாள்,” என்றாள் அவள்,

சுப்ரியா சொன்னதைச் செய்துவிட்டு. “ஐந்து நிமிஷங்களில் வந்துவிடுவார்கள்,” என்று சொல்லி. யுகேந்திரன் முன்னே சில பத்திரிகைகளை வைத்துவிட்டு. வண்ணமதி தன் வேலையைத் தொடர்ந்தாள்,

ஆனால். பிரதிமா வருமுன் சுப்ரியாவே அலுவலகத்தை அடைந்துவிட்டாள்,

அலுவலகத்துள்ளே வரும்போதே. யுகேந்திரனிடம் புன்னகையோடு ஒரு “ஹ்லோ சொல்லி. மொப்பெட்டின் சாவியை வண்ணமதியிடம் கொடுத்து. “எல்லாவற்றையும் ஒர்க்ஷாப்பில் கொடுத்து. சரிபார்க்கச் சொல்லிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு வா,”

என்றபடியே. ஹெல்மெட்டை உரிய இடத்தில் வைத்து. மறுபடியும். யுகேந்திரனிடம் திரும்பினாள்,

வண்ணமதி காலி செய்த இடத்தில் அமர்ந்து. "சொல்லுங்கள் சார், உங்கள் தேவை என்ன மாதிரியானது?" என்று வினவினாள்,

அவசரப்படவே இல்லை, ஆனால். ஒரு வினாடியைக் கூட வீணாக்காமல். சுப்ரியா செயல்பட்ட விதம். யுகேந்திரனைக் கவர்ந்தது,

அவனது கடைச் சிப்பந்திகள் இந்த மாதிரி செயல்பட்டால். குறைந்த பட்சமாய் பத்து சதவீதம் ஆள் குறைப்புச் செய்யலாம்! ஆனால். அவன். அவளைப் பாராட்டுவதற்காக வரவில்லையே!

அவனது கார்டைக் காட்டி. தங்கள் டிப்பார்ட்மென்டல் ஸ்டோருக்காக ஒரு பெரிய ஆர்டர் கொடுக்க வந்ததாகச் சொன்னான் அவன்,

"ம்ம்ம். பெரிய நிறுவனம்தான், மூன்றாவது திறக்கப் போகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன், வாழ்த்துக்கள், ஆனால். எங்கள் தயாரிப்புகள். ஆர்டருக்கு ஏற்ப. தனிப்படச் செய்பவை, இன்னோர் இடத்தில் வைத்து விற்பனை செய்யக் கொடுப்பதற்கு அல்ல," என்றாள் சுப்ரியா,

"நானும் அப்படி. கடையின் விற்பனைப் பொருளாக. உங்கள் தயாரிப்புகளைக் கேட்கவில்லை. மிஸ் "

"சுப்ரியா," என்றாள் அவள் சுருக்கமாக,

"ரைட். சுப்ரியா, இதோ. மாதிரிக்காக வைத்திருக்கிறீர்களே ... " என்று. அங்கே காட்சிக்காக வைத்திருந்தவற்றுள் ஒன்றைக் காட்டி. "இது போன்ற சணல் பைகளை. கடையின் வாடிக்கையாளர்களுக்கு. இலவசமாகக் கொர்டுக்கத்தான் கேட்கிறேன்," என்றான் அவன்,

"தப்பாக நினைக்க வேண்டாம், இது. வெறும். சாதாரணச் சணல் பைகள் அல்ல, வெற்றுப் பைகளை. நீங்கள் எங்கே வேண்டுமானாலும். குறைவான விலைக்கே வாங்கலாம், ஆனால். நாங்கள் அதில். உங்கள் நிறுவனத்துக்கு ஏற்றபடி. வேலைப்பாடு செய்து தரும்போது. அவைகளின் விலை பல மடங்கு ஆகிவிடும், வேலைப்பாட்டுக்குத் தக்கபடி. நூறு. நூற்றைம்பது என்று ஆகும், உட்கார்ந்து கணக்குப் போட்டுப் பார்த்தால். இனாமாகக் கொடுப்பதற்குக் கட்டி வராது, " என்றாள் சுப்ரியா,

யுகேந்திரனுக்கும் உள்ளூர. இந்த ஐடியா. அவ்வளவு சரி வராது. என்பதுதான்,

ஆனால். அவன் எண்ணி வந்த காரியம் வேறு, அதற்கு. சுப்ரியா இந்த ஆர்டரை ஏற்றுச் செய்வது அவசியம்,

எனவே. "அப்படி. ஐந்துக்கும் பத்துக்கும் வாங்குகிறவர்களுக்கு எல்லாம். இந்தப் பைகளைக் கொடுப்பேனா. என்ன? நல்ல பெரிய தொகைக்கு வாங்குகிறவர்களுக்கு மட்டும்தான். பையில் போட்டுக் கொடுப்பேன், அப்படிப் பெரிய தொகைக்கு விற்கும்போது. வருகிற லாபத்தில். பையின் விலையைச் சமன் செய்து விடுவேன்," என்றான் அவன்,

ஒரு வினாடித் தாமதத்தின் பின். லேசாகத் தோளைக்குலுக்கி. "உங்கள் விருப்பம்," என்றாள்சுப்ரியா,

மெய்தானே? அது. அவன் பணம்,. அதைக குப்பையிலே போடுவதானாலும். அன்றிக் கூட்டிப் பெருக்கிப் பன்மடங்கு ஆக்குவது என்றாலும். அது அவனது சொந்த விருப்பம்தானே? சுய லாபம் கருதாமல். சொல்வதைச் சொல்லியாயிற்று, அதற்கு மேல். அவனது விருப்பம் போல. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்!

ஆனால். அவளது அந்த இரண்டே வார்த்தைகளில். அவன் பார்வை மாறியது, அந்த வினாடியில் அவளை இழுத்து அணைத்து முத்தமிடும் விருப்பம் . அவனுள் பேரலையாக எழுந்ததைச் சொன்னால். இவள் என்ன செய்வாள்? ஒழுங்கானவள் என்றால். கன்னத்தில் ஓங்கி ஒன்று. வீங்கக் கொடுப்பாள், அன்றி ... ,சிவாவை விட அதிகப் பணம் என்று தெரிந்தால். பிரமாதமாய் ஒத்துழைப்பாளோ?

சேச்சே. என்ன கிறுக்கு புத்தி! ,இவள் எப்படிப்பட்டவள் என்று தெரிந்தும். அப்படித் தோன்றியதே எவ்வளவு முட்டாள்த்தனம்! இந்த "உங்கள் விருப்பமே" உள்ளர்த்தம் வைத்துச் சொல்லப்பட்டதோ. என்னவோ?

இந்த மாதிரிப் பேச்சில் மயங்கி. குடும்பத்தில் ஒரு மடையன் இவள் பின்னே சுற்றுவது போதும்!

அவன் சுதாரித்துக்கொள்ள அவகாசம் அளிப்பது போன்று. உள்ளே வந்த இன்னொரு பெண்ணை." வா. பிரதிமா," என்று வரவேற்றாள் சுப்ரியா,

சுருக்கமான அறிமுகத்தின் பின். "உங்களுக்கு எத்தனை பைகள். எப்போது தேவைப்படும்?" என்று வினவினாள்,

தன் தேவையைச் சொல்லி. "முன்பணம் எவ்வளவு?" என்று.

யுகேந்திரன் கேட்டான்,

தூண்டிலைப் போட்டாயிற்று. இப்போது மீன் மாட்டப் போகிறது என்று. அவன் காதைத் தீட்டி வைத்துக்கொண்டு காத்திருந்தால். சுப்ரியா வேறு கதை படித்தாள்,

“சார். முதல் தவணையாக நீங்கள் கேட்பதே ஆயிரம் பைகள், ஒரு பை எண்பது ரூபாய்க் கணக்கில். எண்பதாயிரம் ஆகும், எண்பது சதவீதத்தை முன்பணமாகத் தந்தால். நாங்கள் உடனே வேலையைத் தொடங்கி விடுவோம்,” என்றாள் கறார்க் குரலில்,

அவளது கணக்கிலும். குரலிலும் ஆச்சரியப்பட்டது. யுகேந்திரன் மட்டுமல்ல, பிரதிமாவுக்குமே. அது திகைப்பாகத்தான் இருந்தது,

தோழியை ஒரு பார்வை பார்த்துவிட்டு. அவள் சும்மா இருந்துவிட. யுகேந்திரன் பேசினான், “இது அதிகம் இல்லையா?” என்று வினவினான்,

“எதைச் சொல்லுகிறீர்கள்? விலையையா? முன் பணத்தையா?”

“வேலைப்பாட்டுக்குத் தக்கவாறு விலை என்று முதலிலேயே சொன்னீர்கள், அது உங்கள் சரக்கு,. உங்கள் விலை, ஆகையால். அது பற்றி நான் பேசுவதற்கில்லை, ஆனால். பொதுவாக முன்பணம் இவ்வளவு கேட்பதில்லையே!”

““பொதுவாக .இவ்வளவு கேட்பது இல்லைதான்,” என்று சுப்ரியாவும் ஒத்துக் கொண்டாள், “ஆனால் பாருங்கள். மிஸ்டர் யுகேந்திரன். உங்களது பெரிய ஆர்டர், ஏதோ காரணத்தால். திடுமென நீங்கள் வேண்டாம் என்றுவிட்டால். பொருட்கள் கையில் தங்குவதோடு. எங்களுக்குப் பெருத்த நஷ்டமும் ஆகும், எங்களது இந்த சின்ன ஷோரூமில். அத்தனை பைகளையும் அடுக்கிவைக்கும்போது. இட நெருக்கடியும் ஏற்படும், அதிகப் பணம் கொடுக்கிறவருக்கு. தன் சாமானை விரைந்து எடுத்துப் பொய்விடத் தோன்றும் என்பது. சைக்காலஜி, “ என்று விளக்கமும் சொன்னாள்,

யுகேந்திரன் அவளை விசித்திரமாகப் பார்த்தபோது. அவனது செல் ஒலி எழுப்பியது, “ஒன் மினிட்,” என்று எழுந்து வெளியே சென்று பேசினான் அவன்,

அந்த அவகாசத்தில். பிரதிமா கேட்டாள், “என்ன சுபி. பெரிய ஆர்டர், லாபமே நிறைய வருமே, இந்தக் கண்டிப்பால். கை நழுவி விடாதா?” என்றாள்,

“முன்னேப் பின்னே தெரியாத ஒருவர். நம்மைத் தேடி வந்து ஆர்டர்

கொடுத்தால். யோசிக்க வேண்டாமா. பிரதி? அதுவும். யார் சொல்லி வந்தார் என்பது இல்லை, நம் விரோதிகளின் திட்டமாகக் கூட இருக்கலாம், நமக்கு யார் விரோதி என்று கேட்காதேப்பா, இதே தொழிலில் உயர விரும்பும் யாராவது கூட இருக்கலாம், எதற்கும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லதுதானே?”

கேட்டுக்கொண்டே உள்ளே வந்த யுகேந்திரனுக்கு. உள்ளூர “யப்பா” என்று வியப்பாக இருந்தது,

உண்மையில். அங்கே வரும்போதே. அதே திட்டம்தான் அவனுக்கு, பெயருக்கு ஒரு பத்தாயிரம் ரூபாயை முன்பணமாகக் கொடுத்துவிட்டுப் போய்விட்டால். அந்தப் பெண்ணுக்குப் பெரிய நஷ்டமாகும் என்ற எண்ணம், கூடவே. அந்தக் குட்டி அலுவலகத்தைப் பார்த்ததும். கைச் செலவு பண்ணித் தயாரித்த பொருள். விலை போகாமல் அந்தச் சின்ன இடத்தை அடைத்துக்கொண்டு இருப்பதைப் பார்த்துப் பார்த்து. மனது கஷ்டப்படட்டும் என்றும் எண்ணினான்,

ஆனால் அது போல நடக்கக் கூடும் என்று யோசித்து. உரிய கவனத்தோடு சுப்ரியா இருப்பாள் என்று. அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

அத்தோடு. சுப்ரியா முன் யோசனையோடு செயல்பட்ட விதத்தை. மெச்சிக் கொள்ளத்தான் அவனுக்குத் தோன்றியது, ஐயோ நம் திட்டம் பலிக்கவில்லையே என்று வருத்தம் கொஞ்சமும் ஏற்படவில்லை!

அதற்காக. அவளை அழிக்கும் திட்டத்தை விட்டுவிட்டான் என்று இல்லை,

ஆனால். அதற்கு இது ஒன்றுதானா வழி? முன்னேற விரும்பும் ஒருவரை வீழ்த்த எத்தனையோ கிடைக்கும்! ஆனால். வீழ்த்துவதை விட. விரட்டுவது மேலோ என்று. அவனுக்கு இப்போது தோன்றியது,

எனவே. சுப்ரியா கேட்ட பணத்தைச் செக் எழுதிக் கொடுத்து. முதல்படியாகத் தன் மீது நம்பகத் தன்மையை உருவாக்கினான்,

அடுத்து. பைகளின் மீது அமைக்க வேண்டிய அலங்கார வடிவமைப்பு பற்றி எப்போது பேசுவது என்று கேட்டான்,

இப்போது சுப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது, பொதுவாக. அவள்தான் துருவித் துருவிக் கேள்வி மேல் கேள்வி கேட்டு. கிடைத்த விவரங்களைப் பிரதிமாவோடு கலந்து ஆராய்ந்து. இருவருமாக டிசைனை உருவாக்குவார்கள், வாடிக்கையாளரை. அது திருப்திப் படுத்தாமல் இருந்ததே கிடையாது, இப்போது. இவனே கேட்பதால்.

வேலை இலகுவாக இருக்கும் என்று நினைத்தாள்,

“இது. உங்கள் மூன்றாவது ஸ்டோரின் திறப்பு விழாவுக்கான பரிசு என்றீர்கள், அந்த இடம். மற்ற சுப்பர்மார்க்கெட்டுகளில் பெயர் எழுத்துக்களை அமைத்திருக்கும் விதம். எல்லாம் நேரில் பார்த்து. முடிவு செய்ய வேண்டும். மிஸ்டர் யுகேந்திரன், அனேகமாக. ஓரிரு தினங்களில் பார்வையிடுவதை முடித்து விடுவேன், மாதிரி வடிவமைப்பை முடித்துவிட்டுத் தெரிவிக்கிறேன், உங்களுக்கு ஒப்புதலாக இருந்தால். வேலையைத் தொடங்கிவிடுவோம்,” என்றாள் அவள்,

ஆனால். அவனே வந்து அழைத்துப் போவதாகச் சொன்னபோது. அதில் அவளுக்கு அவ்வளவாக ஒப்புதல் இல்லை,

“உங்களதோடு சேர்த்து. நான் வேறு சில வேலைகளையும் பார்ப்பேன், உங்கள் வண்டியில் வந்தால். அது இயலாது, ஆனால். உதவ முன்வந்ததற்கு நன்றி,” என்று. சுப்ரியா நாகரீகமாக மறுத்தாள்,

தன்னை மீறி. “ஏன்? யாராவது முக்கியமான நபரைச் சந்திக்க வேண்டுமோ?” என்று. ஓர் ஏளனப் பார்வையோடு கேட்டுவிட்டான். அவன்,

புருவம் உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவள், “ஒருவர் என்ன. உங்களைப் போலப் பல பேரைச் சந்திக்க வேண்டியிருக்கும். யுகேந்திரன், முக்காடு போட்டு. மூலையில் உட்கார்ந்துகொண்டு. எந்தத் தொழிலையும் நடத்த முடியாது என்பது. பல்பொருள் அங்காடியை வெற்றிகரமாக நடத்தும் உங்களுக்கு. நன்றாகத் தெரிந்திருக்குமே!” என்று. அமர்ந்த குரலில் அவள் கூறியபோது. என்னவோ தப்பு செய்த மாதிரி. அவனுக்குத்தான் முகன் சற்றுக் கன்றிப் போயிற்று,

ஆனால். திருமணமான ஒருவனைத் தப்பான முறையில் சுப்ரியா சந்திப்பது. அவன் நன்கறிந்த விஷயம், அப்படியிருக்கத் தப்பே அறியாதவள் போல அவள்

தலை நிமிர்ந்து பேச. அவன் குன்றிப் போவானேன்?

கேட்டால். “என் சொந்த விஷயம் பேச. நீ யார்” என்று. அவள் திருப்பிக் கேட்பாள், அந்தத் திண்ணக்கம் இல்லாமலா. இந்தத் தப்பைச் செய்கிறாள்?

அது மட்டுமல்ல, இவள் மூலம் சிவானந்தனுக்கு விஷயம் இப்போது போவதும் நல்லதல்ல, அதற்கு இடமே கொடாமல். இவளை விரட்ட வேண்டும்!

உதடுகளில் புன்னகையைப் பூசிக்கொண்டு. “ரொம்பச் சரியாகச்

சொன்னீர்கள். சுப்ரியா, அதிலும். செய்யும் தொழிலுக்கு உண்மையாக உழைப்பதானால். நின்று. அமர்ந்து பேச வேண்டியவர்களின் பட்டியல். நீண்டுகொண்டேதானே போகிறது, ரைட்! எங்கள் இடத்துக்கு நீங்கள் வரும் நேரம் பற்றிச் சொன்னீர்களானால். நானும் அங்கே இருக்க முயற்சிப்பேன், சில முக்கியமான விவரங்களை. நானே சொல்வது நல்லது," என்றான் இணக்கமாகவே,

அதன்படி. மறுநாள் காலையிலேயே. இருவரும் சந்தித்தார்கள்,

திறக்கப்பட இருக்கும் கட்டிடத்தின் தோற்றம். சுற்று வட்டாரம் பற்றி. சுப்ரியா ஆராய விரும்பினாள்,

அதற்கு ஏற்ற இடங்களை யுகேந்திரன் காட்டவும். அவன் சொன்ன "முக்கியமான ஆள்" பற்றி. சுப்ரியாவுக்கு இருந்த கோபம் அடியோடு மறைந்து போனது,

"யுகேந்திரன் காட்டிய இடத்திலிருந்து பார்க்கும்போது. வரப் போகும் சுப்பர் மார்க்கெட்டின் தோற்றம் பிரமாதம். பிரதி, ஒரு பக்கம். சர்ச்சின் ஊசிக் கோபுரம், மறுபுறம்

ஒரு கோயில் கோபுரம் தெரிகிறது! இரண்டையும் கட்டிடத்தின் பின்னே இரு புறமும் லேசாகத் தெரியும்படி. அமைத்தோமானால். ரொம்பப் பிரமாதமாக வரும் என்று நினைக்கிறேன், "சுரபி" என்ற பெயரும். நீலத்தில் மஞ்சளாக எடுப்பாக இருக்கிறது,

முன் பக்கமாக. அங்கே விற்பனை ஆகும் பொருட்களில் சிலதை எடுப்பாகக் காட்டி. இன்னும் நிறையப் பொருட்கள் இருப்பதை சிறு வரிவடிவாகக் காட்டி விடலாம்,நீ என்ன சொல்கிறாய்?" என்று உற்சாகமாகத் திட்டமிடலானாள்,

"யார் அக்கா? நேற்று நெட்டையாக வந்தாரே. அவருக்காகவா? ஓஹோ! ஆனால். அவர். நம் இடத்தைக் குட்டியாக இருப்பதாகக் கேலியாகச் சொன்னாரக்கா, எனக்குமே. அவர் நிற்கும்போது. இந்த இடமே சின்னதாகிவிட்ட மாதிரி பிரமையாக இருந்தது! நாம் வேண்டுமானால். இன்னும் பெரிய இடம் பார்த்தால் என்னக்கா?" என்று குரலில் ரோஷத்துடன் மாதவி கேட்டாள்,

"ஊகூம், கொஞ்சமும் சரி வராதும்மா! பார். பின்னாலே ஷெட்டிலே ஒர்க்ஷாப் இருக்கிறது, ரொம்பக் குறைவான வாடகையில், இது போலே வேறு எங்கே கிடைக்கும்? ஆளாளுக்கு ஏதாவது சொல்வார்கள்தான், அதையெல்லாம் பொருட்படுத்தினால். அப்பாவும் பிள்ளையும் கழுதையைச் சுமந்த கதைதான் ஆகும்," என்றாள் தமக்கை,

“ஐ! இந்தக் கதை எனக்கும் தெரியும் அக்கா, அம்மா சொல்லியிருக்கிறார்கள், தெரவிலே போகிறவர்கள். வருகிறவர்கள் பேசியதைக்கேட்டு. அப்பாவும் பிள்ளையும் தனித் தனியாகவும் சேர்ந்தும் கழுதை மேல் உட்கார்ந்துவிட்டு. வாயில்லா ஜிவனைக் கொடுமைப் படுத்துகிறார்களே. அதற்குப் பதிலாக கழுதையை இவர்கள் இருவரும் சுமந்தால் என்ன என்று கடைசியாக இன்னோர் ஆள் சொன்னதைக் கேட்டு. இருவருமாகக் கழுதையைச் சுமந்து சென்ற கதைதானே? நீ சொல்வது சரிதான், அந்த ஆள் சொன்னதை. மனதில் இருந்து தூரத் தூக்கிப் போட்டுவிட்டேன்” என்று வண்ணமதி அபிநயத்தோடு சொன்ன தினுசில். மூத்த இரு பெண்களுமே நகைத்தனர்,

வரவேற்புப் பகுதியைச் சற்றே சிறிதாக்கி. தடுப்பு ஒன்றை வைத்துக்கொண்டு. தோழிகள் இருவரும் யுகேந்திரனுக்கான வேலையைத் தொடங்கினர்,

வண்ணங்களின் கலவை பற்றிக் கலந்து பேசும்போதே. சுரபியின் முதல் இரு அங்காடிகளையும் பார்த்துவிட்டு வேலையைத் தொடங்குவது மேல் என்று சுப்ரியாவுக்குத் தோன்றியது,

முதல் நாள் போலவே. இவைகளைப் பற்றியும் முக்கியக் குறிப்புகள் எதையேனும்  யுகேந்திரன் தருவானோ என்று எண்ணி. அவனிடம் கேட்டாள்,

மனிதனுக்கு வேறு வேலையே கிடையாது போலும், எப்போது கேட்டாலும். மறுப்பின்றி வருவதாகச் சொல்கிறானே என்று சுப்ரியா ஏளனமாக நினைக்கும்போதே. அவன் தொடர்ந்து பேசினான்,

“பகல் இரண்டு மணிக்கு மேல் போலாம். சுப்ரியா, இப்போது. வேறு வேலை இருக்கிறது, மதியம் ஒரு தொழில் முறை விருந்து, அதைக் கொஞ்சம் சீக்கிரமாக முடித்துக்கொண்டு வந்து விடுகிறேன், உன் இடத்துப் பக்கம்தான், காரில் வருவதானாலும் காட்டிமுடித்ததும் கொண்டு விட்டுவிடுகிறேன், ஆனால். அந்த முடிவு. உன் விருப்பம்,” என்றான்,

அவனைப் பற்றித் தவறாக நினைத்ததற்குத் தனக்குத் தானே குட்டு வைத்துக்கொண்டு. “சரி. சார்,” என்று ஒப்பினாள் அவள்,

“ரைட், ஒன்று முப்பது!” என்று அவன் பேச்சை முடித்த பிறகே. “உன் இடம். உன் விருப்பம்” என்று யுகேந்திரன் ஒருமையில் பேசியது. அவளுக்கு உறைத்தது,

ஆனால். இன்றைய காலகட்டத்தில். இந்த ஒருமைப் பேச்சுகள் சகஜம்தானே என்றும் தோன்றவே. அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவது மேல் என்று. சுப்ரியா  முடிவு செய்தாள்,

அவனோடு காரில் செல்லவும். சுப்ரியா மறுக்கவில்லை, பிரதிமாவின் ஸ்கூட்டி சர்வீசுக்குப் போயிருந்ததால். அவளது வண்டி. அலுவலகத்தில் நிற்க வேண்டியிருந்தது, அங்காடியை இருவருமாகச் சேர்ந்து சுற்றிப் பார்த்துவிட்டு. அவனது அடுத்த இடத்துக்குச் செல்வதற்கு. ஆட்டோவை நாடிச் செல்வது. அவளுக்கே அசட்டுத்தனமாகத் தோன்றியது,

முதலில் தொடங்கிய “சுரபி”க்குச் சென்றபோது. அங்கே யுகேந்திரனுடைய தந்தையை. சுப்ரியா சந்தித்தாள்,

பந்தா இல்லாமல் பேசிப் பழகியதாலோ என்னவோ. அவரை. அவளுக்குப் பிடித்துப் போயிற்று,

ஆனால். அந்த சந்திப்பு. பிற்பாடு அவளது வாழ்க்கையில். நல்லதா. கெட்டதா என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத ஒரு முக்கியமான திருப்பத்தை உண்டு பண்ணப் போகிறது என்று அப்போது அவளுக்குத் தெரியாது!

# அத்தியாயம் -5

இரண்டாவதாகத் தொடங்கிய “சுரபி”க்கு. சுப்ரியாவை முதலில் அழைத்துச் சென்றான் யுகேந்திரன்

அக்கம் பக்கம் பார்த்த சுப்ரியாவுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது,

காரணத்தை ஊகித்து. “இதைத் தொடங்கும்போது. பழைய கால வீடு ஒன்று அடுத்து இருந்தது, இப்போது அடுக்கு மாடிக் கட்டிடம் அதை விழுங்கிவிட்டது,” என்று. அந்த சுரபியின் திறப்பு விழாப் படத்தைக் காட்டினான்,

அரண்மனை மாதிரிப் பழைய பக்கத்து வீடு. மிக அழகாகவே இருந்தது, முன் புறம் செய்குளமும் அதன் நடுவில் பீடத்தில் கண்ணன் சிலையும் கண்ணைப் பறித்தன,

இருவருமாக முதல் “சுரபி”யை நோக்கிச் செல்லும்போது. அந்த வீடு பற்றிய பேச்சு வந்தது, “முன்பெல்லாம் அழகான கண்ணன் சிலை வீட்டுக்கு அடுத்து இருக்கிறது என்று அடையாளம் சொல்வேன், பிறகு ஒரு நாள் புல்டோசர் வந்து எல்லாவற்றையும் இடித்து அழித்தபோது. வருத்தமாக இருந்தது, மகன் கைக்கு வீடு வந்ததுமே. நல்ல விலை வரவும். விற்றுவிட்டான், அவனையும் குற்றம் சொல்வதற்கு இல்லை, இன்றைய நிலையில். அந்த வீடு. தோட்டத்தைப் பராமரிப்பதற்கே ரொம்பச் செலவாகும், சள்ளை பிடித்த வேலையும் கூட, மனைவிக்கும் இங்கே இருக்கப் பிடிக்கவில்லை, குடும்பத்துக்குள் கலகம் வர. பெரும் பணமும் கிடைக்கும் என்றபோது. வாரிசு தலையாட்டிவிட்டான், எப்படியும். குடும்பம் என்கிற அமைப்புதானே. மற்ற எதையும் விட உயர்வானது? “ என்று. வாழைப்பழத்துக்குள் ஊசியை நுழைத்துக் கேட்டான் யுகேந்திரன்,

அவனது வாழைப்பழம் ஊசியைக் கண்டுகொள்ளவே இல்லாமல். அவள் வேறு பேசினாள்,

“இருந்தாலும் ... சின்ன வயது நினைவுகள். நம் வீடு என்று பெருமையாக எண்ணி மகிழ்ந்தது ...எப்படியும் அந்த இழப்பு இருக்கும்தானே?”

“உன் வீடு பற்றி. இது போல ஏக்கங்களெல்லாம். உனக்குத் தோன்றுவது உண்டா. சுப்ரியா? இங்கே ஏதோ விடுதியில் தங்கியிருப்பதாகக் கேள்விப் பட்டேனே! பெற்றோர் எங்கே இருக்கிறார்கள்?” என்று யுகேந்திரன். இயல்பாக விசாரித்தான்,

பொதுவாக. சுப்ரியா தன் பெற்றோர் பற்றிப் பேசுவதில்லை, அதுவும் தந்தை பற்றி ஒரு வார்த்தை கூட. வாயில் வராது, சொந்த விஷயம் பேசாதே என்று சொல்லாமல் சொல்வது போல. சம்பந்தமே இல்லாத வேறு விஷயம் பேசுவாள்,

ஆனால் ஏனோ. யுகேந்திரனிடம் அப்படி முகத்தில் அடித்தாற்போல வேறு கூற. அவளுக்கு மனம் வரவில்லை,

இயல்பாகக் கேட்கிறான், தொழில் துறையிலும் ஒரு பெரிய தொகையைச் சொன்ன உடனேயே நம்பிக் கொடுத்திருப்பவன்! அது பற்றியே தொணதொணப்பும் இல்லை!

எனவே. சாதாரணமான குரலிலேயே. “பெற்றவர்களை எனக்குத் தெரியாது, என் நினைவில் இருப்பது. தாத்தா பாட்டியின் பண்ணைதான், அங்கேயும். தனியாகத்தான் வளர்ந்தேன், பிரியமாக. கூடவே கண்டிப்பாகத்தான் வளர்த்தார்கள் என்றாலும். தொழில் தொடங்கும் திடம். தைரியம் தந்தது அவர்கள்தான், அதிலும் பாட்டியின் உந்துதல்தான் ரொம்ப அதிகம்! பெண்களுக்குத் தன் காலில் நிற்கத் தெரிய வேண்டும் என்பார்கள், “ என்றாள் அவள், பாட்டியின் பேச்சில். தாயைப் பற்றிய பகுதியை மட்டும் சொல்லாமல் விடுத்தாள்,

அவள் சொன்னதை மட்டும் வைத்து. “கதைகளில் வருகிற பழங்காலப் பாட்டி மாதிரி இல்லாமல். புது “மாடர்ன்” பாட்டி! பரவாயில்லை, அவர்கள். அப்படி இருந்ததால்தானே. நீ வெளியே வந்து தொழில் நடத்துவதும். இப்படி உன்னோடு பேசிக் கொண்டு போவதும் சாத்தியமாகி இருக்கிறது! அடுத்த முறை. அவர்களைப் பார்க்கும்போது. நான் நன்றி சொன்னேன் என்று சொல்லிவிடு,” என்றான் யுகேந்திரன்,

எதற்கோ என்று கேட்க நினைத்துவிட்டு. சுப்ரியா வாயை மூடிக் கொண்டாள், அவன்தான் ஏற்கனவே சொன்னானே. பழங்காலப் பாட்டியாக. அவளைக் கூட்டுப் புழுவாக அடைத்து வைத்திராமல். தொழில் நடத்த வைத்து. அவனோடு பேச வகை செய்ததற்காக என்றானே!

தொழிலோடு நிறுத்தாமல். அவளோடு பேசிக்கொண்டு போவது பற்றி என்ன கூறுவது? அதற்காகவும் ஏன் நன்றி கூறுவது?

அன்று வரை சுப்ரியா அனுபவித்தே அறியாத உணர்வில். கன்னகளில் சூடு பரவுவது புரிந்து. யுகேந்திரன் அதைக் கண்டுவிடாமல். தன் கைகளால் கன்னங்களை மூடிக் கொண்டாள்,

அதையும் கவனித்து. “என்ன?” என்று அவன் கேட்கவும். சுப்ரியா

ஒரு கணம் தடுமாறிப் போனாள், ஆனாலும் உடனே சுதாரித்து. “அ ...அது. இந்த ஏசி ...ஏசி குளிர். கொஞ்சம் அதிகமாக இருக்கிறது போல, என் சருமத்தில். “சுருசுரு” என்கிறது, “ என்று சமாளித்தாள்,

“முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாது?” என்று ஏசி குளிரைக் குறைத்து மிதமாக்கினான் யுகேந்திரன், “ஆனால். குடும்பம் பற்றிய பேச்சை விட்டுவிட்டோமே, கணவன் மனைவி என்று. குடும்பம்தானே முக்கியம்? அந்த அமைப்புக்குள் வேறு எதுவும். வீடோ. வேறு எதுவோ. வர விடுவது. தப்புதானே?” என்று கேட்டான் அவன்,

சுப்ரியாவுக்கு. சிவானந்தனின் நினைவு வந்தது, குடும்பத்துக்குள் கலவரம்.மன வோனை வரும் என்று. எவ்வளவு பெரிய மடத்தனத்தைச் செய்துகொண்டு இருக்கிறான்! பிரச்சினையைச் சிறு செடியாக இருக்கும்போதே வெட்டிப் போடாமல். பெரு மரமாக வளர விட்டுக கொண்டிருக்கிறானே!

அல்லது. அவளுக்குத்தான் புரியவில்லையா?

“இதையெல்லாம். இப்படித்தான் என்று வரையறுக்க முடியாது. யுகேந்திரன். சார், அவரவருக்கு எது முக்கியம் என்று. அவரவர் மனம்தான் சொல்ல வேண்டும், வெளியே இருந்து பார்க்கிறவர்கள் அபிப்பிராயம் சொல்ல முடியாது,” என்றாள் சுப்ரியா,

சற்று நேரம். யுகேந்திரன் எதுவுமே பேசவில்லை,

அப்படியானால். இவள். தான் செய்வது சரி என்றா எண்ணுகிறாள்? எப்படி முடியும்? ரொம்ப நேர்மையானவள் மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு. இவளால் எப்படி. இப்படிப் பேச முடிகிறது?

“ஏன் சொல்ல முடியாது? ஆசை மிகுதியில் செய்யும் தவறுகள். செய்கிறவருக்குத் தெரியாவிட்டாலும். மற்றவர்களுக்குத் தெரியுமல்லவா? சமூக நீதி. நியாயம் தெரிந்தவர்கள். அதை எடுத்துச் சொல்வது. இயல்புதானே?”

“ம்ம்ம் ... “ என்றவளின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன, “யாருக்கும் புத்தி சொல்லாதே,. நம் ஆலோசனையைக் கேட்கிற அளவு. யாரும் முட்டாளில்லை என்று யாரோ பெரிய ஆள் சொன்னதாகப் படித்திருக்கிறேன். சார், “

“அதாவது. உனக்கு நல்லதை ஒருவர் சொன்னால். கேட்க மாட்டாயா?”

“எனக்கு எது நல்லது என்பது. என்னை விட யாருக்கு நன்றாகத்

தெரியும்?”

அடுத்துப் பேசுமுன். முதல் முதலாக அவனுடைய பெரியவர்கள் தொடங்கி நடத்தி வரும் “சுரபி” வந்துவிடவே. அவர்களிடையே இந்தப் பேச்சு நின்றது

“சுரபியைத் தொடங்கியதில் இருந்து. இப்போதும். தலைமை நிறுவனமாக. அதை வைத்து நடத்திக் கொண்டிருந்தவர். யுகேந்திரனுடைய தந்தையே!

யுகேந்திரன். அவளைத் தந்தையிடம் அழைத்துச் சென்று. அறிமுகப்படுத்தி வைத்தான், பழச்சாறு வந்தது, அருந்தியபடியே மூவரும் அமர்ந்து பேசினர்,

எப்போதுமே. வயதில் பெரியவர்கள். சுப்ரியாவிடம் இளகி விடுவது வழக்கம், கேசவமூர்த்தியும் அவளோடு கலகலப்பாகவே பேசினார்,

பை பரிசு கொடுப்பது பற்றிப் பேச்சு வந்தது, “பொதுவாக. நம் சுப்பர்மார்க்கெட்டில் விலை சற்றுக் குறைவாக இருக்கும், பெரிய அளவில் மொத்தமாக வாங்குவதால். அந்த விலை கட்டுபடியும் ஆகும், “சுரபி”யின் வளர்ச்சிக்கு அதுவும் ஒரு காரணம், அப்படிக் கணக்கிட்டால். இந்தப் பை பரிசு. கொஞ்சம் கையைக் கடிக்கத்தான் செய்யும், ஆனால். பல விதங்களில். சீக்கிரமே அது லாபமாகிவிடும் என்கிறான் பையன்,” என்றார் அவர்,

பை பற்றி விவாதம் நடந்திருக்கிறது!

“நானும் அதைச் சொன்னேன். சார், இலவசமாகக் கொடுத்தால். கட்டுபடியாகாது என்று முதலிலேயே உங்கள் மகனிடம் எடுத்துச் சொன்னேன், என்னிடமும். மிஸ்டர் யுகேந்திரன். இதையேதான் கூறினார்,” என்றாள் சுப்ரியா,

“அதையும் சொன்னானம்மா, சொந்த லாபம் கருதாமல் நீ பேசியதைக் கேட்ட பிறகு. எனக்குமே உன்னைச் சந்திக்கும் ஆர்வம் இருந்தது,” என்றார் தந்தை,

இந்தப் புகழாப் புகழ்ச்சியில் லேசாக முகம் சிவக்க. “அப்படி ஒரேயடியாகச் சொல்ல முடியாது. சார், ஒரு விற்பனை நடந்தால். அதில் லாபம் வந்தால்தானே. இன்னொரு தரம் நம்மையே தேடி வருவார்கள்? அதுதான் அடிப்படை,” என்று அவள் சொல்லவும். “அப்படிப் போடு!” என்று. பெரியவர் உரக்கச் சிரித்தார்,

“பேச்சில் மட்டுமில்லாமல். வியாபாரத்திலும் கெட்டிக்காரிதான்

என்று சொல்லு! இந்தத் திறமை எப்படி வந்தது? அப்பா கற்றுக் கொடுத்ததா? அப்பா என்ன செய்கிறார்?” என்று இயல்பாகக் கேட்டார் அவர்,

சுப்ரியாவின் முகம் இறுக. யுகேந்திரன் குறுக்கிட்டான், “சிறு வயதிலிருந்தே பெற்றோர்  இல்லாமல். தாத்தா பாட்டியிடம் வளர்ந்தவள்ப்பா, ஆனால். பாட்டி ரொம்பப் புதுமைவாதி, பெண்கள் தன் காலில் நிற்க வேண்டும் என்று சொல்லியே வளர்த்தார்களாம், “பை ப்ராடக்ட்ஸ் “ மாதிரி. இதில் ஒரு நல்ல உட்கருத்து இருக்கிறது, தெரியுமாப்பா?” என்று இலகுவாகப் பேசினான்,

பெண்களும் சம்பாதிப்பது தவிர. வேறு என்ன? ஆனால். அவனது கேலிக்குரல் சொல்வது வேறு!

மற்ற இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு. “என்ன” என்பது போல. அவனைக் கேள்வியாய் நோக்கினார்கள்,

“வேறென்னப்பா? இரண்டு பெண்கள் நாள் முழுதும் வீட்டில் இருந்தால்தானே. பிரச்சினை? குடுமி பிடி சண்டையெல்லாம் நடப்பது! வீட்டு மருமகளும் வெளியே போய். சம்பாதித்தும் வந்தால். மாமியார் மருமகள் சண்டைக்கே நேரமே இராதே! எவ்வளவு நல்லது என்று எண்ணிப் பாருங்கள்,” என்றான் அவன் கிண்டலாக,

சிரித்தவாறே சுப்ரியாவைப் பார்த்தார் கேசவமூர்த்தி,

ஆனால். கண்கள் பளிச்சிட தலை சரித்துப் பார்த்தாள் அவள், “நானும் யோசித்தேன். சார், ரொம்பவும் யோசித்தேன், இத்தனை பொருட்களோடு. ஒரு கடையை நிர்வாகம் செய்வதே மிகவும் கடினம்,. அடுத்தடுத்து. வரிசையாகத் தொடங்குகிறார்களே என்று நிரம்ப ஆச்சரியம்! ஆனால். அதன் காரணம் இப்போதல்லவா. தெரிகிறது! சங்கிலித் தொடராக. இந்த பல்பொருள் அங்காடிகளைப் பெருக்கிக்கொண்டே போகிற காரணம்!” என்று விழி விரித்து வியந்தாள் அவள்,

யோசனையாகப் பார்த்து. “புரியவில்லையே! மாமியார் மருமகளின் துவந்த  யுத்தம் பற்றியல்லவா. நாம் பேசிக் கொண்டிருந்தோம்?” என்று கேட்டார் பெரியவர்,

“அதையேதான். அப்பா மகன் விஷயமாக மாற்றிப் பேசுகிறாள். அப்பா, ஒரே கடையில் நாம் இருவரும் இருந்தால். நமக்குள் சண்டை வரும் என்று. அந்த வாய்ப்பைக் குறைக்கிறோமாம், அம்மையார் கணிப்பு! மாபெரும் கண்டுபிடிப்பு!” என்று லேசாக உதட்டைப் பிதுக்கிச்

சொன்னான் யுகேந்திரன்,

“சரியாகக் கண்டுபிடித்துவிட்டார். சார், ஒரே ஓர் உறையில் இரண்டு கத்திகளை வைக்க முடியாது என்பார்கள், அதையே இப்படிப் பயன்படுத்திக் கொண்டீர்களே!” என்றாள் அவள் பழைய குரலிலேயே,

“நீயும் நன்றாகத்தான் கண்டுபிடிக்கிறாய்!” என்று மேலும் சிரித்தார் கேசவமூர்த்தி,

யுகேந்திரனுக்கு ரசிக்கவில்லை, “ஆனால். பாசம் பற்றியும் தெரிய வேண்டும்! தப்பே நடந்தாலும். என்னை நீங்களோ. உங்களை நானோ விட்டுக் கொடுப்போமாப்பா? பிறகு. தகராறு எப்படி வரும்?” என்று கேட்டான்,

தந்தைக்கு அப்போதும் சிரிப்புதான் வந்தது, நகை முகத்துடனேயே. “நிச்சயமாகச் சண்டை போட மாட்டோம்தான், ஆனால். இவள் பேச்சும். ஒருவாறு ஒத்துக்கொள்ளப்பட வேண்டியதுதான், நான்கூட. இந்தக் காலத்தில் அப்பா பிள்ளைக்குள் மன வேறுபாடே வராமல் இருக்கிறோமே என்று எண்ணியிருக்கிறேன், காரணத்தைச் சொல்ல ஒரு புத்திசாலிப் பெண்ணின் அறிமுகம் தேவையாக இருந்திருக்கிறது!” என்றார் பாராட்டுதலாக,

அவன் விடாமல். “ஆனால் தொழில் என்றால். வளர்ச்சி என்றும் ஒன்று வேண்டுமே! அது பற்றித் தெரியாத பேச்சுப் போல இல்லை?” என்று. மீண்டும் மட்டம் தட்ட முயன்றான்,

“அது தெரியாமலா. நாங்கள் இரண்டே பேராகச் சிறு முதலீட்டில் தொடங்கி. இரண்டு ...இல்லை. மூன்று பேருக்குச் சம்பளம் கொடுத்துத் தொழில் நடத்துகிறோம்?”

என்று அவனிடமே கேட்டாள் சுப்ரியா,

எப்படியும். தங்கையோடு சேர்த்து மூன்று பேர்தானே?

அவனது ஆர்டர்களில் வேலையைத் தொடங்கும்போது. தாற்காலிகமாக இன்னொருத்தியைக் கூட. அன்றாடக் கூலியில் நியமித்திருக்க வேண்டியிருக்கும், அப்போது. நாலு பேர்!

“அடேயப்பா. மூ ...ன்று பேரா? “ என்று அவன் சிரிக்கவும். ரோஷத்தோடு. “இப்போதைக்கு மூன்றே பேர்தான், ஆனாலும். வேகமான ...நூறு சதவிகிதத்துக்கும் மேலான வளர்ச்சிதானே? இது போலக் கூட வளருவோம்!” என்று சுற்றிலும் கையால் காட்டி. உறுதியான குரலில் சுப்ரியா கூறினாள்,

“நிச்சயமாக!” என்றார்கள். தந்தையும் மகனும் ஒரே குரலாக,

தொடர்ந்து. “ஆனால். மனது தொழிலில் மட்டுமே இருக்க வேண்டும்!” என்றான் யுகேந்திரன்,

பொடி வைத்த பேச்சுப் புரிந்தாலும். தவறாக எடாமல். “அதற்காகத்தான் வேறு எந்தப் பேச்சும் இப்போதைக்குக் கூடாது என்று. நாங்கள் இருவருமே. நானும் என் பார்ட்னர் பிரதியும். வீட்டுப் பெரியவர்களிடம் சொல்லிவிட்டோம்,” என்று. குறிப்பாக விளக்கினாள் அவள்,

வேறு பேச்சு கூடாதாமா? யாருக்குக் காது குத்துகிறாள் என்று உள்ளூர எழுந்த ஆத்திரத்தை அடக்கியவாறு. எங்கோ பார்த்தான். யுகேந்திரன்,

கேசவமூர்த்திக்கும் இந்தப் பேச்சு உவப்பாக இல்லை என்பது. தொடர்ந்த அவரது வாதத்தில் தெரிந்தது,

“அப்படி ஒரேயடியாகச் சொல்ல முடியாது. சுப்ரியா, திருமணம் தொழிலுக்குத் தடங்கல் என்று எண்ணக் கூடாது, பெரிய குடும்பத்தில் இருந்துகொண்டுதான். இவனுக்கே இருபது ஆகும்போதுதான். குடும்பச் சொத்து பிரித்ததில். நான் இந்த “சுரபி”யைத் தொடங்கினேன், என்ன கெட்டுவிட்டது? நல்ல வளர்ச்சிதான், இத்தனைக்கும் எம்எஸ் முடித்துவிட்டுத் தொழிலுக்குள் வருவதாக. யுகேன் வெளி நாட்டுக்கே போய் வந்தான்,

ஆனால். சின்னவர்களான உங்களுக்குத்தான். திருமணம் குடும்பம் எல்லாம். தொழிலுக்கு எதிரி என்கிற அசட்டு மனோபாவமும். அப்படிச் சொல்லிக்கொண்டு தனியே இருப்பது. ஒரு புது நாகரீகம் என்றும் ஆகிவிட்டது,” என்று. சிறு கண்டனம் கலந்த குரலில் கூறி மகனைப் பார்த்தார்,

அவரது பேச்சை வியப்புடன் கேட்டிருந்த சுப்ரியாவுக்கு. அவரது பார்வை சென்ற இடத்தைப் பார்த்ததும், உள்ளூரச் சிரிப்பு வந்துவிட்டது,

புன்னகையுடனேயே. “சார். இப்போது நான் சொன்னது. பெண்களான எங்கள் விஷயம் மட்டும்தான், ஆண்கள் பற்றி அல்லவே அல்ல! “ என்று சொல்லிவிட்டு. அவள் மேலும் நகைக்க. புருவம் சுளித்துப் பார்த்த யுகேந்திரன். தன்னை மீறி முறுவலித்தான்,

கேசவமூர்த்தியும். “சாரிம்மா, முதல் தடவைதான் பார்க்கிறோம்,. அதற்குள் என் வீட்டுக் குறையை உன் மீது காட்டிவிட்டேன், ரொம்ப

சாரிம்மா,” என்று வருத்தம் தெரிவித்தார்,

அப்போதும் குரலில் நகை இலங்க. “என்னிடம் எதற்கு சார். “சாரி” எல்லாம் அம்பு தைக்க வேண்டிய இடத்தில் தைத்தால் சரி!” என்றாள் அவள். கிண்டலாக,

யுகேந்திரனுக்கு மட்டும்தான். பொடி வைத்துப் பேச முடியுமா?

மகன் பக்கம் பார்த்துவிட்டுப் புன்னகை பூத்தார் பெரியவர்,

“சரி சரி, இங்கே வேறு என்ன பார்க்க வேண்டும். சொல்லு, காட்டிவிட்டுக் கொண்டு விட்டு விடுகிறேன்,” என்று. எரிச்சலை மறையாத குரலில் கூறி எழுந்தான். யுகேந்திரன்,

திரும்பிச் செல்லும்போது. “உனக்கு எப்படி இருக்கிறதோ? ஒரு நல்ல காஃபி குடீத்தால் நன்றாக இருக்கும் போல எனக்கு இருக்கிறது, காஃபி ஷாப்புக்கு என்னோடு வருவதில் உனக்குத் தடை எதுவும் இல்லையே?” என்று அவளிடம் கேட்டான்,

அவளது பணியிடத்துக்குச் சென்றதும். மாலைக் காஃபி அல்லது டீ வரும், அங்கே போய்க் குடிப்பதை. இப்போதே குடிக்கலாமே! இல்லையில்லை, என்னைக் கூட்டிப் போய் விட்டுவிட்டு வந்துதான். நீ காஃபி குடிக்க வேண்டும் என்று நிற்பது அசட்டுத்தனம்,

அவள் சம்மதமாகத் தலையாட்டவும். ஒரு பெரிய ஹோட்டலின் சிறு தீனிப் பகுதிக்கு. யுகேந்திரன் அவளை அழைத்துச் சென்றான்,

அமர்நது பேரரிடம் தேவையானதைச் சொன்னார்கள்,

காத்திருந்த நேரத்தில். யோசனையாக அவளைப் பார்த்தான் அவன், “இப்படி வெளியே சாப்பிடுவது. உனக்குப் பழக்கம்தான் இல்லையா. சுப்ரியா?” என்று கேட்டான்,

எதையும் காட்டாத குரல்தான், ஆனால். அதுவே அவளை விமர்சிப்பது போல சுப்ரியா உணர்ந்தாள்,

ஆனால். இன்றைய காலகட்டத்தில். தொழில் ஒன்றை நடத்துகிற ஒருத்தி வெளியே உண்பதில். குறை கூற என்ன இருக்கிறது?

“ஆமாம்,” என்று ஒப்பியவள் தொடர்ந்து. “எங்கள் நிறுவனத்தில். வெளி வேலைகள் என் பொறுப்பு, போகிற இடத்தில் சற்றுத் தாமதம் ஆனாலோ. வாடிக்கையாளரிடம் பேச்சு வார்த்தைக்காகவோ. வெளியே உண்பது. எனக்குப் பழக்கமாகிவிட்டது, ஆனால். உண்ணுகிற அயிட்டங்கள் பற்றிக் கவனமாக இருப்பேன், “ என்று இயல்பான குரலிலேயே விளக்கம் கொடுத்தாள்,

சிவாவோடு போனாயே! அதுவும் இப்படித்தானா என்று உள்ளே குமுறியபோதும். காட்டிக் கொள்ளாமல். “ஆக. நீ இப்படி ஜாலியாக விதம் விதமாக உண்ணும்போது. பாவம். உன் பார்ட்னர் மட்டும். விடுதிச் சாப்பாட்டை மட்டும் சாப்பிட்டுக்கொண்டு இருப்பாளாக்கும், அவ்வளவாக நியாயமாகத் தெரியவில்லையே!” என்று சீண்டினான் அவன்,

“அப்படிக் கிடையாது,” என்று மறுத்தாள் சுப்ரியா, “இந்த ஏற்பாடே. முழுதாக அவளதுதான், வெளியே சாப்பிடும்போது. கட்டுப்படுத்த முடியாமல். பிரதி வெட்டத் தொடங்கி விடுவாள், சதைப் போட்ட வேகத்தைப் பார்த்துப் பயந்து. நடுங்கி. வெளி வேலையை முழுதாக அவளாகவே. என்னிடம் ஒப்படைத்துவிட்டாள்! அதுவும். பத்து “ப்ளீஸ்யா” போட்டுக் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சி!” என்று சிரித்தாள்,

“அப்படி. அவள் என்ன சாப்பிட்டு சதை போட்டாள்? கொழுப்பே சேராதபடி. நீ என்ன சாப்பிடுவாய்?” ஆர்வமாகவே கேட்டான் அவன்,

இவளைப் பற்றி எல்லாமே தெரிந்து கொண்டால்தானே. வானதி கணவனை. இவளிடமிருந்து பிரிப்பது இலகுவாக இருக்கும்? அதற்காகவே. எவ்வளவு முடியுமோ. அவ்வளவு அறிந்தாக வேண்டும்,

அவளுக்கு வேறுபாடு எதுவும் தெரியவில்லை போலும், “பர்கர். பீட்சா. இனிப்புகள் ... இப்படிப் பிடிக்கும் பிரதிக்கு, மாதம் ஒரு முறை. நாக்கு ருசிக்காக இப்படி உண்டாலும். பொதுவாக என் உணவில் காய்கறி அதிகம் இருக்கும், ஏதாவது சாலட்,. பச்சடி. பழம் என்று. சற்றுக் கலோரிக் கணக்கிட்டுச் சாப்பிடுகிறவள். நான், “ என்று இயல்பாக அவள் சொல்லக் கொண்டிருக்கும்போதே. இரண்டு பேருக்கும் காய்கறி ரோலும். சாசும் வந்தன,

தொடர்ந்து காஃபி அருந்தும்வரை சுற்றுச் சூழல். மழை. வெய்யில் என்று பேச்சு இலகுவாகப் போயிற்று,

“உன் நிறுவனத்து வேலை நன்றாக இருக்கிறது, அப்படியே நேரடியாகப் பொது விற்பனையும் செய்தால் என்ன? “ என்று யுகேந்திரன் கேட்டான்,

“அப்படி ஓர் எண்ணமும் இருக்கிறது, ஆனால். இப்போதல்ல, இப்படியே இன்னும் கொஞ்சம் வளர்ந்து. நல்ல வேலைத்திறம் கொண்ட ஆட்கள் கிடைத்து. பணமும் சேர்ந்தபின். அந்த வழி போகலாம் என்றிருக்கிறோம், இப்போதானால். கேட்டு வருகிறவர்களுக்குச் செய்து கொடுக்கிறோம், அப்புறம். விற்றுக் கொடுங்கள் என்று நாங்கள்

மற்றவரிடம் போய் நிற்க வேண்டும், இப்போது முன் பணம் வாங்கிச் செய்வது போல அல்லாமல். கைச் செலவு செய்து தயாரித்த பொருளைக் கொடுத்துவிட்டு. பணத்தைத் தரக் கால அவகாசம் கொடுக்க நேரும், பெரிய அளவில் செய்யும்போதும். தரம் கெடாமல் காக்க வேண்டும், . இல்லை எனாமல். சரக்கைக் கொடுக்க வேண்டும், எல்லாம் யோசித்துதான். மெல்லச் செய்யலாம் என்று இருக்கிறோம்," என்று. எதையும் மறையாமல் சொன்னாள் அவள்,

"பரவாயில்லை, நல்ல பிசினஸ் மூளை உனக்கு இருக்கிறது," என்று பாராட்டினான் யுகேந்திரன்,

"எனக்கு மட்டும் அல்ல, யோசனைகளில் பல. பிரதியுடையதும்தான், முக்கியமாக. அவசரம் கூடாது,. பொறு என்று எச்சரிப்பது. அவள்தான், "

"பிரதி. சுபி!" என்று சொல்லிப் பார்த்துவிட்டு. "இப்படிச் செல்லச் சுருக்கங்களில் அழைப்பது. ஒருவரை ஒருவர் புரிந்து மதிப்புக் கொடுப்பது என்றால். ரொம்ப காலப் பழக்கமாகத் தெரிகிறதே!" என்றான் அவன்,

முத்துப் பற்கள் தெரிய முறுவலித்தாள் அவள், "ஆமாம், பள்ளிப் பருவத்தில் இருந்தே. சினேகிதிகள்," என்றாள் அவள்,

"இருக்கும் என்று எதிர்பார்த்தேன், மற்றபடி. இந்த மாதிரி "நகல்" என்று அழைத்தால். யாருக்குப் பிடிக்கும்? எரிச்சல் வராது?" என்று குரல் மாறாமல் கூறிவிட்டுக் காஃபியை அருந்தினான் யுகேந்திரன்,

"நகல்?" என்று ஒரு கணம் யோசித்துவிட்டுக் கலீரேன்று நகைத்தாள் சுப்ரியா, "பிரதிக்கு. அகராதியில் அர்த்தம் பார்த்தீர்கள் போல! சொல்லப் போனால். அதை விடவும் சுருக்கி. அவளை "ரதி" என்று அழைக்கத்தான் எனக்கு ஆசை! ஆனால். பிறர் உரிமையில் குறுக்கிடக் கூடாது என்ற நல்ல எண்ணம் காரணமாக. அது கூடாது என்று இருக்கிறேன்," என்றாள்,

"அவள் அவ்வளவு அழகில்லை என்ற காரணம் தவிர. பிறர் உரிமையில் தலையிடுவது எங்கிருந்து வந்தது?" என்று வினவினான் அவன்,

"என்னது? அழகு. இல்லையா? சொல்லாதீர்கள், பிரதிமா நல்ல அழகுதான், ரதிக்கே ஒப்பான அழகுதான், ஆனால் நான் சொன்னது. அவளுடைய வருங்காலக் கணவனின் உரிமை பற்றித்தான், "உலக அழகி என் ,மனைவி" என்று சொல்வார்களே. கேட்டதில்லை?

ஒருவரிடம் அழகைக் காண. நம் கண்களில் அன்பைப் பூசிக்கொள்ள வேண்டும். சார்!” என்றாள் சுப்ரியா,

“கண்களில் அன்பைப் பூசிக்கொண்டு. நான் ஒவ்வொரு பெண்ணாகப் பார்க்க வேண்டும்,. அதற்காக எல்லோரும் என் முதுகில் டின் கட்ட வேண்டும் என்று இப்படி ஓர் அநியாய ஆசை. உனக்கு ஏன். சுப்ரியா? ஏன் இந்தக் கொலை வெறி?” என்று யுகேந்திரன் சோகமாகக் கேட்க. சுப்ரியா அடக்க மாட்டாமல் சிரித்தாள்,

கூடச் சேர்ந்து நகைத்தவண்ணம் அவளை ரசனையுடன் பார்த்தவன். திடுமெனத் திகைத்தான்! இன்னமும். இது என்ன பைத்தியக்காரத்தனம்!

# அத்தியாயம் -6

“உலகத்திலேயே சிறந்த அழகி என் மனைவி” என்பதும் அந்த எண்ணத்தின் காரணம் அவள் மீது கொண்ட காதலே என்பதும். உலகத்தில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை,

முதல் பார்வையில். சுப்ரியா. அவனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டபோது. யுகேந்திரனுக்குக் கிட்டத்தட்ட அதே நிலைதான், உலகிலேயே சிறந்த அழகியாகவே. அவளை நினைத்தான்,

ஆனால். அவளைப்பற்றிய உண்மை அறிந்த பிறகும். அவள்தான் தலை சிறந்த அழகி என்று கருதினால். அதற்கு அர்த்தம் என்ன? அவளைக் கண்டதும் தோன்றிய ஆசை மறையவில்லை என்பதுதானே?

இது பைத்தியக்காரத்தனம் தவிர. வேறு என்ன?

என்றாலும். தன்னை ஒரு பைத்தியக்காரனாக ஒத்துக்கொள்ள. யுகேந்திரனால் முடியவில்லை, அவன் சுப்ரியாவோடு பழகுகிறான் என்றால். அதற்கு உன்னதமான ஒரு காரணம் இருக்கிறது, ஒன்றுவிட்ட தங்கையுடைய கணவன் சிவானந்தனை. அவளிடமிருந்து காப்பாற்றுவது! மற்றபடி. அன்றைக்கேதான். அவளைத் தன் மனதிலிருந்து. அவன் தூக்கிப் போட்டுவிட்டானே!

அத்தோடு. ஒரு பூ அழகாயிருக்கிறது என்பது போல. இவளும் அழகாயிருக்கிறாள் என்று எண்ணினான், அவ்வளவே!

ஆனாலும். உள்ளத்தில் கள்ளமே இல்லாதவள் போல. என்னமாகச் சிரிக்கிறாள்! இந்தச் சிரிப்பை நம்பி. உள்ளே இருக்கும் விஷத்தை மறந்துவிடக் கூடாது,

“என்ன யோசனை? திறப்பு விழா பற்றிய கனவா? … ஊகூம், அதற்கு முகம் இப்படி உம்மென்று இராது, ஒரு வேளை. அதற்குள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் பற்றிய கவலையோ? கவலைப்படாதீர்கள். யுகேந்திரன், பைகளை. அதற்குள் நாங்கள் தயாரித்துத் தந்துவிடுவோம்,” என்று. வரிசைப் பல் அழகுறத் தெரியப் புன்னகையோடு உறுதி கூறினாள் சுப்ரியா,

“சந்தோஷம், பெரிய கவலையைத் தீர்த்து வைத்தாய்,” என்று. பதிலுக்கு உதட்டால் முறுவலித்தபோதும். உள்ளூர அவனுக்கு இன்னொரு கவலை ஏற்பட்டிருந்தது,

இந்தக் கடைத் திறப்புவிழாவுக்கு. வானதியோடு சிவானந்தனும் வருவானே! இருந்திருந்து. இவர்களை நாம் வேறு சந்திக்க வைப்பதா?

எப்படியாவது. அதைத் தவிர்க்க வேண்டுமே!

சிவானந்தனும். சுப்ரியாவும் சாதாரணமாகச் சந்திப்பதைத் தடுப்பதற்கு. யுகேந்திரன் ஒரு திட்டம் வைத்திருந்தான்,

“அடுத்த வாரம் சந்திக்குமுன்” என்று. சிவானந்தனிடம் சுப்ரியா சொன்னதை. யுகேந்திரன் கேட்ட  தினம் ஒரு புதன்கிழமை, அதையே அவர்கள் இருவரும் வாராவாரம் சந்திக்கும் நாளாக ஊகித்து. அந்தச் சந்திப்பைத் தடுக்க. அவன் திட்டம் போட்டான்,

ஏதாவது காரணத்தை வைத்துக்கொண்டு. அவனே அவளைச் சந்தித்துப் பேச வேண்டும், கூடுமானவரை பேச்சை நீட்டித்து. அவளோடு நேரத்தைக் கழித்து. அவர்களது சந்திப்பைக் கெடுக்க வேண்டும் என்று முடிவு செய்தான்,

முடிந்தால். மறுநாளும் கூட! இன்றில்லாவிட்டால். நாளை சந்திப்போம் என்று அவர்கள் நினைத்தால்?

சும்மாப் போனால். அந்த பார்ட்னர் பிரதிமாவுடன் பேசச் சொல்லிவிட்டு. சுப்ரியா பறந்துவிடலாம், எனவே. குதிரைக்குக் காரட்டைக் காட்டி ஓட வைப்பது போல. இன்னோர் ஆர்டர் பற்றிப் பேச விரும்புவதாகவும் அதற்காகவும். பை தயாரிப்பு எந்த அளவில் இருக்கிறது என்று பார்ப்பதற்காகவும். மறுநாள் அங்கே வரப் போவதாக. முந்திய நாளே தகவலும் கொடுத்திருந்தான்,

அதன்படி. புதன்கிழமையன்று காலையிலேயே. “ஸ்பெஷல்” நிறுவனத்துக்குச் யுகேந்திரன் சென்றான்,

அவனை விழி விரித்துப் பார்த்த வண்ணமதி. குளிர் பானம் கொண்டு வரச் சொன்னாள், உட்காரச் சொல்லி உபசாரம் செய்தாள்,

அவளது குறுகுறுத்த பார்வை அவனுக்கு எதையோ நினைவுபடுத்துவது போல. யுகேந்திரன் உணர்ந்தான்,

அது என்னவாக இருக்கும் என்று அவன் யோசிக்கும்போதே. தன் வேக நடையுடன் சுப்ரியா வந்து சேர்ந்தாள், “வந்து நேரமாகிவிட்டதா? வேலை நடக்குமிடத்துக்குப் போயிருந்தேன், உங்கள் பைகள் கிட்டத்தட்ட ரெடி, “ என்று முறுவலோடு உரைத்தவாறே உள்ளே வந்து அமர்ந்தாள்,

“அக்கா. உனக்கும் சொன்னேன்,” என்று சுப்ரியாவின் கைகளில் ஒரு கண்ணாடிக் குவளையைக் கொடுத்தாள். வரவேற்பாளி வண்ணமதி,

அருகருகே தெரிந்த முகங்களை. மனத்திரையில் படம்பிடித்த

யுகேந்திரன் வியப்படைந்தான், ஆனால். அது பற்றிக் கேட்க. இது நேரமல்ல! அத்தோடு. தனியாகத் தாத்தா வீட்டில் வளர்ந்ததாக. சுப்ரியா சொல்லியிருக்கிறாளே!

வந்த காரியம் பற்றிப் பேச்சைத் தொடங்கபினான், இன்னும் ஒரு செட் பைகள் தேவைப்படும் என்று. அதற்கு வேறு மாதிரி டிசைன் என்று பிசினஸ் பேசினான்,

அவனுக்குச் சும்மாவே. அப்படியும் ஓர் எண்ணம் இருக்கவும் செய்தது,

புதிய “சுரபி”யின் திறப்புவிழாவை. அவர்களுடைய இப்போதைய வாடிக்கையாளர்களும். மகிழ்ச்சியோடு அறிய வேண்டும் என்று எண்ணி. அதற்காக ஒரு வழியையும் யோசித்திருந்தான்,

ஒரு கல்லில் இரு மாங்காயாக. இதனால். சுப்ரியா. சிவானந்தன் சந்திப்பையும்  தடுக்க விரும்பினான்,

அதன்படியே. இன்னொரு செட் பைகளுக்கு. சுப்ரியாவிடமே ஆர்டர் கொடுத்தான்,

அந்தப் பைகளின் வடிவமைப்பு பற்றிப் பேச என்று ஒருநாள் அவளை வெளியே அழைத்துச் சென்றான்,

புதியவைகளுக்கான வடிவமைப்புக்கு. அவனிடமே ஒரு டிசைன் இருந்தது, அதைப் பற்றி. ஒரு பார்க்கில் உட்கார்ந்து. ஆலோசனை செய்தார்கள்,

சிறு குழப்பங்கள் வரவே. அவைகளைப் பேசித் தீர்ப்பதற்கு. ஹோட்டலில் போய்க் காஃபி குடித்தார்கள்,

காஃபி அருந்தும்போது. பானகத் துரும்பு போல சிவாவின் அழைப்பு வந்தது,

எண்ணைப் பார்த்ததுமே. “முக்கியமான வேலையாக இருக்கிறேன், நேரம் கிடைக்கும்போது பேசுகிறேன்,” என்று அவள் வைத்துவிட. கேளாத பாவனையில் கேட்டிருந்தவனுக்கு உள்ளம் துள்ளியது,

அவன் திரும்பவும் அழைக்க. “என்ன சிவா. வேலை என்றேனே! சரிசரி, உங்களிடம் கேளாமல். நான் யாரிடமும் எதுவும் பேசுவதில்லை, போதுமா? வைக்கிறேன்,” என்று சிடுசிடுத்தபோதும். அப்படியே!

அடுத்த நாள். இருவருமாகக் கலைக் கண்காட்சி ஒன்றிற்கு. போய் வந்தார்கள், “கடைக் கஸ்டமர், பிடிவாதமாக. இரண்டு அனுமதிச்

சீட்டுகளைத் தந்துவிட்டுப் போய்விட்டார், உனக்குப் பயன்படுமோ என்று தோன்றியது, வருகிறாயா?" என்று

அதில் சில அருமையான வண்ணக் கலவைகளைப் பார்த்து அவள் எடுத்துரைக்க. இருவரும் சேர்ந்து ரசித்தார்கள்,

அப்படியே அருகில் இருந்த ஐஸ்கிரீம் பார்லருக்குப் போனார்கள்,

"ஒரு பெரிய வீட்டின். விசாலமான ஹாலின் ஒரு பக்கச் சுவரில். அது போன்ற ஃப்ளோரசன்ட் வண்ணங்களைக் கொண்டு சுவர் முழுதுமாகப் படம் வரைந்தால் போழுது போவது தெரியாமல் பார்த்துக்கொண்டே இருக்கலாம்," என்றாள் சுப்ரியா. கற்பனையில் அதை ரசித்தபடியே,

"பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருக்கும், ஆனால். பிரச்சினையைக் கொண்டுவந்துவிடும்," என்றான் யுகேந்திரன்,

"என்ன பிரச்சினை?" என்றாள் அவள் புரியாமல், "அழகை ரசிப்பதில் கூடப் பிரச்சினையா?"

"அதில் வரக் கூடிய பெரும் பிரச்சினை பற்றிச் சொன்னால். அடிக்க வருவாய் ... " என்று மேலே அவன் பேசி முடிக்குமுன் அவளது பற்கள் மின்னலடித்தன,

கண்ணில் சிரிப்புடன். "நாம் வீட்டுச் சுவரின் அழகான ஓவியம் பற்றித்தான் சார். பேசிக் கொண்டிருந்தோம்!" என்று நினைவு படுத்தினாள்,

"ஓ! ஆமாமில்லை? இந்த மறதி கூட. நான் சொன்ன பிரச்சினைகளில் ஒன்றுதான், ... " என்று பூடகமாக உரைத்து. மீண்டும் ஒரு தரம் அவளது முத்து நகையைப் பார்த்து ரசித்துவிட்டு. "ஆனால் இப்போது. நீ கேட்ட பிரச்சினைகள் பற்றி. முதலில் சொல்லுகிறேன், முதல் பிரச்சினை. நீயே சொன்னது போலப் பொழுது போவது தெரியாமல் படத்தின் முன் நின்றுவிட்டு. செய்ய வேண்டிய வேலையைக் கோட்டை விட நேரும்,! " என்றான்

மனதிற்குள் சிரித்தபடி. "ஓஹோ. அப்புறம்?" என்று கேட்டாள் அவள்,

" அடுத்தது. இன்னமும் மோசமானது! வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் படத்தின் முன்னே போய் உட்கார்ந்துகொண்டு. நாள்க் கணக்கில். அசையவே மாட்டார்கள்! அப்புறம். இவர்களுக்கு எத்தனை நாட்கள்தான் பொங்கிப் போடுவது? விலைகள் ராக்கெட்டில் பறக்கிற இந்தக் காலத்தில். என்ன செலவு ஆகிறது. தெரியுமா? என்னதான்

படத்தை வரைந்து வைத்தாயோ என்று. அம்மாவிடம் திட்டு வாங்க நேரிடும்!"

"அம்மாவிடம் மட்டும்தானா? மனைவி ஒன்றும் சொல்ல மாட்டார்களா?" என்று கேட்டுவிட்டு. நாக்கைக் கடித்துக் கொண்டாள் சுப்ரியா,

புன்னகையோடு. "மனைவியா? அந்தக் கொடுப்பினை. நமக்கு ஏது? இந்த மாதிரி விருந்தாளிகள் மொய்க்கிற வீட்டுப் பிள்ளைக்கு யார் பெண் கொடுப்பார்கள்? வாழ்க்கை முழுதும் தனி மரமாக நிற்பதுதான் என் கதி போல! ஹூம்! அது வேறு. இன்னொரு பிரச்சினை!" என்று சோகம் போல போஸ் கொடுத்தான் யுகேந்திரன்,

அடக்க மாட்டாமல் நகைத்துவிட்டு. "யப்பா! வீட்டை அழகுபடுத்த ஒரு வழி சொன்னால். அதற்கு. இத்தனை சால்ஜாப்புகளா? இருக்கட்டும், ஒரு நாள். உங்கள் தாயாரிடமே. இது பற்றிக் கேட்கிறேன், உங்கள் விருந்தோம்பலால்தான். உங்கள் திருமகனின் திருமணம் தடைப்படுகிறதா என்று!" என்று மிரட்டினாள் சுப்ரியா,

"ஆஹா! நன்றாகப் போட்டுக் கொடுப்பாய் போல? இது தெரியாமல். எங்கள் குடும்ப ரகசியங்களை எல்லாம். உன்னிடம் ஒப்பித்துவிட்டேனே! இதனால். எங்கள் மானம் மரியாதை எல்லாம் தண்டவாளத்தில் ஏறப் போகிறதா? அல்லது. காற்றில் பறக்கப் போகிறதா?" என்று அவன் பாவனையோடு கேட்க. "அய்யோடா!" என்று சுப்ரியா வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தாள்,

"போதும் யுகேந்திரன் சார். போதும், அதற்கு மேல் சிரித்தால். தாங்காது, வயிறே வெடித்துவிடும், அப்புறம். நீங்கள் வாங்கிய ஐஸ்கிரீமை தின்னவே முடி ... " என்று முன்னே இருந்த ஐஸ்கிரீம் கப்புகளைப் பார்த்தவள் மறுபடியும் விழுந்து விழுந்து சிரிக்கலானாள்,

"என் பேச்சின்மீது பழி போடாதே. தாயே! சும்மாவே. இந்த ஐசைத் தின்பது. சாத்தியமே கிடையாது, முழுதும் உருகிவிட்டது! இனி ... வேறு கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்றான் யுகேந்திரன்,

"இல்லையில்லை. வேண்டாம்!" என்றாள் சுப்ரியா அவசரமாக, "இதைத் தின்னத்தானேமுடியாது? தூக்கிக் குடிக்க முடியுமே! வனில்லா ஃப்ளேவர் சேர்த்த ரோஸ்மில்க்!" என்று ஒரு கப்பைத் தூக்கி அவனிடம் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை அருந்தத் தொடங்கினாள்,

தூக்கிக் குடித்துவிட்டு. "இப்படி ஒரு தில்லுமுல்லா? ஐஸ்கிரீம் உறையவில்லை என்றால். ரோஸ்மில்க் ஆக்கிவிடலாம் போல!" என்று

சிரித்தான் அவன்,

கடைசிச் சொட்டு வரை. தூக்கிக் குடித்துவிட்டு. “நன்றாக இருந்ததா. இல்லையா? முதலில் அதைச் சொல்லுங்கள்!” என்றாள் சுப்ரியா,

“அடடா! அதைக் கவனிக்கவில்லையே!” என்று சொல்லி. தன் கப்பை எடுத்து அண்ணாந்து. மீதியிருந்த சொட்டுகளை வாயில் ஊற்றிக. விழுங்கிவிட்டு. “உண்மையைச் சொன்னால். ஒத்துக் கொள்ள வேண்டும், நன்றாகவேதான் இருந்தது, ஆனால். இது உருகிப்போன ஐஸ்கிரீம் என்பதை மட்டும். ஊகூம், நினைக்கவே கூடாது! அதை. அடியோடு மறந்துவிட்டுக் குடிக்க வேண்டும், சரியா?” என்று அவன் சொன்ன தினுசில். அவள் மீண்டும் நகைத்தாள்,

அவனது புதிய ஆர்டரோடு. சுப்ரியா அலுவலகத்துக்கு வந்தபோது. உற்சாகமே உருவாக இருந்தாள்,

கன்னங்களோடு போட்டி போட்டுக்கொண்டு கண்கள் பளபளக்க. புதிய பைகளின் அமைப்பு பற்றிப் பிரதிமாவிடம் விவரித்தாள்,

“கொஞ்சம் ஜம்போ சைஸ் பை. பிரதி, அவர்களது முதல். இரண்டாவது பெருங்கடைகளோடு. இப்போது திறக்கப் போகிறதின் தோற்றமும் இருக்க வேண்டும், சின்னதிலிருந்து பெரிதாக வளர்வது போல. அமைப்பு! கடைசி. ரொம்பப் பெரியதாக, எங்கேயும். தனியாகக் கடையின் பெயரோ. இன்னின்ன கிடைக்கும் என்பதோ இராது,

சும்மாப் பார்ப்பதற்கு. நல்ல இயற்கைக் காட்சி போல. வானம் மேகம் போலப் பின்னணி, ஆனால். கடையின் தோற்றத்தில். பெயரும் இருப்பதால். விளம்பரமும் ஆகிவிடும்! எப்படி ஐடியா? பிரமாதமில்லை? யுகேந்திரன் கெட்டிக்காரர். பிரதி, கொஞ்சம் வசதி உள்ளவர்கள். அது போலப் பெயர் பொறித்த பைகளை எடுத்துக்கொண்டு ஷாப்பிங் செல்லத் தயங்குவதை உணர்ந்து. யோசித்து. இந்த வழி கண்டுபிடித்திருக்கிறார்! “ என்று வியப்பும் மகிழ்ச்சியுமாகக் கொட்டித் தீர்த்தாள்!

அதிசயமாகப் பார்த்து. “சற்று மூச்சு விட்டுக்கொண்டு பேசு. சுபி, அவர் மட்டுமா. சொன்னார்? நீயும்தானே. கருத்துத் தெரிவித்திருப்பாய்? கொஞ்ச நாளைக்கு முன்னாலே கூட. ஒரு திருமணத் தேங்காய்ப் பையில் “நன்றி”யை மட்டும் போடும்படி நீ சொல்லி. அப்படியே வடிவமைத்துக் கொடுத்தோமே! நினைவில்லை?” என்று பிரதிமா கேட்டாள்,

“ஆ , ஆமாம், ஆனால். அதை ஒத்துக் கொள்ளச் செய்வதற்கு. என்ன பாடு பட வேண்டியிருந்தது? இவ்வளவு செலவு பண்ணித் திருமணம் செய்கிறோம்,. நம் பேரைப் போடாவிட்டால் எப்படி என்றார்களே! யுகேந்திரன் அப்படியில்லைப்பா, நிறைய. நம்மைப் போலவே யோசிக்கிறார்,” என்றாள் சுப்ரியா,

“உன்னைப் போல என்று சொல்லு,” என்றாள் பிரதிமா, “இது போல எத்தனை பை வேண்டுமாம்? எப்போது வேண்டும் என்றார்?” என்று வினவினாள் தொடர்ந்து,

லேசாகப் புருவம் சுருக்கி. “அதுதான் கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. பிரதி, அவராக நிறுத்தச் சொல்கிறவரை. நூறு நூறாகச் செய்து தந்துகொண்டே இருக்கச் சொல்கிறார், எல்லாமே. எண்பது சதவீதம் முன்பணத்தோடு தொடங்கி. வேலை முடிந்து. பைகளைக் கொடுக்கும்போது. மீதித்தொகை வாங்குவதுதான், இவ்வளவு அதிக ஆர்டர் ஏன் கொடுக்கிறார் என்று புரியவில்லை,” என்றாள் சுப்ரியா,

“ஒருவேளை. நம் மூலமாகப் புது ஐடியாக்கள் கிடைக்கும் என்பதால். தொடர்பை விட்டுவிடக் கூடாது என்று எண்ணுகிறாரோ. என்னவோ? அல்லது. மறைமுகமாக வேறு ... “

தோழியின் பேச்சில் குறுக்கிட்டு. “வேறென்ன? நீ சொன்னது போலப் புதுமையான யோசனைகள்தான், பரவாயில்லை, நம் கருத்துக்களை மதிக்கிற வாடிக்கை கிடைத்திருப்பதே பெரிது,” என்றவளுக்கு. வண்ணமதி. பெரிய பாட்டிலில் இருந்து. கிரீன் டீயை ஊற்றிக் கொணர்ந்து கொடுத்தாள்,

“தாங்க்ஸ்” என்று முறுவலித்த தமக்கையை நெருங்கி. “அக்கா. இவர்தான் பிறகு அத்தானாகப் போகிறாராக்கா?” என்று மெல்லக் கேட்டாள்,

“எனனது?” என்று கண்ணை உருட்டி விழித்தாள். பெரியவள், “அத்தானுமில்லை. பொத்தானுமில்லை! அதிகப்பிரசங்கித்தனம் பண்ணாமல். உனக்குரிய வேலையைப் பார், போய் பைகள் எத்தனை தயார் என்று கேட்டு  வா,” என்று. தங்கையை விரட்டினாள்,

வண்ணமதி ஃபோனை எடுக்கவும். “இது செய்ய. எனக்குத் தெரியாதா? பாதி வேலையில் இருப்பதைக்கூட. முடித்தாயிற்று என்று பொய் சொன்னால். ஃபோனில் தெரியுமா? போ. போய். நேரில் பார்த்துவிட்டு வா!” என்று அதட்டினாள்,

முகம் வாட. லேசான குற்றம் சாட்டும் பார்வையுடன் வண்ணமதி

ஷெட்டை நோக்கிச் சென்றாள்,

அவள் கண்ணுக்கு மறைந்ததும். “சின்னப் பெண், அவளிடம் ஏன் இந்தக் கடுமை? உள்ளதைச் சொன்னதாலா?” என்று பிரதிமா கேட்டாள்,

“ஏய். என்னப்பா. அவளைப் போலவே நீயும் உளறுகிறாய்!” என்றாள் சுப்ரியா கடுத்த குரலில் ,

“என்ன செய்வது? எனக்கும் கண் இருக்கிறதே!” என்றாள் தோழி,

சிறு அமைதியின் பின். “எனக்குக் கருத்தும் இருக்கிறதே. பிரதி, அதற்கு. என் அப்பா செய்த துரோகமும் நினைவு இருக்கிறதே, இனி எப்படி ஓர் ஆண்மகனை. வாழ்க்கைத் துணையாக நம்புவேன்?” என்று கசப்புடன் கேட்டாள் மற்றவள்,

“எல்லோரும் அப்படித்தான் இருந்தாக வேண்டும் என்பது. கட்டாயம் அல்ல. சுபா, இந்த மனோபாவத்தை விட்டுவிடப் பார், …அப்புறம். உன்னிடம் இன்னொன்று சொல்ல நினைத்தேன், வண்ணமதியை. நம் விடுதிக்கே வந்துவிடச் சொல்லலாமா? ஒரே விடுதியில். சேர்ந்தே இருக்கலாம், மாலையில் அவளை விட்டுவிட்டுச் செல்லும்போது. அவள் ஏக்கமாகப் பார்த்துக்கொண்டே நிற்பது. பாவமாக இருக்கிறது,” என்றாள் பிரதிமா,

ஆனால். சுப்ரியாவுக்கு அதை மறுத்தாள், “வேண்டாம். பிரதி, அலுவலகத்தில் வேலை செய்வது வேறு, கூடவே தங்கினால் … எப்போதாவது பாட்டி வரும்போது. பெண் விருந்தாளியாக நம்மோடு தங்கும்போது. இவள் யார் என்று தெரிந்துவிடாதா? நம் மகளின் வாழ்வை அழித்தவளுடைய பெண்ணோடு ஒட்டி உறவாடுவதாக. மனம் வேதனைப்படுவார்கள், ஏற்கனவே அவர்கள் அனுபவித்திருக்கும் துன்பம் போதும்! அதே போல. அணில் மாதிரி உதவ வந்தவளுக்கு. உரிய ஊதியம் கொடுத்து வைத்திருக்கிறோமே! அதுவே. அவளுக்கும் போதும்,” என்றாள் முடிவாக,

லேசாகத் தோளைக் குலுக்கியது தவிர. பிரதிமா வேறு ஒன்றும் பேசவில்லை,

யுகேந்திரன் கேட்டது போலத் திறப்புவிழாவுக்கான பைகளுக்கு முன்பாகவே. அடுத்த டிசைன் பைகள் துரிதமாகத் தயார் செய்து கொடுக்கப்பட்டன, அது ஏன் என்ற குழப்பமும். விரைவிலேயே தீர்ந்தது,

“ஸ்பெஷல்” நிறுவனத்திடம் வாழ்த்து அட்டைகள் வாங்கும் ஒரு பெண்மணி. உங்கள் பை ஐம்பது ரூபாய்க்குக் கிடைத்தது, என்று

காட்டிச் சென்றாள்,

அடக்க விலையே எண்பது ரூபாய் ஆகிற பையை. ஐம்பது ரூபாய்க்கு விற்கிறவன் என்ன வியாபாரி? அத்தோடு. அப்போதைக்குக் கடையில் விற்பனைக்குக் கொடுப்பதாக இல்லை என்று அவள் சொன்ன பிறகும். யுகேந்திரன். அதை எப்படி விற்கலாம்?

ஆத்திரத்துடன். சுப்ரியா உடனே கிளம்பிப் போய். அவனைச் சந்தித்து. விவரம் கேட்டாள்,

சீக்கிரமே திறப்புவிழா இருப்பதால். அந்தக் கடையில் இரவும் பகலுமாக வேலை நடந்துகொண்டு இருந்தது,

வந்திருப்பது அவள் என்றதும் உடனே வந்தவன். ஆஃபீஸ் அறையாக அவன் பயன்படுத்தி வந்த இடத்துக்கு. அவளை அழைத்துச் சென்றான்,

எந்தவிதமான நகாசு வேலையும் இல்லாமல். நேராக விஷயத்தைக் கேட்டாள் சுப்ரியா,

“நீ நினைக்கிற மாதிரி. நேரடி விற்பனை செய்யவில்லை. சுப்ரியா, அந்தப் பையை. ஒவ்வொரு பில்லுக்கும் இலவசமாகக் கொடுப்பது. முடியாது என்று. உனக்கே தெரியும், எடுத்த உடனேயே. நீயே சொன்னதுதான், அதனால். ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்களை வாங்குகிறவர்கள். மேலே ஐம்பது ரூபாய் கொடுத்தால். இந்தப் பையை இலவசமாகப் பெறலாம் என்று எழுதி வைத்தோம், உன் பைக்காகவே. நிறையப் பேர் எழுநூறு எண்ணூறுக்கு வாங்குகிறவர்கள். இன்னும் கொஞ்சம் வாங்கி. ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் பில் போடுகிறார்களாம், தகவல் வந்தது, இன்னும் பைகள் வேண்டும் என்று. எங்கள் நிர்வாகி சொன்னார், அடுத்த செட் எப்போது தரமுடியும். சுப்ரியா?” என்று ஆவலாகக் கேட்டான் அவன்,

இவனிடம் எப்படிக் கோபத்தை நிலை நிறுத்திக் கொள்வது? பிசினசும் தரும்போது!

“ஐம்பது ரூபாய் என்றால். அதுவும் விற்பனைதானே?” என்றாள். முணுமுணுப்பாக,

“அப்படியில்லை. சுப்ரியா, கட்டுப்படி ஆகிற அளவுக்கான இலவசம்தான். அது, உன் நிறுவனத்து டிசைனோ. மிகவும் அழகானது, அதற்காகவே பில் போடுவார்கள்,. போடுகிறார்கள், யோசித்துப் பார். நூறுக்கும் இருநூறுக்கும் சாமான் வாங்குகிற அத்தனை பேருக்கும். இந்தப் பையை இலவசமாகக் கொடுத்தால். நாங்கள என்ன ஆவது?

போண்டியா?”

“சேச்சே! அந்த வார்த்தை சொல்லாதீர்கள்!” என்று பதறினாள். அவள்,

கண்களில் கூர்மையோடு. “வெறும் வார்த்தையில் என்ன இருக்கிறது. சுப்ரியா?” என்று கேட்டான் யுகேந்திரன்,

ஒரு கணம் தயங்கிவிட்டு. “வார்த்தையில் கூட. உங் ...வந்து. ஒரு தொழிலின் அழிவைக் கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. யுகேந்திரன், ஆனால். வார்த்தை எனும்போது . நீங்கள் எங்களிடம் இது பற்றி ஒரு வார்த்தை தெரிவித்துவிட்டுச் செய்திருக்கலாம். அல்லவா?” என்று. விடாமல் கேட்டாள் அவள்,

தெரிவித்து! அவனுக்குச் சிரிப்பு வந்தது, ஒரு வார்த்தை கேட்டுவிட்டு என்றால் அதிகாரம் தெரியும், சொல்லிவிட்டு என்றால் பணிந்து போவது போலத் தோன்றும், இரண்டினுக்கும் இடையே தெரிவித்திருக்க வேண்டும் என்கிறாள்!

புன்னகையோடு. “இதை நான். அடுத்த ஆர்டரோடு வந்து. ஆனந்த அதிர்ச்சியாகத்  தர எண்ணினேன்,” என்றான் அவன், “அதற்குள் ஒரு முந்திரிக்கொட்டை உன்னிடம் வந்து வத்தி வைத்துவிடும் என்று எதிர்பார்க்கவில்லை! சாரிம்மா!” என்றான் இலகுவாக,

இப்போதும். தன் செயலுக்காக யுகேந்திரன் வருத்தம் தெரிவிக்கவில்லை, அவனை முந்திக்கொண்டு யாரோ வந்து அவளிடம் சொல்லிவிட்டதுதான். அவனுக்குப் பிடிக்காத சிறு தொல்லை! அவ்வளவே!

“எதற்கும். இனிமேல் இப்படி ஆனந்த அதிர்ச்சிகள். தராதீர்கள். யுகேந்திரன், எங்களுக்குத் தாங்காது! “ என்று சுப்ரியா கிண்டல் போலச் சொன்னாலும். அதில். சின்னதாக ஓர் எச்சரிக்கையும் இருந்தது,

“இல்லைம்மா, எதை ...யும். உன்னிடம் தெரிவியாமல் செய்வதே இல்லை! ப்ராமிஸ்! போதுமா?” என்று வேடிக்கை போலவே. அவனும் வாக்குறுதி கொடுத்தான்,

கூடவே. மேலும் ஒரு செட் பைகளுக்கு முன்பணத்தையும் கொடுத்து. வாயில் வரை வந்து வழியனுப்பி வைத்தான்,

பணத்தைக் கண்டதும். வளைந்து நெளியாமல். சாதாரணத் தொழில் முறை ஒப்பந்தமாக ஏற்று. அவள் நடந்துகொண்ட விதம். அவனுள் யோசனையைத் தூண்டிற்று,

நேர்கொண்ட பார்வையும். நிமிர்ந்த நன்னடையும் ... என்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் தோன்றுகிறாளே! பேச்சில் கூடத் திடம்! இவள் எப்படி. அப்படி?

ஒரு வேளை. சுப்ரியாவின் அன்றையப் பேச்சுக்கு வேறு ஏதாவது அர்த்தம் இருக்கக் கூடுமோ?

உள்ளூரத் தவிப்புடன். அவளது அன்றையப் பேச்சை அலசி ஆராய்ந்தான்,

ஒரு வேளை. சிவா தொழிலில் நஷ்டமாயிருக்குமா? அதை மனைவியிடம் சொல்லும்படி இல்லை, அப்படியிருக்க வாய்ப்பே இல்லை, அதே ஆடிட்டர்! நஷ்டம் எதுவும் என்றால். நிச்சயமாகக் குறிப்பாகவேனும். கூறியிருப்பார், ரொம்ப மோசமான நிலை என்றால். உதவி செய்யும்படி வெளிப்படையாகவே கூறியிருப்பார்,

அதை. இவள் சொல்லும் அளவுக்கு விட்டிருக்கவும் மாட்டார், அத்தோடு பணம் இல்லை என்றால். இவள் எப்படி. சிவாவோடு ஒட்டிக் கொண்டிருப்பாள்?

நோய் நொடி என்றாலும். சிவானந்தன் எந்த டாக்டரிடமும் போனதாகவே தெரியவில்லை, அப்படியே உடல் நலத்தில் பாதிப்பு என்றால். வைத்தியரிடம் போகத்தானே செய்வான்?

ஒரு கேடு கெட்டவளிடம் நல்லதைத் தேடும் தன்மீதே. யுகேந்திரன் கடும் கோபம் கொண்டான்,

“யானைக்கும் அடி சறுக்கும்” என்பது போலக் குடும்பத்துக்குள் கெட்டிக்காரன் என்று பெயரெடுத்த அவனே. அந்த சுப்ரியாவின் வலையில் கிட்டத்தட்ட விழுந்து விட்டானே!

நல்லவேளையாகச் சமயத்தில் விழிப்பு வந்துவிட்டதால். இனி அவளது மாயா ஜாலம் எதுவும். அவனிடம் செல்லாது, 1

# அத்தியாயம் - 7

யுகேந்திரன் இதுவரை. வேறு மாதிரியாக யோசித்திருந்தான்,

பணத்துக்காகத்தானே. இவள் சிவாவைச் சுற்றுகிறாள்,. சொந்தத் தொழிலையே நல்லபடியாக வளர்தே வேகமாக வருமானத்தைப் பெருக்கலாம் என்று காட்டினால். தானாக விலகிப் போவாள் என்று நினைத்தான், அதாவது. கொஞ்சமாவது நல்ல புத்தி இருக்கும் என்ற நம்பிக்கை!

அடுத்து. சிவாவைச் சந்திக்கும் அவகாசம் இல்லாது போனால். “கண் பாராததைக் கருத்து மறந்துவிடும்” என்று. இருவருமே ஒருவரை ஒருவர் மறக்கக் கூடும் என்ற எண்ணம், அசட்டு ஆசை!

அதற்காக. அவளை. அவனே அடிக்கடி சந்தித்து. காஃபி ஷாப். கண்காட்சி என்று அழைத்துப் போய் நேரம் போக்கினான், பொன்னான பொழுதை வீணாக்கி இருக்கிறான்!

ஆனால் இருபுறம் தீட்டிய கத்தியைப் போல. சிவானந்தன். சுப்ரியா சந்திப்புகளைக் குறைத்த அதே சமயத்தில். யுகேந்திரன் மனதில். அவள் வேரூன்றத் தொடங்கி இருக்கிறாள், அதனாலேயே. நல்லவளாக நினைக்கவும் ஆசை வந்திருக்கிறது!

இதில் இன்னமும் பெரிய பெரும் தோல்வி என்னவென்றால். நேரில் சந்திக்காவிட்டால் என்ன? இந்த செல்ஃபோன் யுகத்தில். நினைத்த நேரத்தில். அவர்கள் இருவரும் பேசி மகிழ்ந்திருக்க முடியுமே என்பதைக் கூட. அவன் மறந்தது!

அதிலும். சிவாவே. அவளைத் திருப்பித் திருப்பி அழைத்துக் கொண்டேதானே இருக்கிறான்! அது கூடவா. அவன் மனதில் உறைக்கவில்லை?

வேலையாக இருப்பதாகச் சொல்லி. அவ்வப்போது சுப்ரியா பேச்சைக் கட் பண்ணியபோதும். பிறகு தனிமை கிடைத்தபோது. அவளே. அவனை அழைத்துப்  பேசவில்லை என்று. என்ன நிச்சயம்?

நேரில் கூடச் சந்தித்திருக்கலாம்! இன்னும்

என்னென்னவோ கற்பனைகள் மனதில் தறி கெட்டு ஓட. அவன் மனம் கொதித்தது,

சுப்ரியா விஷயமாக. அவன் எடுத்த ஒவ்வொரு முயற்சியும் முழுத் தோல்வியே,

அவளது தொழிலை அழிக்கத் திட்டமிட்டான், ஆனால். நடந்தது என்ன? தொழில் பிரமாதமாக வளர்வதற்கே உதவியிருக்கிறான்,

சிவானந்தனை மீட்பதாக எண்ணி அவளோடு பழகியதில். அவனும் அவள் வலையில் ஓரளவு இல்லை. ரொம்பவே சிக்கியிருக்கிறான்,

இந்த அழகில். மூன்றாவது "சுரபி"யின் திறப்புவிழா வேறு நெருங்குகிறது, அப்போது பை தயாரித்துத் தந்ததற்காக. அவளது நிறுவனத்தையும் அழைக்க நேரும், இல்லாவிட்டால். தந்தைக்குப் பதில் சொல்ல முடியாது! என்ன மாயமந்திரம் போட்டாளோ? சும்மாவே. அவளைப் பற்றி. ஓஹோ என்று புகழ்ந்துகொண்டு இருக்கிறார்! அழைக்காமல் விட மாட்டார்,

குடும்பத்துள் ஒருவனாக. சிவானந்தனும் வருவான்,

அவர்கள் இருவரும் ஒரு தரம் சந்தித்து மகிழ்வதற்கு. அவனே வழி செய்து கொடுப்பதா?

கூடவே கூடாது! அதற்குள்ளாகவே. ஏதாவது அதிரடி நடவடிக்கை எடுத்து. அவர்களைப் பிரித்தாக வேண்டும்! சிவா. அந்த சுப்ரியாவைச் "சீ" என்று விலக்கும்படிச் செய்ய வேண்டும்! அதில். அவனுக்குப் பாதகம் இல்லாமலும் பார்த்துக் கொள்ளலாம்!

எப்படிச் செய்வது என்று. யுகேந்திரனுக்கு அதற்கான யோசனை ஒன்று மனதில் உருவாயிற்று, ஒரு பெண்ணை. அவளுடைய காதலனிடமிருந்து பிரிப்பதற்கான நிச்சயமான வழி!

இன்னொருத்தனோடு. சந்தோஷமாக இரண்டு நாட்கள் தங்கியிருந்த பெண்ணை. எந்த ஆண்மகன் விரும்புவான்? இருந்த மயக்கம் எல்லாம் பறந்து போகாதா?

இந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால். சுப்ரியா அவனை நம்பி. அவனோடு கிளம்பி வர வேண்டும்,............... விரும்பி என்று கூடச் சொல்லலாம்,

செய்வாள் என்ற நம்பிக்கையும். இப்போது அவனுக்கு இருந்தது, ஏனெனில். அவளுக்கும் அவனிடம் ஏதோ இருப்பது போல. அவ்வப்போது காட்டிக் கொண்டுதானே இருக்கிறாள்!

இரண்டு பணக்கார மடையன்களில் எவன் கிடைத்தாலும். அவளுக்கு ஒன்றுதான், யுகேந்திரன் என்றால். இன்னமும் வசதி, முதல் திருமணத்தை ரத்து செய்வது போன்ற தொல்லைகள் கிடையாது!

திட்டத்தை இயல்பு போல நடத்திக் காட்ட வேண்டும் என்பதால். யுகேந்திரன் சுப்ரியாவை அடிக்கடி சந்தித்தான்,

நடிப்பென்ன. அவளுக்கு மட்டும் தெரிந்த கலையா? அவளைப் போலவே. அவனும் ஆவலைக் காட்ட முடியாதா? தொழிலில் எத்தனை அறுவைகளை. இன்முகம் காட்டியே சமாளிக்கிறான்!

புதிய “சுரபி”யின் வேலைகளைத் தகுந்த ஆட்களிடம் ஒப்படைத்துவிட்டு. தினமும். சுப்ரியாவைச் சந்தித்தான்,

அவள் உஷாராகி விடுவாளோ என்ற பயத்தில். அவன் வெளிப்படையாகச் சரசமாடவில்லை,

ஆனால். “திறப்பு விழா நெருங்க நெருங்கப் பரபரவென்று இருக்கிறது, வருகிறாயா. ஏதாவது “மாலி”ல் கொஞ்ச நேரம் ஆசுவாசமாகச் சுற்றிவிட்டு வரலாம்,” என்று அழைப்பான்,

என்னமோ. அவளோடு பேசுவதால். இறுக்கம் தளர்வது போல ஒரு பாவனை!

அவள் “வேலை இருக்கிறதே ... “ என்று யோசித்தால். வற்புறுத்த மாட்டான்,

தோளைக் குலுக்கி. “சரிப்பா, நீ. உன்வேலையைப் பார், நான். வழியில் ஏதாவது பூங்காவில் சற்று நேரம் தனியாக உட்கார்ந்திருந்துவிட்டுப் போகிறேன்,” என்று. சிறு வருத்தத்துடன் உரைத்துவிட்டுக் கிளம்புவான்,

அவள் விட்டுவிடுவாளா?

அவனுக்காக யோசிப்பது போல. “இல்லை. வாருங்கள். யுகேந்தர், ஓர் அரை மணி நேரத்தில் பெரிய வேறுபாடு ஒன்றும் வந்துவிடாது, “ என்று. தோழி அல்லது வண்ணமதியிடம் சொல்லிவிட்டுக் கிளம்புவாள்,

அவர்களிடம் என்ன சொல்லி வைத்திருந்தாளோ? அவர்களும் தடுப்பது இல்லை,

சுப்ரியாவோடு செல்லும்போது. அவ்வப்போது திரும்பிப் பார்க்கும் ரசனை அல்லது பொறாமைப் பார்வைகளை ஓரக் கண்ணால் கவனிக்கும்போது. யுகேந்திரனுக்குப் பெருமையாகவே இருக்கும்,

கூடவே. அவளோடு செல்லும்போது. கண்ணில் படுகிறனவற்றை. சுப்ரியா விவரிக்கும் விதம். சுவாரசியமாக இருக்கும், அவனது இறுக்கம் தளர்வதற்காகப் பேசுவது போல. அவளும் நிறையவே சொல்லுவாள்,

காலையில் உண்டது போகத் தட்டில் மிகுந்ததை. வெளியே

வைக்கும்போது தின்னவரும் காக்கை கூட. முதலில் இரண்டு வாய் அவசரமாக விழுங்கிவிட்டு. அப்புறமாகக் காகா என்று மற்ற காக்கைகளை அழைப்பதை. ஒரு தரம் சொன்னாள், “தனக்குப் போகத் தானம்” என்பதை. அந்தக் காக்கை எப்படியோ படித்து வைத்திருக்கும் போல என்று சுப்ரியா சொன்னபோது. அவன் வெகு நேரம் சிரித்தான்,

அதே போலத் தேன் சிட்டு. தன் குஞ்சுகளுக்கு இரை கொண்டு வரும்போது. நேரே குஞ்சுகளிடம் போகாமல். சற்று நேரம். அங்கங்கே உட்கார்ந்து போக்குக் காட்டுவதை. அப்புறம் ஒரே வினாடியில் விர்ரென்று குஞ்சுகளுக்கு உணவூட்டிவிட்டு. வந்தது போலவே. வெவ்வேறு இடங்களில் உட்கார்ந்து போக்குக் காட்டிவிட்டு. மறுபடியும் இரைதேடப் போவது. புறாக்கள். ஒன்றுக்கொன்று உடம்பைக் கோதிவிட்டுக் கொள்வது என்று அவள் ரசித்தவை பற்றி நிறையச் சொல்லுவாள்,

“பறவைகள் என்றால் ரொம்பப் பிடிக்குமா? “ என்று அவன் கேட்டபோது. “தாத்தா வீட்டில். சேர்ந்து விளையாட. பழக யாரும் கிடையாது, பண்ணைக்குப் பண்ணை தூரமாக இருக்கும், வெளியே அவ்வளவு தூரம் போவது. தாத்தா பாட்டிக்குப் படிக்காது, அதனால். பொழுது போவது இப்படித்தான், இந்தப் பறவைகள். பழந்தின்னி அணில்கள். பூனைக் குட்டிகள் ..., ஆனால். எல்லாமே பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும், “ என்றாள் அவள்,

தாத்தாவின் பண்ணை பற்றி. சுப்ரியா முன்னொரு தரம் சொன்னது அவனுக்கு நினைவிருந்தது, பண்ணையின் மரம். செடி கொடிகளூடே. சுற்றிலும் பார்த்தபடி ஒரு சின்னப் பெண் தன்னந்தனியே நடப்பது போல கற்பனையில் ஒரு தோற்றம் எழுந்து. அவனுள் அனுதாபத்தைத் தோற்றுவித்தது,

“ஆனால். அதையும். விதியே என்று இல்லாமல் ரசனையோடு பார்த்திருக்கிறாயே!” என்றான் அவன், சொல்லும்போதே. அவனுள் பரிதாபத்தை உருவாக்குவதற்காகத்தான் இப்படிச் சொன்னாளோ என்றும். யுகேந்திரனுக்குத் தோன்றியது,

ஆனால். அவள் வருத்தம். ஏக்கம் எதையும் காட்டவில்லையே, ரசித்துப் பார்த்த மகிழ்ச்சியோடுதானே கூறினாள் என்றும் அவனுக்குத் தோன்றும்!

கடைசியில். தன் மனதையே இரு கூறுகளாக்கி. ஒன்றோடொன்று முட்டி மோதும்படிச் செய்துவிடுவாளோ என்ற அச்சம்கூட. அவனுக்கு ஏற்படலாயிற்று,

அவள் மட்டுமே பேசினால்தானே. இப்படி?

யோசித்துவிட்டு. அவனும் தன் பங்குக்கு ஏதாவது கூறுவான், அப்புறம் இருவரும் சேர்ந்து சிரிப்பார்கள்,

இருவருமே வேறுவேறு தொழில்களில் இருந்ததால். வித்தியாசமாக அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளவும் முடிந்தது,. அது சுவாரசியமாகவும்
இருந்தது,

உண்மையைச் சொல்லப் போனால். அவனுக்குப் பிடித்தும் இருந்தது, அவளை விட்டு பிரிந்து சென்ற பிறகும். கண்ணும் முகமும் பளபளக்க சிவந்த உதடுகள் லேசாகப் பிரிந்து முத்துப் பற்கள் தெரிய சுப்ரியா பேசிய விதம் மனத்திரையில் அப்படியே நின்றது,

ஆனால். சீக்கிரமே இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தால்தான் சிவானந்தனைப் போல. அவனுக்குமே நல்லது என்று. யுகேந்திரன் தெளிவாக உணர்ந்தான்,

ஏனெனில். சிவானந்தனோடு செல்லில் பேசுவதை அவள் விடவும் இல்லை,

அதிலும் ஒரு தரம் “சாரி என்று தள்ளிப் போய்ப் பேசினாலும். “எல்லாம் உங்களுக்காகத்தான். சிவா,” என்று அவள் அவள் முடித்தது. அவன் காதில் தெளிவாகவே விழுந்தது,

ஆக. என்னதான் தினமும் யுகேந்திரனைச் சந்தித்து ஒட்டி உறவாடிக் கதை பேசினாலும். சுப்ரியா. சிவானந்தனையும் விட்டுவிடுவதாக இல்லை,

“ஒரே குதிரை மேல் மொத்தப் பணத்தையும் கட்டுகிறவன் முட்டாள்” என்று சொல்வதைத் தெரிந்து வைத்திருப்பாள் போல!

சொந்த வாழ்வு பற்றிக் கூடக் கொஞ்சம் அதிகமாகப் பேசினான், திருமணம் செய்துகொள்ளச் சொல்லிப் பெற்றோர். தாத்தா பாட்டி எல்லோரும் வற்புறுத்துவதை. ஒருநாள் சுப்ரியாவிடம் சொன்னான், அப்படியே. அது பற்றிய பேச்சு வளர்ந்தது,

முந்திய நாள் இரவு உணவின்போது. “நம் கடைக்குப் பைகள் தயாரித்துத் தருகிறாளே. அந்த சுப்ரியா போல ஒருத்தி மருமகளாக வந்தால். தொழில். வீடு  இரண்டின் எதிர்காலம் பற்றியும் கவலையற்று இருக்கலாம்!” என்று தந்தை சொன்னதையும். “அந்தப் பெண்ணைப் பற்றி நீங்கள் சொல்லச் சொல்ல. அவளை ஒரு நாள் வீட்டுக்குக் கூப்பிடலாமா என்றிருக்கிறது,” என்று தாயார் விரும்பியதையும் கூட.

அவன் மறைக்காமல் கூறினான்,

சுப்ரியா எப்படி எடுத்துக் கொள்கிறாள் என்று ஆராய்வதுதான் அவனது நோக்கம்,

ஆனால். கன்னங்கள் செம்மையுற. அவள் தரையைப் பார்க்க. அந்த வினாடியில். அவளை அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டும் போல எழுந்த வேகத்தை அடக்கிச் சமாளிப்பதற்குள். யுகேந்திரன் அரும்பாடு பட்டுப் போனான்,

அவன் ஈடுபட்டிருப்பது ரொம்பவும் ஆபத்தான முயற்சி என்று உணரும்போதே. அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகவும் இருந்தது, என்னதான் சிறந்த நடிப்பு என்றாலும். கன்னங்களில் சிவப்பைக் கூடவா. கொண்டு வர முடியும்?

அல்லது. அவனது கணிப்பில்தான் ஏதோ தவறோ? சுப்ரியா பாவம். மெய்யாக நல்லவள்தானோ என்றெல்லாம் எண்ணங்கள் தோன்றவும். யுகேந்திரனைக் கிலி பிடித்துக் கொண்டது,

இப்படியே போனால். அவள்தான் உலக மகா உத்தமி என்று தோன்றி. அவள் காலடியில் விழுந்து. மணந்துகொள் என்று கெஞ்சத் தொடங்கி விடுவானோ என்ற அச்சம்!

இன்னொருவன் என்றால். வானதியிடம் விஷயத்தைச் சொல்லி. எப்படியாவது உன் புருஷனைப் பிடித்துக்கொள் என்றுவிட்டு. சுப்ரியாவை விட்டு. எங்கோ ஓடியிருப்பான்,

ஆனால். யுகேந்திரன் பிடிவாதக்காரன், எடுத்த காரியத்தை இடையிலே விட. அவனால் முடியாது,. விடமாட்டான், இன்னமும் தங்கை மனம் நோகாமல். இதைச் சீக்கிரமே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையிலேயே நின்று. அவன் தீவிரமாக ஆலோசிக்கலானான்,

அவனது திட்டம்தான் சரி, ஆனால். எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல். அதை எப்படி நிறைவேற்றுவது? முக்கியமாக. அவனே சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாதே, அதை விடவும். சுப்ரியாவின் பேராசைக்கு அடி விழ வேண்டுமே தவிர. மற்றபடி எப்படியோ போகட்டும் என்று அவளுக்கும் ஆபத்து நேரவும். விட்டுவிட முடியாது!

நூறு சாவீதமாய். அப்படிப்பட்ட நிச்சயத்தைத் தரும் இடம் வேறு எங்கே கிடைக்கும்? யோசித்து. யோசித்து. மண்டையைப் பிய்த்துக் கொண்டான் அவன்,

அப்போதுதான். கடவுளாகப் பார்த்துத் தந்தது போல. அதற்கான

வாய்ப்பு அவனுக்கு விரைவிலேயே கிடைத்தது,

இது. அவன் முற்றிலும் எதிர்பாராத வாய்ப்பு அல்ல, அதிரடி நடவடிக்கை என்று  அவன் முதலில் இருந்தே திட்டமிட்டதும். இதைத்தான், கிடைக்காதோ என்று. வேறு யோசித்து மலைப்புறும் நேரம். அவன் விரும்பிய வாய்பே கிட்டியது,

அவனுடைய தந்தை வழித் தாத்தாவுக்கு நகர்ப்புறத்துச் சந்தடி பிடிக்காது, ஏற்ற மனைவி, எனவே. அண்ணன் தம்பிகளோடு பாகம் பிரித்ததும். மகன் விரும்பியபடி தொழில் செய்வதற்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டு. நகரை விட்டுத் தொலை தூரத்தில். ஒரு பெரிய இடத்தை வாங்கி. நட்ட நடுவில் ஓர் அழகான வீட்டையும் கட்டிக் கொண்டார், பக்கத்து கிராமத்தில் இருந்து. வேலைக்கு ஆட்கள் வந்து செய்துவிட்டுப் போவார்கள், தங்கள் காவலுக்கு என்று அவர்கள் முழுதாக நம்பியது. நாலு காவல் நாய்களைத்தான்,

பேச்சுத் துணை என்ற பெயரில். தாத்தா பாட்டி வயதிலேயே இன்னொரு ஜோடியும் அங்கேயே வசித்தனர், அவர்கள் கண்களில் மின்னலடிப்பது. யுகேந்திரனைப் பார்க்கும் போது மட்டுமே, அவன் என்ன சொன்னாலும். அவர்களுக்கு அது வேதம்!
அவ்வப்போது.  அவர்களையும் கூடக் கூட்டிச் செல்வதும் உண்டு,

கூடவே. நிறையப் பாதுகாப்புக் கருவிகளையும் பொருத்தி வைத்திருந்தார், குடுமபத்தினர் மட்டுமே கையாளத் தெரிந்த ரகசியம். அது,

தாத்தா பாட்டி. அடிக்கடி. எங்காவது டூர் போவார்கள், நாலைந்து நாட்கள் வீடு பூட்டிக் கிடக்கும், நாய்களுக்கு மட்டும். தினமும் ஒருவன் வந்து உணவு வைத்துவிட்டுப் போவான், அதுவும் கூட. வெளிச் சுற்று மதிலில் வைத்திருக்கும் தட்டு ஒன்றில் வைத்துவிட்டுப் போய்விட வேண்டும், அதை எடுத்து உண்பது எப்படி உண்பது என்று. நாய்களுக்குப் பழக்கி வைத்திருந்தார்,

கூடமாட. அவருக்கு உதவி செய்யும் உரிமை. யுகேந்திரனுக்கு மட்டுமே உண்டு,

தாத்தாவும் பாட்டியும். அது போன்ற பயணம் ஏதேனும். கிளம்ப மாட்டார்களா என்றுதான். யுகேந்திரன் ஆவலாகக் காத்திருந்ததும்,

பாட்டியுடைய பழைய சினேகிதியுடைய பேத்திக்குத் திருமணமாம், திருமணம் நடப்பது. கர்நாடகாவில், திருமணத்துக்குப் போய்விட்டு.

அப்படியே. மைசூர். பிருந்தாவனத்துக்கும் போய் வரலாம் என்று பெரியவர்கள் கிளம்பினார்கள், உடுப்பி வரை கூடப் போய்விட்டுத் திரும்பக் கூடும், அது. அவர்களது சித்தம் போகிற போக்கு!

ஆனால். எப்படியும் நாலு நாட்கள் வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள்! "எங்கள் தந்தை வழித் தாத்தா. பாட்டிதான் குடும்பத்தில் மூத்தவர்கள், எதற்கும் அவர்கள் ஆசிதான் முக்கியமாகக் கருதப்படும்," என்றான் ஒரு நாள்,

அன்று மாலையே செல்லில் சுப்ரியாவை அழைத்து. "நாளைக் காலையில் கிளம்பி. என் தாத்தா வீட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறேன், ரொம்ப முக்கியமான பயணம், என்னோடு வர முடியுமா? சென்னையைத் தாண்டினால். ஒரு மணி நேரத்துக்குள். தாத்தா வீட்டுக்குப் போய்விடலாம்," என்று அழைத்தான்,

"ஜிவ்"வென்று இறக்கை கட்டிப் பறப்பது போன்ற உணர்வு சுப்ரியாவுக்கு!

என்னென்னவோ இனிய கனவுகளில். அவள் ஆகாசக் கோட்டையே கட்டிவிட்டாள்!

வீட்டுப் பெரியவர்களிடம் அழைத்துப் போவது என்றால் அதன் பொருள் திருமணம்தானே?

தொழில் நன்கு வளரும்வரை. திருமணம் கூடாது என்றதெல்லாம். சுப்ரியாவின் நினைவுக்கே வரவில்லை,

பெண்கள் தன் காலில் நிற்கத் தெரிய வேண்டும் என்று சொன்ன அவளுடைய பாட்டி கூட. யுகேந்திரனை மறுப்பார்களா. என்ன?

சுற்றுமுற்றும் பார்த்தாள், மற்ற யாரும் வரவில்லை, எனவே. அவளது தனி மேஜையறையைத் திறந்தாள்,

யுகேந்திரனின் படம் ஒன்றை அவளே வரைந்து. உள்ளே வைத்திருந்தாள், அதை எடுத்து. கன்னம் வருடி. உதட்டில் கைவைத்து. தன் உதட்டில் ஒற்றிக் கொண்டாள்,

வாயிலில் ஏதோ நிழலாடியதோ? சந்தேகமாகப் பார்த்தால். அங்கே யாருமில்லை,

எதற்கும் … என்று. படத்தை மறுபடியும் உள்ளே வைத்து மேஜையறையைப் பூட்டிவிட்டு அமர்ந்தாள்,

உள்ளத்தின் பரபரப்பு. அவளை வேலை செய்ய விடவில்லை,

ஆக. வீட்டுப் பெரியோரிடம். அவளைக் கூட்டிப் போகிறான்,

அவர்கள் சம்மதிப்பார்களா?

பெரும் போக்கானவர்கள்,. சில்லறைத்தனமாகக் காரணமற்று. எதற்கும் தடை சொல்ல மாட்டார்கள் என்று. யுகேந்திரன் சொல்லியிருக்கிறான்,

அப்படிப் பார்த்தால். யுகேந்தருடைய தந்தையின் மனக்குறை. விரைவிலேயே தீரப் போகிறது, முதல் முறை பார்த்ததுமே. அவளிடம் சொன்னாரே!

வேலையைப் பார்க்கிறேன் பேர்வழி என்று. மேஜை மேல் இருந்த காகிதங்களை மேலும் கீழுமாக மாற்றி மாற்றி அடுக்கினாள்,

சற்றுப் பொறுத்துப் சாது முகத்துடன். வண்ணமதி வந்து சேர்ந்தாள்,

கூர்ந்து நோக்கியவளிடம். “பஸ் லேட்டுக்கா, அப்படியே. ஷெட்டுக்கும் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன், இன்றைக்கு சாயங்காலம். பத்து பீஸ் ரெடியாகிவிடுமாம், ஆரஞ்சும் மஞ்சளுமாக. ரொம்ப அழகாக வந்திருக்கிறதுக்கா!” என்றாள் மூச்சு விடாமல்!

சற்று முன் வந்து எட்டிப் பார்த்தாயா என்று கேட்க வாயெடுத்துவிட்டு. கேளாமலே சுப்ரியா நிறுத்திக் கொண்டாள்,

,ஆமாம் என்றாலோ. அதற்கு மேல் பேச மடியாது, இல்லையே ஏன் கேட்கிறாய் என்று காரணம் கேட்டாலோ. அதற்கும் சரியாகப் பதில் சொல்ல முடியாது, இதுவோ. சற்று அதிகப்படி மூளை உடையது!

யுகேந்திரனோடு எங்கே செல்லப் போகிறாள் என்று வெளிப்படையாகச் சொல்லக் கூட. சுப்ரியாவுக்குத் தயக்கமாக இருந்தது,

ஒருவேளை எதிர்பாராத விதமாக. ஒரு வேளை யுகேந்திரனுடைய மூத்த தலைமுறைக்கு. அவளைப் பிடிக்காமல் போய்விட்டால்?

அப்புறம். அவர்களை எதிர்த்து. என்னை மணந்துகொள் என்று. சுப்ரியா ஒருநாளும் கேட்கப் போவது இல்லை, அந்த மாதிரி யுகேந்தரே யோசனை பண்ணினால்கூட. அவள் அதை மறுத்து விடுவாள்,

குடும்பத்தை எதிர்த்துச் செய்த ஒரு திருமணமும். அது எத்தகைய தோல்வியில் முடிந்தது என்றும் அவளுக்கு நன்றாகத் தெரியுமே!

யுகேந்திரன் அந்த மாதிரி ஆள் அல்ல என்றாலும். பிரச்சினைக்கு நடுவில் திருமணம் செய்வதை விட. இப்படியே இருந்துவிடுவதே நிம்மதி

என்று அவள் எண்ணினாள்,

அவளுக்கு இப்போது என்ன குறை? லாபம் தரும் தொழில்,. பிரியமான தோழி. கொஞ்சம் அதிகப்பிரசங்கி என்றாலும். அன்பான தங்கை. தாத்தா பாட்டி!

ஆனால். யுகேந்திரனைப் பார்க்கவும். அவன் குரலைக் கேட்கவும் மனம் ஏங்கவில்லை என்றால். அவளுக்குக் குறையே கிடையாதுதான்!

செல் ஒலிக்கவும் பரபரப்புடன் எடுத்தாள், அவனேதான்!

“கீழே வந்துவிடுகிறாயா. சுபா? போகும் வழியில் ரோடு அவ்வளவு நன்றாக இராது, அதனால். பயணம் இலகுவாக இருப்பதற்காகப் பெரிய காரில் வந்திருக்கிறேன், காரைப் பார்க் செய்து. மேலே வந்து. மறுபடியும் எடுப்பதைவிட. நீ இறங்கிக் காருக்கு வந்துவிட்டால். வசதியாக இருக்கும்,” என்றான் யுகேந்திரன்,

“இவ்வளவு விளக்கம் சொல்ல வேண்டுமா? கீழே வா என்றால். வந்துவிட்டுப் போகிறேன், வண்ணமதியிடம் சில வேலைகளைச் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்,” என்றாள் சுப்ரியா,

தூசி தட்டும் பாவனையில் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த வண்ணமதியை அழைத்து. “நான் வெளியே போவதால். பிரதியிடம். ஆஃபீசைப் பார்த்துக் கொள்ளச் சொல்லு, நீயும். அவள் கூடவே இருந்து. அவள் சொல்வதை மட்டும் செய்,” என்று சற்றுக் கண்டிப்பான குரலில் கூறிவிட்டு எழுந்தாள்,

வீண் பேச்சைத் தவிர்ப்பதற்காகத்தான். சுப்ரியா அந்தக் குரலைப் பயன்படுத்தியதே, ஆனால். அதையும் மீறி. “அக்கா. நீ எங்கே போவதாகச் சொல்லட்டும்?” என்று. ரொம்பக் கெட்டிக்காரத்தனம் போலக் கேள்வியைக் கொஞ்சம் மாற்றிக் கேட்டாள் சின்னவள்,

சுற்றி வளைத்த கேள்வியும். ஓரக் கண்ணில் கூர்மையும் சிரிப்பு மூட்ட. “அதைத் திரும்பி வந்து. நேரிலேயே சொல்வேன் என்று கூறிவிடு,” என்று முடித்தவள். கைப்பையுள் செல்ஃபோனை வைத்தபடி கிளம்பிவிட்டாள்,

சாலை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவு. அவளைக் கண்டதும் திறக்கவும். ஓடிப்போய் காரில் ஏறுவதற்காகக் குனிந்தவள். ஒரு கணம் திகைத்து நின்றாள்,

யுகேந்திரன் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடி. அவன் முகத்தையே மாற்றிக் காட்டியது,

அவளது தயக்கத்தை உணர்ந்தவன் போல. கண்ணாடியைக் கழற்றி. அவன் சிரிக்கவும். சந்தோஷ முறுவலோடு காரில் ஏறிக்கொண்டு. "ஏன் இப்படி?" என்று கேட்டாள்,

"நெடுஞ்சாலை வழியே செல்லும்போது. வெய்யில் அதிகமாகத் தெரியும், உன்னிடம் ... வேண்டுமானால். வழியில் வாங்கிக் கொள்வோமா?" என்று கேட்டான் அவன்,

"ஊகூம், கைப்பையிலேயே ஒன்று கிடக்கும், ஆனால். கண் கூசும் அளவு வெய்யில் வரும்போது அணிந்துகொள்கிறேன்," என்றாள் அவள்,

யுகேந்திரன். அவனுடைய பெரியவர்களைப் பற்றி ஏதாவது விவரம் சொல்வான் என்று. சுப்ரியா எதிர்பார்த்தாள், ஆனால். அவன் சாலையிலேயே கவனமாகக் காரை ஓட்டவும். "சுரபி" திறப்புவிழா பற்றி யோசனையில் இருக்கிறானோ என்று தோன்ற. அவளும் மௌனம் காத்தாள்,

அவன் சொன்னது போல. நெடுஞ்சாலையில் இருந்து விலகியதும் ரோடு மோசமாகவே இருந்தது, அவன் பாதையில் கவனமாக ஓட்ட. அவள். கைப்பையில் இருந்த சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்து. அதிலிருந்த கணக்குகளைச் சரி பார்க்கலானாள், எங்கேனும் காத்திருக்க நேர்ந்தாலும். அவள் செய்வதுதான்,

சற்று நன்றாக இருந்த ஒரு கிளைப்பாதை வழியே கார் செல்லவும். சுப்ரியா நிமிர்ந்து பார்த்தாள்,

ரிமோட் கண்ட்ரோல் மூலம் திறந்த கதவு. கார் உள்ளே சென்றதும். தானாகவே பூட்டிக் கொண்டது,

"நல்ல யோசனைதான், ஆனால். திருடர்கள். மதில் மேல் ஏறி. உள்ளே குதித்தால்?" என்று கேட்டாள் அவள்,

ஓடி வந்து. அவனது கையசைவில் விலகிச் சென்ற நாய்களைக் காட்டிஅந்த நாலுக்கும். ஒவ்வொன்றுக்கும் அரைக்கிலோ சதையைத் தானம் செய்ய வேண்டியதுதான்! ரொம்பவும் பயிற்சி கொடுக்கப்பட்ட நாய்கள், எந்த வகையிலும் வசியம் செய்ய முடியாது," என்றபடி காரை விட்டு இறங்கினான்,

அவளது பெரிய கைப்பையைக் கை நீட்டி வாங்கிச் சுமந்தபடி. வீட்டினுள் அவளைக் கூட்டிச் சென்றான்,

வீட்டுக்கதவும். கை எட்டும் உயரத்தில் வைத்திருந்த "எலக்ட்ரானிக் டிவைசி"ன் பட்டன்களை அவன் உரியவாறு அழுத்தியதும் திறந்து. அவர்கள் உள்ளே போனதும் மறுபடி மூடிக்

கொண்டது,

வீடு அரவமற்று இருந்ததைக் கண்டு. “தாத்தா வீடு என்றீர்கள். யாருமே இல்லையே!” என்று கேட்டாள் சுப்ரியா,

“தாத்தா வீடு என்றேனே தவிர. தாத்தா இருக்கிறார் என்று சொல்லவில்லையே! இப்போதும். இது தாத்தா வீடுதான்!” என்றான் அவன். அமர்த்தலாக,

“அச்சோ. அவர்கள் யாரும் இல்லையா? வாருங்கள்,. நாம் போய்விடலாம், யாரும் இல்லாத வீட்டுக்கு வந்தோம் என்று வெளியே தெரிந்தால் நன்றாக இராது,” என்று திரும்பினாள் அவள்,

“யாருக்கு?” என்று கேட்ட அவனது குரலில் பிசிரடித்தது,

“இரண்டு நாட்கள் இங்கேயே இரு,  அப்போதுதான். உன் அருமைக் காதலனுக்கு உன் விஷயம்  அதாவது. உன் லட்சணம் புரிந்து. உனக்குத் தலை முழுகுவான்,” என்று. அதே குரலில் கூறி முடித்தான் யுகேந்திரன்!

ஒன்றுமே புரியாத திகைப்புடன் அவனைப் பார்த்தாள். அவள்! உணர்ச்சி துடைத்த முகத்துடன் அன்னியனாக நின்றான் அவன்!

# அத்தியாயம் -8

திகைப்புடன் யுகேந்திரனைப் பார்த்த சுப்ரியாவுக்கு. அவனது பேச்சில். தலை கால் ஒன்றும் புரிவதாக இல்லை!

அவளை. அவன் கூட்டி வந்த நோக்கம் என்ன? இப்போது பேசுகிற பேச்சு என்ன?

அல்லது. அவனது நோக்கம் பற்றி. உரிய வார்த்தைகளால். அவன் சொல்லவே இல்லையோ? தப்பான ஊகத்தைத் தரக் கூடிய வார்த்தைகன் மட்டுமேதானோ?

வயிற்றினுள் ஏதோ பிசைய. “நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். யுகேந்திரன்?” என்று. இயன்றவரை அமைதியைக் காட்டிக் கேட்டாள் அவள்,

“என்னவா? கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒருவனின் பெரிய காரில். நீயாகவே வந்து ஏறிச் சென்றதை. உங்கள் கட்டிட வாட்ச்மேன். இன்னும் அங்கங்கே இருந்த எல்லோரும் பார்த்திருக்கிறார்கள், உன்னைக் காணோமே என்று யாரேனும் தேடினால் ...போலீசுக்கே போனாலும் கூட. பார்த்தவர்கள் இந்த விவரம்தான் சொல்லுவார்கள், அப்படியே கார் நம்பர். இன்னும் ஏதாவது என்று என்வரை வந்து விசாரித்தாலும். “அம்பாஸ்கை” பக்கம் இறக்கிவிட்டதாகச் சொல்லிவிடுவேன், இரண்டு நாட்கள் கழித்து. நீ திரும்பிச் செல்லும்போது. உன் காதலன் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான், உன் திசைக்கே ஒரு கும்பிடு போட்டு ஓடி விடுவான்! அவ்வளவுதான் விஷயம்,” என்று எகத்தாளமாக முடித்தான் யுகேந்திரன்,

அவனது பேச்சோடு. பேசும்போது அவன் முகத்தையும் சுப்ரியா கூர்ந்து கவனித்தாள்,

விளையாட்டு. முட்டாளடிப்பது போல எதுவும் அவன் முகத்தில் அணுவளவு கூட இல்லை, அப்படியானால். அவளைப் பற்றி இவ்வளவு தவறான அபிப்பிராயமா. அவனுக்கு? இவனைப் போய் என்னவெல்லாம் நினைத்துவிட்டாள்!

அவளைப் பெற்ற தாய் பட்ட சூடு போதாது? ஓர் ஆண்மகனை நம்பிய மடத்தனத்தை அவளும் செய்துவிட்டாளே!

“சே! என்ன உளறல். இது? எனக்குக் காதலனும் கிடையாது, கீதலனும் கிடையாது,” என்றாள் ஆத்திரமாக,

குரல் காட்டிய கோபத்துக்கு நேர் விரோதமாக. ஐயோ. உன்னைத்தானே அந்த மாதிரி நினைக்கத் தொடங்கினேன் என்று மனது தவித்தது,

அவன் ஏளனமாக உதட்டைப் பிதுக்கினான்,

“என்ன. மாட்டிக் கொண்டதால் மாற்றுகிறாயா? கல்யாணம் ஆன ஒருவனோடு தொடர்பு வைக்க. உனக்கு வெட்கமாயில்லை? அதற்குரிய பாடத்தை. நீ கற்றுத்தான் ஆக வேண்டும்! இரண்டு நாட்கள். இங்கேயே தன்னந் தனியே கிடந்து. தவி, அப்போதுதான். நீ செய்தது. எவ்வளவு பெரிய குற்றம் என்று உனக்குப் புரியும்!”

“திரும்பத் திரும்ப. அதே உளறலா? நீங்கள். என்னவோ என்னைப் பற்றித் தப்பாக எண்ணி... , அல்லது. வேறு யாராகவோ என்னை நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள் என்று தோன்றுகிறது. யுகேந்திரன், அப்படித்தான் இருக்க வேண்டும்! விஷயம் என்னவென்று சொல்லுங்கள், யார் என்னைப் பற்றி என்ன சொல்லி. இந்தத் தப்பான எண்ணம் வந்தது என்று சொல்லுங்கள், இருவரும் பேசி. அதற்கான விளக்கத்தைக் கண்டுபிடிப்போம், சும்மா. இப்படி அநியாயமாகக் குற்றம் சுமத்தக் கூடாது. யுகேன் ...யுகேந்திரன்,” என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு. விவரம் கேட்டாள் சுப்ரியா,

எவ்வளவு நிமிர்வோடு பேசுகிறாள் என்றிருந்தது. அவனுக்கு!

“நேர்கொண்ட பார்வையும். நிமிர்ந்த நன்னடையும். நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் ...” என்று தப்பே அறியாத தோற்றமும். பேச்சும்! எப்படி முடிகிறது!

ஐயா பாரதியாரே. இப்படிப்பட்ட பெண்களைப் பற்றி ஒன்றுமே எழுதாமல் போய்விட்டீர்களே! வள்ளுவர்கூடப் பத்துப் பாட்டுகளில். இவர்களைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார், நீங்கள் பராசக்தியாகக் காட்டிப் பெருந் தவறு செய்துவிட்டீர்களே என்று மனதுள் குமுறினான் யுகேந்திரன்,

இன்னொருவர் சொல்லக் கேட்டு. அதை அப்படியே நம்பிச் செயல்பட. அவன் என்ன முட்டாளா? இவளைப் பேசவிட்டால். முட்டாளேதான் என்று. அவன் வாயாலேயே ஒத்துக்கொள்ள வைத்துவிடுவாள் போல இருக்கிறதே! அன்று நீங்கள் பார்த்தது. தன்னைப் போல இன்னொருத்தியை என்று. சத்தியமே செய்யக் கூடும்!

பொதுவாக. அவன் திடசித்தன்தான், ஆனால். சுப்ரியாவிடம் மட்டும். மனது தடுமாறுவதைத் தனக்குத் தானே. அவன்

ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்,

ஊகூம், இவளோடு நின்று பேசுவது பெரிய தப்பு, இவள் முகத்தைப் பாராமல். திட்டமிட்டபடி செய்ய வேண்டியதுதான்,

சுப்ரியாவை இங்கே கூட்டி வந்ததில். பாதித் திட்டம் நிறைவேறிவிட்டது, இரண்டு நாட்கள். இவளை இங்கே பிடித்து வைப்பதில் மீதியும் நிறைவேறிவிடும், இடையில். பை வேலையை முடிக்காமல். "ஸ்பெஷல்" நிறுவனக்காரி. பந்தாக் காரில் ஒருவனோடு சுற்றப் போய்விட்டாள் என்று சிவானந்தன் காது கேட்க. வேறு யாரிடமாவது சொல்ல வேண்டும், அவ்வளவுதான், வேலை முழுதாக முடிந்துவிடும்,

மனைவியின் அருமையும். மற்றவளின் சிறுமையும் நன்கு புரிந்து. சிவாவும் திருந்திவிடுவான்!

அவனது யோசனை செய்வதைத் தனக்கு சாதகமாகக் கருதி. "உண்மை. யுகேந்திரன், எந்தப் பிரச்சினையையும். நன்கு அலசி ஆராயும்போதுதான். அதன் மெய்த்தன்மை வெளிப்படும், சொல்லுங்கள். எதனால் இப்படித் தப்பாக நினைத்தீர்கள்? யார் என்ன சொன்னார்கள்?" என்று மீண்டும் விவரம் கேட்டாள் அவள்,

என்ன இவள். தன் உத்தமி ரோலை விடுவதாகவே இல்லையா? அவனைப் பார்த்தால். அப்படி ஒரு மாங்காய் மடையனாகவா. தெரிகிறது?

முகத்தில் சினத்தைக் காட்டி. "யார் யாரோ சொல்வதை வைத்து முடிவெடுக்க. நான் முட்டாள் அல்ல. சுப்ரியா, அதனாலேயே. உன் பேச்சையும். நான் மதிக்கப் போவதில்லை, இப்போது நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதைக் காது கொடுத்துக் கேள், அல்லது. அடுத்த இரண்டு நாட்களும். நீ பட்டினி கிடக்கவும் நேரிடலாம், ..." என்றவனின் பேச்சில். சுப்ரியா ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள்,

"அடுத்த இரண்டு நாட்களும் நான் இங்கே இருக்கப் போவதும் இல்லை,. அதனால். பட்டினி கிடக்கவும் நேராது, உங்களை நம்பி. இவ்வளவு தூரம் வந்தது. எவ்வளவு முட்டாள்த்தனம் என்று தெரிந்த பிறகும். உங்கள் விருப்பப்படி. இங்கேயே உட்கார்ந்திருப்பேன் என்றா நினைத்தீர்கள்? முதலில் இங்கிருந்து ... " என்றவளை இப்போது . யுகேந்திரன் இடையிட்டுத் தடுத்தான்,

"....... வெளியே போக முயற்சி செய்யாதே என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்... நாய்களைப் பார்த்தாய் அல்லவா? இங்கிருந்து.

வீட்டு மனிதர்களின் துணை இல்லாமல் தப்ப முயற்சி செய்தால். நாலும் பாய்ந்து குதறிவிடும், அப்புறம். ஆசைக் காதலனின் அணைப்புக்குப் பதிலாக. வேட்டை நாய்களின் குதறல்தான் கிட்டும், என்ன? எப்படி வசதி? ஒருவேளை. அதற்கு. இது பரவாயில்லைதானோ?”

அவனை வெறித்துப் பார்த்தாள் சுப்ரியா,

என்னவெல்லாம் கேவலமாகப் பேசுகிறான்! உள்ளூர அவனைப் பார்க்க ஆசை. அவனோடு பேச ஆசை என்று. அவன் அழைத்தபோதெல்லாம் கூடச் சென்று. தன்னைத்தானே. அவளே அல்லவா. தாழ்த்திக் கொண்டாள்!

கொதிப்புடன். “என்னை என்ன படிப்பறிவே இல்லாத பாமர முட்டாள் என்று எண்ணினீர்களா? வரும் வழியில் செல்ஃபோன் டவர் பார்த்தேன், இந்த இடம். உலகின் எந்த மூலையில் இருந்தாலும். என்னைக் கண்டுபிடித்துக் கூட்டிச் செல்வது. இயலாத காரியம் அல்ல! அப்புறம். நீங்கள் கூட. சந்தோஷமாக சிறைக் கம்பிகளை எண்ணிக்கொண்டு பொழுதைப் போக்கலாம்,” என்று. அவனைப் போலவே ஏளனமாக முடித்தாள்,

உதட்டைப் பிதுக்கினான் யுகேந்திரன், “டவரைப் பயன்படுத்த. முதலில் செல்ஃபோன் வேண்டாமா?” என்று கையைத் தூக்கிக் காட்டிவிட்டு. அவளது செல்லைத் தன் பான்ட் பாக்கெட்டினுள் போட்டுக் கொண்டான்,

“யுயுகேந்திரன். என் செல் ... “

“ஆமாம்மா, உன் செல்ஃபோனேதான், ரொம்பப் பெருந்தன்மை மிக்க கனவானாக. பளுவான உன் கைப்பையைத் தூக்கி வந்தேன் என்று எண்ணினாயா? பாவம்! பைக்குள். இந்த மாதிரி. வேறே எதுவும் இல்லவும் இல்லை, பார்த்துவிட்டேன், இந்தா!” என்று அவளது கைப்பையை. அவளது கரத்தில் திணித்தான். யுகேந்திரன்,

முதல் தடவையாகப் பேச்சிழந்து திகைத்தாள் சுப்ரியா, அவளது துணிச்சல். தன்னம்பிக்கை எல்லாம் கைவிட்டுப் போக. என்ன செய்வது என்று ஒன்றுமே தோன்றாத திகைப்பு!

அவள் முகத்தைப் பார்த்ததும். குத்தலாக ஏதோ சொல்ல வாயெடுத்தவன். எதுவும் பேசாமலே. சட்டெனத் திரும்பிக் கொண்டான்,

செத்த பாம்பை அடிப்பதில். என்ன வீரம் இருக்கிறது?

எப்போதுமே துடிப்பாக இருப்பவள். இப்படிச் செயல் இழந்து

நிற்பதைக் காண. அவன் கொக்கரிக்க வேண்டும், ஆனால். வேதனையாக அல்லவா. இருக்கிறது!

ஆனால். இது தவிர வேறு வழி ஏது? இதுவுமே. அவளால் நேர்ந்ததுதானே?

மெல்லத் திரும்பி. "உள்ளே ஃபிரிஜ்ஜில். பால். சீஸ். இது போல இருக்கும், நானும் சிலது வாங்கி வந்தேன், காரில் இருக்கிறது, எடுத்து வருமுன். ஏதேனும் அசட்டுத்தனம் செய்ய வேண்டாம், நாய்களைப் பற்றி நான் சொன்னது. மிகை அல்ல," என்று அவளிடம் எச்சரித்துவிட்டு. மறுபடியும் வெளியே திரும்பி[யவன் சட்டென விறைத்தான்,

சுற்று மதில் கதவு திறக்கிறதே!

தாத்தா ... அல்லது. அப்பா!  வேறு யாரிடமும் "ரிமோட் கீ " கிடையாது, ஆனால். யாரானாலும். இந்த நேரத்தில். இங்கே ஏன் வந்தார்கள்?

தலையை உலுக்கி விட்டுக்கொண்டு. சுப்ரியாவைப் பார்த்தான்,

அதற்குள். அவளும் அருகே வந்து நின்று. வெளியே பார்த்தாள்,

வெளியே சில முதியவர்கள். யுகேந்திரனின் காரைக் காட்டி. பரபரப்புடன் ஏதோ பேசிக்கொள்வது தெரிந்தது, தன்னை மீறிக் கிளுக்கிச் சிரித்தாள் சுப்ரியா!

"பேரப்பிள்ளை மகா உத்தமன் என்று எண்ணிக் கொண்டிருப்பார்களே. பாவம்!" என்றாள் பழைய திடம் திரும்பிவிட்ட குரலில், "இப்போது அவர்களிடம் என்ன சொல்வதாக உத்தேசம்?" என்று ஏளனமாகக் கேட்டாள்,

அவசரமாக அவளைப் பார்த்தான். அவன்,

தன்னையறியாமல் கண்கள் கெஞ்ச. "இதோ பார். வயதானவர்கள், என் மேல். ரொம்பப் பிரியம், அனாவசியமாக வருத்தப்படுத்த வேண்டாம், சு சும்மா பார்க்க. அவர்களைப் பார்க்க வந்ததாகச் சொல்ல ...சொல்லப் போகிறேன், தயவு பண்ணி. மறுத்துப் பேசாதே," என்றான் வேக வேகமாக,

காரைப் பார்த்துவிட்டு. வீடு நோக்கி நடக்கத் தொடங்கியவர்களை எதிர்கொள்ளத்திரும்பி ஓர் எட்டு எடுத்து வைத்தவனைத் தோளில் அழுத்தமாகக் கைவைத்து நிறுத்தினாள் அவள்,

"நீங்கள் சொல்வதை. இனி நான் ஏன் கேட்க வேண்டும்? ம்?" என்று. புருவம் உயர்த்தி. அலட்சியமாகக் கேட்டாள்,

கத்திக் கூர்மையுடன் நோக்கி. “நீ கேட்கும் விலை கிடைக்கும், மாறிப் பேசினாயானால் ...” என்று மிரட்டலாகத் தொடங்கியவன். “என்ன செய்துவிடுவாயாம்” என்பது போன்ற அவளது பார்வையில் இறங்கி. “ப்ளீஸ்1” என்றான்,

அதற்கு மேல் அவகாசம் இல்லாமல். திறக்கத் தொடங்கிவிட்ட வாயில் கதவை நோக்கி விரைந்தான்,

குடும்பத்தின் மூத்த பேரனைப் பார்த்ததும். வீட்டுப் பெரியவர்கள் மட்டுமின்றி. பின்னோடு வந்தவர்களின் முகங்களும் ஸ்விட்ச் போட்டாற்போல. மகிழ்ச்சியோடு மலர்ந்தன,

“ஏய்ய கண்ணா என்னடா திடீரென்று ” என்று மகிழ்ச்சியோடு உள்ளே விரைந்தவர்களின் நடை சட்டென நின்றது,

மலர்ந்த முகங்களில் அதிசயத்தோடு. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்,

காரணம் . பின்னோடு வந்த சுப்ரியாதான் என்பது. யுகேந்திரனுக்குப் புரியாமல் இல்லை,

சும்மாவே அவனது திட்டம் குளறுபடி ஆனது மட்டுமின்றி. கடைசியாக சுப்ரியா போட்ட மிரட்டல் குண்டும் சேர்ந்து. அவனைத் திணறடித்துக் கொண்டிருந்தன,

அவளை என்ன சொல்லி அறிமுகம் செய்வது? என்ன சொன்னால். அவள் முறுக்கிக் கொள்ளாமல். ஒத்துப் போவாள்? அவள் மட்டும் உண்மையைச் சொன்னால். ...

அவன் யோசித்து முடிக்குமுன். சந்தோஷ முகத்துடனேயே. “இவள் யார் கண்ணுப்பா?” என்று. பாட்டி கேட்டேவிட்டாள்,

சட்டெனப் பதில் சொல்ல முடியாமல் சற்றுத் திணறிவிட்டு. “இஇவள் பெயர் சுப்ரியா. தொழிலில் பபழக்கம், நம் புது “சுரபி”க்குத் திறப்பு விழாவுக்காகப் பை செய்கிறாள், நம் வீட்டைக் காட்ட ...உஉங்களைக் காட்ட அழைத்து வந்தேன்,” என்று திணறலை ஒருவாறு சமாளித்துச் சொல்லி முடித்தான்,

இதில் மறுப்பதற்கு ஒன்றுமில்லையே என்று சிறு நிம்மதியோடு அவன் மூச்சு விடுமுன். “எங்களைக் காட்டவா? நாங்கள்தான் இங்கே இருக்க மாட்டோம் என்று உனக்குத் தெரியுமே! என்னமோ ... பேரன் குழப்புகிறானே ...,என்னம்மா? நீ சொல்லு,” என்று அவளிடம் நேரடியாகக் கேட்டார் தாத்தா,

“அது ... “ என்று அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள் சுப்ரியா,

என்னையா தப்பாக நினைக்க வைப்பாய் என்று. உள்ளூரக் கறுவியது. அவள் மனம்,

கண நேரத் தாமதத்தினால் அவனது மூச்சை நிறுத்திவிட்டு. இனிய குழப்பம் போல. படபடவென்று இமைகளைக் கொட்டினாள், “கொ கொஞ்ச நாட்களாகத்தான்      சுமார் ஒன்றரை மாதங்களாகத்தான் பழக்கம். தாத்தா, வீட்டுப் பெரியவர்கள் முடிவுதான். எல்லோருக்கும்,. உன்னை அறிமுகப் படுத்துகிறேன். வா என்று கூட்டி வந்தார்., இங்கே வந்து பார்த்தால் ... “ என்று. வெட்கப் புன்னகையோடு தலையைக் குனிந்து கொண்டாள்,

சின்னவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக. ஈசுவரமூர்த்தி சிரித்தார்,

“ஓஹோஹோ! அப்படியானால். நாங்கள் பூஜை வேளைக் கரடிகள் என்று சொல்லு!” என்று தாத்தா மேலும் சிரிக்க. மற்றவர்கள் முகங்களும் சந்தோஷமாக மலர்ந்தன,

“அப்படியானால். நம் பையன் சொன்னவளா?” என்ற பாட்டி திலகவதி. அருகில் வந்து. சுப்ரியாவின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினாள்,

அவசரமாக. “ஐயோ. அப்படியில்லை பாட்டி, நீங்கள் இல்லை என்றதும். திரும்பிப் போகலாம் என்றுதான். நான் சொல்லிக் கொண்டிருந்தேன்!” என்றாள் சுப்ரியா,

இதுவும் பொய்யில்லை!

“அடடா! நான் உன்னைச் சொல்லவில்லையம்மா, இந்தப் பயலைத்தான் சொல்லுகிறேன்,” என்று மேலும் சிரித்தார் ஈசுவரமூர்த்தி,

கூத்தாக்கிவிட்டாளே என்று உள்ளூரக் கொதித்தபோதும். யுகேந்திரனுக்கு வெளிப்படையாக ஒன்றும் செய்ய முடியாத நிலை!

என்னதான் மறுத்துப் பேசி. வாதாடினாலும். இந்தப் பெரிய தலைமுறையை. உண்மையை நம்ப வைப்பது கடினம், சரி சரி என்று சிரித்த முகமாகவே கிளம்பி விடுவது மேல் என்று எண்ணி. “ஏதோ வேலை இருக்கிறது என்றாள், எனக்கும். புது “சுரபி”யில். ஃபிட்டிங்ஸ் பார்க்க வேண்டும், அதனால். கிளம்பு      ” என்று அவன் தொடங்கும் போதே. சுற்று மதில் கேட். மறுபடியும் திறந்தது,

“இன்னும் யா      ர்?” என்று சிறு எரிச்சலுடன் சுப்ரியா எண்ணமிடும்போதே. நுழைவாயில் திறந்து மூட. இன்னுமொரு கார்

உள்ளே வந்தது,

நல்ல சமயம் பார்த்து வந்தார்கள் என்று. யுகேந்திரன் உள்ளூரச் சலித்துக் கொள்ளும் விதமாக. அடுத்த காரில் வந்தவர்கள். அவனுடைய பெற்றோர்!

இப்போது. இவர்களிடம் என்ன சொல்வது? சும்மாவே. சுப்ரியாவைப் பற்றி. ஏதேதோ குறிப்புக் காட்டிப் பேசுகிறவர்கள்!

அவனை முந்திக்கொண்டு. ஈசுவரமூர்த்தி. மகனை வரவேற்றார்,

“ஏ …ய் பையா. வாவாவா, நல்ல நேரத்தில் வந்தாய்! உன் அருமைப் பிள்ளை என்ன வேலை செய்திருக்கிறான் பார்,” என்று. அவர்களது வெளியூர்த் திட்டம் ரத்தாகித் திரும்பி வந்ததையும். காதலர்களை அங்கே கண்டதையும் தெரிவித்தார்,

கேசவமூர்த்தியும். முகம் மலர. மனைவியிடம் திரும்பி. “எனக்கு அன்றைக்கே சந்தேகம், உன்னிடம் சொல்லவில்லை?” என்று அவளுக்கு நினைவூட்டினார்,

அவளும் சுப்ரியாவின் அருகில் வந்து. “நல்ல அழகாக இருக்கிறாள். புத்திசாலியும் கூட என்றாரம்மா, அவரிடம் பாராட்டுக் கிடைப்பது ரொம்ப அபூர்வம், ஒருநாள் உன்னைக் காட்டின பிறகோ. எனக்கும் ஓயாது. உன் நினைவுதான், இன்றைக்கு. அத்தை மாமாவுக்காக மளிகை எல்லாம் வாங்கி வந்தது நல்லதாயிற்று, உன் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள். சொல்லும்மா, முறைப்படி வந்து பெண் கேட்கிறோம்,” என்று. பிரியமாகப் பேசினாள்,

யுகேந்திரனை. அவனுடைய தாத்தா பாட்டியிடம் மாட்டி வைத்து வேடிக்கை பார்க்க எண்ணி. முதலில் பேசிய சுப்ரியா. இப்போது நிலைமை  கை மீறுவதை உணர்ந்து திகைத்தாள்,

சமாளிக்கும் வகை அறியாமல் அவளே திணறும்போது. யுகேந்திரன் வேறு அருகில் வந்து. அவளது காதருகே குனிந்து கிசுகிசுத்தான்,

“ஏதாவது செய். சுப்ரியா, இல்லாவிட்டால். இவர்கள் திருமண நாளையே குறித்து விடுவார்கள்,”

தன்னைப் பற்றி. அவன் சொன்னதை வெளிப்படுத்தாமல். எப்படி சமாளிப்பது என்று புரியாமல். சுப்ரியா திகைத்தாள்,

சொன்னாலோ. தன்னைத்தானே இறக்கிக் கொள்வதாகும், இந்த

யுகேந்திரன் தன்னை எப்படிக் கேவலமாக நினைக்கலாம் என்ற ஆத்திரமும் அவளுக்கு அடங்காத நிலை, இவன் எதற்காக இந்த அளவுக்குப் போனான் என்ற குழப்பமும் தீராத இந்த நேரத்தில். தன்னை இழிவுபடுத்தக் கூடிய ஒரு வார்த்தைகூட வெளி வரக் கூடாது என்று அவள் நினைத்தாள்,

இதை எப்படிக் கையாள்வது என்று அவள் யோசிக்கும்போதே. “அக்கா. நீங்கள் எல்லோரும் உட்கார்ந்து. தம்பி கல்யாணத்தைப் பற்றி. சாவகாசமாகப் பேசுங்கள், நானும் இவரும் எல்லோருக்கும் டீயும் பிஸ்கட்டும் கொண்டு வருகிறோம்,” என்று. குடும்பத்தினரைத் தனியே விட்டு. பெரியவர்களுக்குத் துணையிருப்போர் இருவரும் உள்ளே சென்றனர்,

அவர்களைப் பிரியமாகப் பார்த்து முறுவலித்துவிட்டு. “எல்லோரும் வாருங்கள், ஆன்ட்டி சொன்னது போல. நாம் உட்கார்ந்து பேசலாம்,” என்றழைத்தாள் யோகலட்சுமி,

அமர்ந்ததுமே. ஈசுவரமூர்த்தி கேட்டார், “என்னம்மா. என் மருமகளின் எண்ணம்தான் எங்களுக்கும், நீ என்ன சொல்லுகிறாய்?” என்று. திருமணப் பேச்சை விடாமல். மீண்டும் தொடங்கினார்,

கிடைத்த அவகாசத்தில். மேலே எப்படிப் பேசுவது என்று. சுப்ரியா ஒரு முடிவுக்கு வந்திருந்தாள், “வந்து ... நீங்கள் எல்லோரும். ரொரொம்பவும் வந்து. ஜெட் வேகத்தில் போகிறீர்கள். சார், நாங்கள் இங்கே வந்தது ...வந்தது எப்படி என்றால்... , உங்கள் பேரன். என்னிடம் பந்தாக் காட்டிப் பெருமைப்பட நினைத்து. இங்கே என்னை அழைத்து வந்தார் என்று நினைக்கிறேன், என் தாத்தாவுக்கு குன்னூர்ப் பக்கம் ஒரு பண்ணை இருக்கிறது, அது பற்றிச் சொன்னதும். உங்கள் இடத்தைக் காட்ட நினைத்தார் போல! மற்றபடி ஒன்றும் இல்லை!” என்றாள் மெதுவாக,

என்ன நினைத்து. அவனோடு வந்தாள் என்பதும். அடைந்த வேதனையும் அடிக்கடிக் குறுக்கிட்டபோதும். சுப்ரியா ஓரளவு. ஒருவாறு சொல்லி முடித்துவிட்டாள்,

ஆனால். “அப்படியா? எங்களால் நம்ப முடியவில்லையே!” என்றாள் யுகேந்திரனுடைய தாயார், “நாளைக்கே திருமணம் என்றாலும். ஆசையாக ஒத்துக் கொள்வீர்கள் என்றல்லவா. நாங்கள் நினைத்தோம்!” என்றாள் சந்தேகக் குரலில்,

இப்போது சுப்ரியா காட்டிய வழியில் யுகேந்திரன் பேசினான், “என்னம்மா நீங்கள், கொஞ்சம் பேசிப் பழகுமுன். அப்படியெல்லாம்

திருமணம் என்றுவிட முடியுமா? முதலில்.    இவளுக்குப் பெற்றோர் இல்லை,. வளர்த்த தாத்தா பாட்டியின் அபிப்பிராயம் தெரிய வேண்டும் அவர்கள் செய்யும் தொழிலைப் பெரிதாக நினைப்பவர்கள் ”

“ஓஹோ! முதலில் இங்கே எப்படி என்று நூல் விட்டுப் பார்க்க வந்தாய் போல! இங்கே எல்லோருக்கும். முழுச் சம்மதம், ஆனால். மற்ற கதை இங்கே விடாதே! அப்பா அன்றே காட்டினார். தெரியுமா? அன்றைக்குச் சித்தி பிறந்த நாளைக்காக ஒரு சேலை வாங்கிக்கொண்டு வந்தால். எதிர்ப்பக்கம் ஐஸ்கிரீம் பார்லரில். அப்பா சுப்ரியாவைக் காட்டினார், நீங்கள் இரண்டு பேரும். உலகை மறந்து பேசிக் கொண்டிருந்தீர்கள். தெரியுமா? ஐஸ்கிரீம் உருகி. ரோஸ்மில்க் ஆகிற வரைக்கும் பேசினீர்கள்...பிறகு. சிரித்துக்கொண்டே அதையும் தூக்கிக் குடித்துவிட்டுப் போனீர்கள், நாங்கள் காருக்குள் இருந்து பார்த்துக்கொண்டே இருந்தோம், அப்போதே எங்களுக்குத் தெரிந்துவிட்டது, நீ. உன் தாத்தா பாட்டியிடம் கேட்டுச் சொல்லும்மா,” என்றாள் யோகலட்சுமி,

சுப்ரியாவுக்கு நெஞ்சை அடைத்தது,

அன்று ஐஸ்கிரீம் பார்லரில். பேசுகிற உற்சாகத்தில். ஐஸ்கிரீமை மறந்ததும். பரவாயில்லை. உருகினாலும் ரோஸ் மில்க்தானே என்று சொட்டு விடாமல் இருவரும் குடித்ததும். அச்சுப் பிசகாமல் அப்படியே நினைவு வந்தது,

எவ்வ்வளவு சந்தோஷமாக இருந்தது! நினைத்து நினைத்து மகிழ்ந்தாளே!

ஆனால். யுகேந்திரன் பழி வாங்க மட்டுமாய். அவளிடம் நடித்திருக்கிறான்!  இவனையாவது. மணப்பதாவது?

ஆனால். இவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

சற்று யோசித்து. “என் தாத்தாவும் பாட்டியும் வயதானவர்கள்,. பெற்றோர் இல்லாததால். என்மீது மிகுந்த பிரியம் உள்ளவர்கள். ஆன்ட்டி, திடுமென அவர்களிடம் போய் நின்று. அதிர்ச்சி தரும்படி. எதையும்  பேச முடியாது, சந்தோஷம். துக்கம் எதுவானாலும் ஒன்றுதான், தாங்க முடியாது, அதனால். என்னால் முடிகிறபோது சொல்லுகிறேன்,” என்றாள் அவள்,

என்னதான் மகனுக்குத் திருமணம் செய்து பார்க்கிற ஆசை யுகேந்திரனுடைய பெற்றோருக்கு இருந்தாலும். வீட்டுப் பெரியவர்களின் ஆரோக்கியம் பற்றிக் கருத்தோடு சுப்ரியா கூறியதை

அலட்சியப்படுத்த. அந்தப் பெற்றோருக்கு மனம் வரவில்லை, தாத்தா பாட்டியும் அதனாலேயே பேசாதிருந்தார்கள்,

டீயும் பிஸ்கட்டும் கொண்டுவந்து தந்த முதிய ஜோடி "என்ன தம்பி. ஏமாற்றிவிட்டியே!" என்று வருத்தம் காட்டியபோதும். "அப்படியில்லை. காமாட்சி, வீட்டுப் பெரியவர்கள் மேல். சுபாவுக்கு எவ்வளவு அக்கறை. பார்!" என்றாள் பாட்டி,

அடுத்துத் தாத்தா பாட்டியைப் பார்க்கப் போகிறபோது. அவளது திருமணம் பற்றிக் கட்டாயம் பேசி அனுமதி வாங்கி வரவேண்டும் என்ற வற்புறுத்தலோடு. வீட்டுப் பெரியவர்கள். சுப்ரியாவுக்கு விடை கொடுத்தனர்,

திரும்பிச் செல்லும்போது. யுகேந்திரனும். அவளிடம் அது பற்றிப் பேசினான், ஆனால். வேறு விதமாக,

"ரொம்ப நாள் தள்ளாமல். கொஞ்சம் சீக்கிரமாகவே. உன் தாத்தா பாட்டி.  சம்மதிக்கவில்லை என்று. என் பெற்றோரிடம் சொல்லிவிடு என்றான் அவன்,

அவனது பேச்சுக் காதில் விழுந்த மாதிரியே காட்டிக்கொள்ளாமல். வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். சுப்ரியா,

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு. "என்ன? பதிலைக் காணோம்?" என்று கேட்டான் அவன்,

"அதுவா? யோசித்துக் கொண்டிருந்தேன்," என்று புருவம் நெறித்து யோசித்தாள் அவள், "அப்படி யோசித்துப் பார்த்தால்        "

"யோசித்துப் பார்ப்பது சரிதான், ஆனால். இவ்வளவு யோசிப்பதற்கு. அதில் என்ன இருக்கிறது? நம் இருவருக்கும் ஒத்து வராது என்று முடித்துவிட வேண்டியதுதானே?" என்றான் அவன். சிறு வெறுப்புடன்,

"அதெப்படி முடிப்பேன்?" என்று வினவினாள் அவள்,

அதிர்ந்த அவனது பார்வை ஒருதரம் அவள் மீது பாய்ந்து மீண்டது,

"நீங்கள்தான் கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன்        ஆனால். அந்தப் பழக்கமும் உண்டுதானே? யோசிப்பதைச் சொன்னேன்!" என்று கிண்டலாகத் தொடங்கினாள். சுப்ரியா,

நன்றாகத் திரும்பி. அவன் முகத்தை ஒரு தரம் ஏளனமாகப் பார்த்துவிட்டு. "நீங்களெல்லாம் எப்படித்தான் ஒரு தொழிலை நடத்தி. வெற்றி வேறு பெறுகிறீர்களோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!" என்று

அலுப்புடன் கூறி.  அவன் பற்களை நறநறப்பதை ஓரக் கண்ணால் பார்த்து ரசித்தாள்,

பிறகு. “பின்னே பாருங்கள். நான் எப்படிப்பட்டவள்? பணத்துக்காகத் திருமணமே ஆன ஒருவன் பின்னே கூடச் சுற்றுகிறவள்! உங்களுக்கு மட்டுமே. மிகவும் நன்கு தெரிந்த விஷயம் அது! நீங்களோ. ஒன்று. இரண்டு மூன்று என்று. வரிசையாக சூப்பர் மார்க்கெட்
அதுவும் வெறும் கடை அல்ல! பல்பொருள் அங்கா ...டி. சூ ...ப்பர் மார்க்கெட்டு,களாகத் திறக்கிறீர்களாமே! அப்படியானால். உங்களிடம் எவ்வளவு பணம் இருக்க வேண்டும்? எல்லாவற்றுக்கும் வாரிசான உங்களை. அவ்வளவு எளிதாக விட்டுவிட. நான் என்ன பைத்தியக்காரியா? ரொம்பவும் தயவு பண்ணி. இருக்கிற கொஞ்சம் மூளையைக் கசக்கியேனும். யோசித்துப் பேசுங்கள். சார்!” என்று முடித்தாள் அவள், ஏளனம்! எகத்தாளம்!

யுகேந்திரன் திகைத்தான், இவள் உண்மைதான் பேசுகிறாளா? அல்லது. சும்மா. அவனை மிரட்டுகிறாளா?

# அத்தியாயம் - 9

சுப்ரியாவுக்குத் தன்னிடம் கொஞ்சம் நாட்டம் போல ஏதோ ஒன்று இருப்பது. யுகேந்திரனுக்குத் தெரியும், ஆனால். அந்த நாட்டத்தை. முழு நிஜமாக அவன் ஒருபோதும் நினைக்கவில்லை, இதுவா. அதுவா. எது மேலானது என்ற யோசனையில். எதையும் விட்டுவிடக் கூடாது என்று. அவள் நடிப்பதாகவே நினைத்தான்,

இன்றைக்கும். அந்த சந்தேகம் தவறு என்று அவன் எண்ணவில்லை, ஆனால். பணத்தாசை கொண்ட சுப்ரியாவுக்கு விரித்த வலையில். இப்போது. தானே விழுந்து விட்டோமே என்ற அவமானக் குன்றல்தான் அவனுக்கு அதிகமாக இருந்தது,

விஷயம் ஒரேயடியாக முற்றிப் போனால். அப்போது உண்மையை வெளியிட்டுச் சொல்லித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவனால் முடியும்தான், ஆனால். வீட்டுச் செல்லப் பெண் வானதிக்கு. வருத்தம் ஏற்படாமல் காக்கவே. இன்னமும் அவன் முயற்சி செய்தான்,

அத்தோடு. அவ்வளவு வெளிப்படையாகக் குற்றம் சாட்டியபிறகு. எவ்வளவு பணம் இருந்தாலும். தன்னை மணக்க . சுப்ரியா விரும்ப மாட்டாள் என்று யுகேந்திரன் நிச்சயமாகக் கருதினான், அந்த அளவுக்கு ஒரு நிமிர்வு அவளிடம் எப்போதும் இருந்தது,

சிவாவிடமே. மனைவியிடம் சொல் என்றுதானே கூறினாள்? நிழல் உறவுக்கு அழைக்கவில்லையே! ஒருவேளை. உண்மைக் காதல் அவனுடன்தானோ?

சேச்சே! அதெல்லாம் இராது என்று தலையை உலுக்கிக் கொண்டான் யுகேந்திரன்,

“என்ன?”

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

முதலில் இவளது மிரட்டலுக்குப் பதிலைத் தேடாமல். வேறு ஏதையோ யோசிப்பது. பெரிய மடத்தனம் அல்லவா என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொள்ளும் போதே. மனம் சண்டித்தனம் செய்து. பழைய யோசனையையே தொடர்ந்தது,

அதில். இன்னொன்றையும் கண்டுபிடித்தது, சிவாவுடன் உண்மைக் காதல் என்றால். சுப்ரியா. அவனோடு இப்படி வருவாளா? பெரியவர்களைச் சந்திப்பதற்கு என்றால். திருமணத்துக்குச் சம்மதம்

என்றுதானே பொருள்? அதெப்படி?

சுப்ரியாவின் பணத்தாசை அந்த அளவுக்குப் போயிருந்ததா?

இப்போதும். உண்மை அறிந்த அவனது குற்றச்சாட்டைக் கூடப் பொருட்படுத்தாமல் விடுகிற அளவுக்கா. பணவெறி?

இவளது பேச்சு அப்படித்தான் சொல்கிறது, ஆனால். இந்த ஏளனமும் எகத்தாளமும் சொல்கிற பொருள் வேறு அல்லவா?

சுப்ரியாவின் பேச்சைப் பெரிதாக எண்ணாதவன் போன்று. “பார் சுப்ரியா. இது ஓர் இக்கட்டான நிலைமை, நம் இருவருக்குமே, இப்போது ஒருவரை ஒருவர் குத்திக் கிழிப்பதை விட ...”

“ஒருவரை ஒருவர் குத்திக் கிழிப்பதா? கூடவே கூடாதே! அந்த உரிமை உங்களுக்கு மட்டும்தானே உரியது. என்கிறீர்களா?” என்று திருப்பினாள் சுப்ரியா,

சொல்வதறியாமல். அதை விடவும் எதையும் சொல்லப் பிடிக்காமல். சிறு மௌனம் காத்தான் யுகேந்திரன்,

வார்த்தைகளை விட்டால். திரும்பப் பெற முடியாது என்பதை. இப்போது. இந்த நிமிஷத்தில். அவனை விட அதிகமாக யாரும் உணர்ந்திருக்க முடியாது, ஒரு தரம் சொன்னதே. நேரம் கெட்ட நேரத்தில் வந்த குடும்பப் பெரியவர்கள் தலையீட்டால். ஒரே குளப்படியாகிவிட்டது, அதிலிருந்து மீளுமுன். இன்னொன்றைக் கிளப்ப வேண்டாம் என்று கருதினான் அவன்,

அவனிடம் இருந்தே வரட்டும் என்று எண்ணியவள் போல. நேர் எதிரே பார்த்தபடி. அசையாமல் இருந்தாள் அவள்,

லேசாகத் தொண்டையைச் செறுமிக்கொண்டு. “பார் சுப்ரியா. என் வீட்டுப் பெரியவர்களுக்கு. என் திருமண விஷயமாக ஆசை அதிகம், ரொம்ப நாள் சும்மா இருக்க மாட்டார்கள், அதனால். நானே உன் வீட்டுக்குச் சென்று. அங்கே அவர்களிடம் உன் ...வந்து. நம் விஷயத்தை ... அதாவது இங்கே எல்லோரும் தப்பாக எண்ணிவிட்டதைச் சொல்லி விடுகிறேன், உன் தொழிலைப் பாதிக்கும் என்பதால். உனக்குப் பிடிக்கவில்லை என்றும் கூறிவிட்டால் ” என்றவனின் பேச்சில். “நோ!” என்று. சுப்ரியா குறுக்கிட்டாள்,

“பின்னே?”

“அவர்கள்,... , என் தாத்தா பாட்டியைச் சொன்னேன். அவர்களும் வயதானவர்கள்,. என்மேல் ரொம்பப் பிரியம் உள்ளவர்கள்... ,” என்றவள்

ஓரக் கண்ணால் அவனைக் பார்த்தாள்,

அவன் சொன்ன அதே வார்த்தைகள்! உறைக்காமல் போய்விடுமா. என்ன?

யுகேந்திரனின் முகம் கறுப்பதைக் கண்டு. திருப்தியுடன் தொடர்ந்தாள், “என் வாழ்வில் சிறு பிரச்சினை என்றாலும். அவர்கள் இருவருமே தாங்க மாட்டார்கள், அதனால். எடுத்தேன். கவிழ்த்தேன் என்று. அவர்களிடம் எதையும் சொல்ல முடியாது,. சொல்லவும் கூடாது!” என்றாள் தீர்மானமாக,

“அப்படியானால். இப்போது என்னதான் செய்வது?” என்று. எரிச்சலை அடக்கிக்கொண்டு கேட்டான் யுகேந்திரன்,

அலட்சியமாக உச்சுக் கொட்டினாள் அவள், “தாத்தா வீட்டுக்குப் போகிறபோது. மெல்லச் சொல்வதாகத்தானே. பேச்சு? கிண்ற்றில் போட்ட கல் மாதிரி. கொஞ்ச நாட்கள் அதைப் பற்றிய பேச்சு மூச்சே. இல்லாமலே இருந்துவிட்டால். மனப் பொருத்தம் இல்லாமல். நாம் இருவரும் விலகி விட்டதாக எண்ணிக் கொள்வார்கள், அதனால். சும்மா இருந்தே சமாளித்து விடலாம்!” என்று முடித்தாள்,

அவன் ஒப்பாதவன் போலத் தலையசைத்தாலும். பேசாமலே காரை ஓட்டினான்,

திடுமென. “உங்கள் திறப்பு விழாவுக்கு. எங்கள் பைகள் வேண்டாம் என்றால். அது பற்றி ஒரு வாரம் முன்னதாகவே. எனக்கு விவரம் சொல்லி விடுங்கள்,” என்றாள் அவள்,

“அதற்கும். இதற்கும் என்ன சம்பந்தம்?” என்று. இப்போது எரிச்சலை மறையாத குரலிலேயே யுகேந்திரன் கேட்டான்,

தோளைக் குலுக்கி. “அதெல்லாம் என்னவென்று. எனக்குத் தெரியாது, ஆனால். நீங்கள்தான் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் நன்றாக முடிச்சுப் போடுகிறீர்களே! என்ன காரணத்தினால். என்ன செய்கிறீர்கள் என்று. என்னத்தைச் சொல்வது? எனவே. முன் ஜாமீன் எடுப்பது மாதிரி. முன்னெச்சரிக்கையாகக் கேட்டேன், “ என்று. சுப்ரியா தெளிவாக விளக்கம் கொடுத்தாள்,

அவன் பற்களை நறநறவென்று கடித்தது. அவளது காதுகளுக்குத் தேவ கானமாகக் கேட்டது!

உள்ளூர மனம் உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிராவிட்டால். சிரிக்கக் கூட முடிந்திருக்கும்!

ஆனாலும். என்னென்ன வார்த்தைகள் சொல்லிவிட்டான்!

மூன்று தினங்கள் கடந்த பிறகு. ஷெட்டுக்குப் போய். ஒரு டிசைனின் அமைப்பு பற்றி. தைக்கிறவர்களிடம் சுப்ரியா விளக்கிக் கொண்டிருந்தாள், அப்போது. வண்ணமதி ஓடோடியும் வந்தாள்,

“அக்கா. அக்கா. அவர்கள் வந்திருக்கிறார்கள். அக்கா!” என்றாள் பரபரப்புடன்,

செய்கிற வேலையில் கவனம் கலைய. “ஷ். யார்டீ? மொட்டையாக “அவர்கள்” என்றால். யார் என்று கொள்வது?” என்று சின்ன அதட்டல் போட்டாள். சுப்ரியா,

“ஐயோ. அவர்கள்தான்க்கா! அத்தானு ...வந்து. யுகேந்திரன் சாருடைய பெற்றோராம்!” என்று வண்ணமதி கூறவும். சுப்ரியாவே சட்டென எழுந்து நின்றுவிட்டாள்,

இப்போது. இவர்கள் ஏன் வந்திருக்கிறார்கள் என்று. நெஞ்சு படபடத்தது. அவளுக்கு, யுகேந்திரனின். அன்றைய ஒப்பாத மௌனத்தை அலட்சியப் படுத்தியது. தப்போ?

“இதோ வருகிறேன் என்று சொல்லு. போ!” என்று வண்ணமதியை முதலில் அனுப்பினாள்,

சற்றே நலுங்கியிருந்த கூந்தலைக் கைவிரல்களால் லேசாகக் கோதி விட்டு. உடுத்திருந்த ஆடையையும் சரியாக இழுத்துவிட்டுக் கொண்டு அலுவலகத்தை நோக்கி. சுப்ரியாவும் கிளம்பினாள்,

“சுப்ரியா. பார்க்க ரொம்ப அழகாகத்தான் இருக்கிறாய்! தைரியமாகப் போ, “ என்றாள். தையல் வேலை உட்படச் செலவுக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்த பிரதிமா, ஏதோ துணையிருப்பது போன்ற ஆறுதலோடு. தோழியைத் திரும்பிப் பார்த்து முறுவலித்துவிட்டு. வேகமாகச் சென்றாள் சுப்ரியா,

அதற்குள். ஃபில்டர் காஃபியெல்லாம் வரவழைத்து. பிரமாதமாய் உபசாரம் பண்ணியிருந்தாள் வண்ணமதி,

சுப்ரியாவைப் பார்த்ததும் புன்னகை செய்து. “வரவேற்புக்கு அருமையான பெண்ணை அமர்த்தியிருக்கிறாய், என்ன மாதிரி உபசாரம் செய்கிறாள். தெரியுமா? அசப்பில். உன்னைப் பார்க்கிற மாதிரி இருக்கிறது,” என்றாள் யுகேந்திரனுடைய தாய் யோகலட்சுமி,

“இருக்கும்,” என்றவளின் மனதில் சட்டென ஒரு வக்கிரம் தலை தூக்க. “ஏனென்றால். இவள் என் தங்கையேதான், அப்பாவுடைய

இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவள்,” என்று விவரம் சொன்னாள்,

மோசமான குடும்ப அமைப்பு என்று ஒதுங்கிப் போவதானால். போகட்டுமே என்று நினைத்தாள், சில நாட்களுக்கு முன்பாக என்றால். இதற்காக அவள் ரொம்பவும் வருத்தப்பட்டிருக்கக் கூடும், ஆனால். இன்று வலி மட்டும்தானே தெரிகிறது?

இதை என் தொடர்வது?

பெரியவர்கள் இருவர் முகங்களிலும். அவள் எதிர்பார்த்தது போலவே. திகைப்பு தெரிந்தது, “அப்படியா?!” என்று ஆச்சரியமாகக் கேட்டார் கேசவமூர்த்தி, “ஆனால். நீ தனியாகத் தாத்தா வீட்டில் வளர்ந்ததாக அல்லவா. யுகேன் சொன்னான்! ஆனால். அது இயல்புதான், மகளின் நினைவாகப் பெற்றவர்கள் பேத்தியைக் கூட்டிப் போய் வளர்ப்பது. பொதுவாக நடப்பதுதான்,” என்றார் தொடர்ந்து,

அவர் நினைப்பது புரிந்தும். சுப்ரியா மேலே பேசவில்லை, இதற்கு மேல் சொன்னால். இந்தச் சின்னப் பெண்ணின் மனது காயப்படும், அந்த அளவுக்கு. இது முக்கியம் அல்ல!

ஆனால். சின்னவள் அப்படி நினைக்கவில்லை, “அப்பா ரொம்ப மோசம்தான் அங்கிள், எங்கள் யாரையுமே பிடிக்காது, அம்மாதான். அக்காவைக் கண்டுபிடித்து. உதவியாக இரு என்று என்னை இங்கே அனுப்பினார்கள்,” என்று விவரம் தெரிவித்தாள்,

“சில சமயம். இப்படிப்பட்ட நடப்புகள்தான். பிள்ளைகளைப் புடம் போட்ட பொன்னாக்குகின்றன, நீங்கள் இருவருமே அப்படித்தான் என்று தெரிகிறது,” என்று. கேசவமூர்த்தி அதிலும் நல்லதையே கண்டார்,

“ஆமாம், பார்த்தாலே தெரிகிறது,” என்று ஒத்து ஊதினாள் யோகலட்சுமி,

சுப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது, மோசமான தந்தை பெற்ற பிள்ளைகள், இந்தக் குடும்பத்தின் தொடரபே வேண்டாம் என்று ஓடாமல். பாராட்டிப் பேசுகிறார்கள்!

இன்னும் ஒரு மகன் இருந்தால். மதியை அவனுக்குப் பெண் கேட்பார்கள் போல!

“நீங்கள் இருவரும் நல்லதையே பார்க்கிறீர்கள். ஆன்ட்டி!” என்று மனதில் நினைத்ததை அவள் சொல்ல. மூத்த தலைமுறையின் முகங்கள் பளிச்சென மலர்ந்தன,

“நல்லதை. நல்லதென்றுதானேம்மா சொல்ல முடியும்?” என்று கேட்டுவிட்டு. “அதிருக்கட்டும், நீ குன்னூருக்கு எப்போது போகப் போகிறாய்? தாத்தா பாட்டியிடம் பேச்சுவாக்கில் ஏதாவது சொன்னாயா?” என்று கேசவமூர்த்தி. விஷயத்துக்கு வந்து. விசாரித்தார்,

யோகலட்சுமியும் ஆவலாகப் பார்த்தாள்,

மகனின் திருமணத்துக்காக. ரொம்பவே ஏங்குகிறார்கள்! ஆனால். அதைத் தொடரப் போவதே இல்லை என்று. இவர்களிடம் எப்படிச் சொல்வது?

சற்று யோசித்துவிட்டு. “சொன்னேனில்லையா. அங்கிள்? தாத்தாவும் பாட்டியும். வாழ்க்கையில் அதிகம் அடி பட்டவர்கள், மனதால் நொந்து போனவர்கள், அவர்களிடம் திடுதிப்பென்று. எதையும் சொல்ல முடியாது, அங்கே போய் இருந்து. சாதாரணமாக இரண்டு நாள் இயல்பாகப் பேசிச் சிரித்து. வேடிக்கை பேசி      அந்த மாதிரி நிலை வரும்போதுதான். இதைப் பற்றிப் பேச முடியும், என் வாழ்க்கை முழுதையும் பாதிக்கிற விஷயம் அல்லவா? அம்மாவை நினைத்து. ரொம்பக் கவலைப்படுவார்கள், அதனால். இங்கே கொஞ்சம் வேலை ஓய்ந்து. குறைந்தது நாலு நாட்களாவது நான் விடுமுறை எடுக்க முடிகிறபோதுதான் அது சாத்தியம், உங்கள் “சுரபி”யின் திறப்பு விழாவுக்குப் பிறகு. இன்னமும் இரண்டு பெரிய வேலைகள் வந்திருக்கின்றன, அதன் பிறகுதான் பார்க்க வேண்டும், “ என்று காரணத்தைக் கோவையாகக் கூறினாள்,

மறுக்க முடியாதபடியும். அதே சமயம். வண்ணமதி எதிலாவது. அவளை மாட்டி வைக்காதபடியும், ஏனெனில். அவளுக்கும் இந்தத் திருமணம் நடப்பதில் விருப்பம் இருந்தது,

பெரியவர்கள் இருவரின் முகங்களும் லேசாக ஏமாற்றத்தைக் காட்டின,

ஆனால். அர்த்தமற்று வாதாடிக்கொண்டு. அங்கேயே நின்று அறுக்கவில்லை, மாறாக. எழுந்து. “நாங்கள் இருவரும் கிளம்புகிறோம். சுபாம்மா, செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன, திறப்பு விழாவுக்கு இன்னும் பத்து நாட்கள் கூட இல்லை! நிறையப் பேரை அழைக்க வேண்டும், இங்கேயும் இரண்டு பேர் பங்குதாரர்கள் என்று யுகேன் சொன்னான்,

“ஆனால். இந்தச் சுட்டிப் பெண்ணையும். கூடவே அழைத்து வாருங்கள், நான். யுகேனிடம் சொல்லிக் கொள்கிறேன்! “ என்று முடித்தார் கேசவமூர்த்தி,

“அப்புறம். திறப்புவிழாவுக்கு முன்தினம் ஒரு “கெட்டுகெதர்” வைத்திருக்கிறோம், நம் சுரபியோடு நெருங்கிய தொடர்புடையவர்ளுக்கு மட்டுமாக, நீ கட்டாயமாக வரவேண்டும். சுப்ரியா, நீங்கள் மூன்று பேருமே வாருங்கள், அதற்குள்உன் தாத்தா பாட்டி சென்னைக்கு வந்தால். அவர்களையும் கூட்டிக்கொண்டு வா, நாங்கள் எல்லோருமே சந்தோஷப்படுவோம்,” என்றாள் யோகலட்சுமி,

திருமணத்தை மறுக்கும்படி. தாத்தாவிடம்கேட்கச் சொன்னானே. அது தெரிந்தால். இவர்களுக்கு எப்படி இருக்கும் என்று நினைத்து. அவளுக்கு வருத்தமாக இருந்தது,

நாட்கள் நெருங்கி வந்தபோதும். யுகேந்திரனிடமிருந்து. “கெட்டுகெதரு”க்கு அழைப்பு வரவில்லை,

ஆனால். அதை ஈடுகட்டுகிறவள் போல. யோகலட்சுமி தினமும் அவளோடு பேசி. அவளது வரவை உறுதி செய்துகொண்டாள்,

மூவரும் வாருங்கள் என்றே அவள் அழைத்தபோதும். உள்ளார்ந்த அழைப்பு அவளுக்குத்தான் என்று புரிந்திருந்ததால். அவள் மட்டுமே போவது,. மற்றவர்கள் அலுவலைப் பார்ப்பது என்று முடிவாயிற்று,

அவர்கள் இருவருமே. அதில் உறுதியாக இருந்தார்கள், “நம் நிறுவனத்துக்கு என்றால். நம்மில் யாரேனும் ஒருவர் போதும், ஆனால். அவர்கள் வேறு ஆசையும் வைத்திருப்பதால். நீதான் போக வேண்டும்,” என்றாள் பிரதிமா,

“அப்படி என்ன. வேறு பெண்களே இல்லாத மாதிரி. வாவா என்கிறார்களே!” என்று சுப்ரியா எரிச்சலாக முணுமுணுத்தபோது. “அப்படி இல்லைக்கா, அத்தானு ...வந்து. யுகேந்திரன் சாருடைய அம்மா. அப்பா அன்று பேசிக் கொண்டிருந்தார்களே! இதுவரை. அவர் திருமணம் பற்றிப் பிடி கொடுத்துப் பேசியதே இல்லையாம், பெண்கள் என்றாலே ஒதுங்கிப் போய்விடுவாராம், அப்புறம். என்னமோ ஒருநாள் அவர்கள் பார்த்தார்களாமே! அதென்னக்கா?” என்று அப்பாவியாய்க் கண்ணை விரித்து வினவினாள். வண்ணமதி,

அவர்களைச் சொல்வானேன்? அவளுமே தப்பாக ஊகித்து மகிழ்ந்தவள்தானே?

வலியும் வெறுப்புமாக. “வேலை முடிந்ததும். பார்லரில் ஐஸ்கிரீம் சாப்பிட்டோம், இதற்கெல்லாம் அர்த்தம் காண்பது என்றால். பட்டுத்தான் தெளிய வேண்டும்,” என்றாள் அலுத்த குரலில்,

என்னைப் போல என்று காந்தியது. மனது,

வேலை,. வர நேரமில்லை என்று இருந்துவிடலாமா என்று சுப்ரியா யோசித்தாள், ஆனால். என்னவோ. அதற்கும் மனம் வரவில்லை,

முதல் காரணமாக. இந்த வண்ணமதி. ஏன் ஏன் என்று குடைந்து தள்ளிவிடுவாள், பிரதிமாவும். “அது வளமான கூட்டம், நமக்கு இன்னும் நாலு நல்ல கஸ்டமர்கள் கிடைக்கலாமே,” என்பாள்,

யுகேந்திரனுடைய பெற்றோர். ஏன் தாத்தா பாட்டி கூட அவளைச் சந்திக்க ஆவலாக இருக்கிறார்கள்,.......பெரியவர்களை ஏமாற்றக் கூடாது!

இன்னும் அவனைப் பார்த்துப் பேசி. குறைந்தபட்சமாக அன்றைய அவனது நடத்தைக்குக் காரணத்தையாவது தெரிந்து கொள்ளலாம் அல்லவா? திருமணம் ஆன ஒருவனோடு அவளை இணைத்துப் பேசினானே. அது ஏன் என்று அறிந்து கொள்ளலாம் அல்லவா?

அப்படி எதுவும் கிடையாது என்று அவனிடம் எடுத்தும் சொல்லலாமே

இதுபோல ஓராயிரம் காரணங்களை உருவாக்கிக் கொண்டாலும். எல்லாவற்றையும் விட. நெஞ்சறியப் பொய் சொல்ல முடியாத காரணத்தினாலே. அவளுக்கும் அங்கே செல்ல ஆசைதான் என்பதை. தன்னுள்ளே மட்டுமே என்றாலும் சுப்ரியா ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது!

யுகேந்திரனின் தரிசனத்திற்காக கடவுள் தரிசனத்துக்காகப் பக்தை போல ஏங்கினாள் என்று சொல்ல முடியாது, அவனது பேச்சு. நடந்த விதத்தினால். இப்போதும் அவளுள் கோபம் குமுறிக் கொண்டுதான் இருந்தது,. ஆனால். அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உள்ளூர இருப்பதை அவளால் மறுக்க முடியவில்லை,

அவனைக் காண. அவன் குரலைக் கேட்க. அக்கம்பக்கம் அவனது அருகாமையை உணர. சுப்ரியாவின் ஆழ் மனம் விரும்பியது நிச்சயமே,

ஆனால். அதற்காக அவனிடம் போய் இளித்தோ. கெஞ்சியோ தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ள. அவளது தன்மானம் இடம் தராது என்பதும் இரு மடங்கு நிச்சயமே!

செல்வது என்று சுப்ரியா முடிவு செய்து. அதை யோகலட்சுமிக்குத் தெரிவித்தபோது. வெளிப்படையாக அவள் காட்டிய பெரு மகிழ்ச்சி. வலிக்கு ஒத்தடம் கொடுத்தது போல. அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது,

ஆனால். விழாவுக்கு முந்திய நாள் அது பற்றிப் பேசிய

யுகேந்திரனின் குரலிலோ. வரவேற்பு அணுவளவு கூட இருக்கவில்லை,

மாறாக. "நாளைக்கு நீ வருவதாகச் சொன்னாயாமே! என்ன மாதிரி சூழ்நிலையை எதிர்கொள்ள நேரும் என்று யோசித்துதான் ஒப்புக் கொண்டாயா? திறப்புவிழா போல. இதில் பெரும் கூட்டம் இராது, வரவரப் போய்க்கொண்டும் இருக்க மாட்டார்கள், எல்லோரும். எல்லோர் பார்வையிலும் பட்டுக்கொண்டே இருக்க நேரும், அதிலும். உன்னை ரொம்பவே கண்காணிப்பார்கள் வீண் பிரச்சினையாகி விடக் கூடாது. ஜாக்கிரதை!" என்றான் எச்சரித்தான்,

என்னமோ அவளாக ஆசையாக. வருகிறேன் வருகிறேன் என்று கெஞ்சி அனுமதி வாங்கி வருவது போலப் பேசுகிறானே! ஆசைதான், ஆனால். அதை வெளிக்காட்டும் அளவுக்கு. அவள் ஒன்றும் ரோஷமற்றவள் இல்லையே!

"என்னிடம் இப்படி எச்சரிக்கிறவர். என்னை அழைக்க வேண்டாம் என்று. உங்கள் அம்மாவிடம் சொல்வதுதானே? அவர்கள் எத்தனை முறை என்னை வற்புறுத்திக் கூப்பிட்டார்கள் என்று. அவர்களுடைய செல்ஃபோனை வாங்கிப் பாருங்கள். தெரியும்," என்றாள் சுப்ரியா,

"அவர்கள் கூப்பிட்டால்? " என்றான் அவன். குரலில் சினம் தொனிக்க, "ஆனால் ஒன்று, நான் கவனித்துக்கொண்டேதான் இருப்பேன், அதனால். கொஞ்சம் கவனத்துடனேயே நடந்துகொள்," என்றவன். பட்டென்று பேச்சைக் கட் பண்ணிவிட்டான்,

என்னத்தைக் கவனிப்பான்?

அவனுடைய பெற்றோரிடம். அவர்களுக்கும் மூத்த தலைமுறையிடம் குழைந்து. வழிந்து. மருமகளாவதை உறுதி செய்கிறாளா என்றா?

ஓல்ட் ஐவரி நிறத்தில். அதே வண்ணத்தில். அவளே ஜரி வேலைப்பாடு செய்து தைத்த சுடி செட் அவளை மேலும் அழகாக்கிக் காட்ட. பொருத்தமான காதணி. கைப்பையோடு கிளம்பியபோது. சுப்ரியாவுக்குத் தன் தோற்றம் குறித்துப் பெருமையாகத்தான் இருந்தது,

ஆனால். விழா ஹாலின் உள்ளே காலடி எடுத்து வைத்ததுமே. கண்கள் தெறித்து விடும் போலப் பார்த்த சிவானந்தனைப் பார்த்ததும். அவளுமே திகைத்துப் போனாள்,

"சிவா. நீங்கள் எங்கே. இங்கே?" என்றாள் ஆச்சரியத்துடன்,

"சுபி. நீயா? இங்கே ஏன் வந்தாய்?" என்று கேட்ட அவனோ. விழிகளை வேகமாகச் சுழற்றி. சுற்றிலும் ஒருதரம் பார்த்துவிட்டு. "தயவு

பண்ணி. என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே!” என்று. அவளிடம் கெஞ்சினான்,

# அத்தியாயம் - 10

சிவானந்தனை அந்த விழா மண்டபத்தில் பார்த்த வியப்பு. சுப்ரியாவுக்கு. மறையச்  சற்று நேரம் பிடித்தது, ஆனால். அந்த விழாவில். அவன் கலந்து கொண்டதால் வந்த சீற்றம் அடங்க. அதிக அவகாசம் தேவைப்பட்டது,

அப்போதும் அடங்காமல். “விருந்து என்றதும் வந்துவிட்டீர்கள் போல!” என்றாள் ஆத்திரத்துடன்,

முன்னிலும் மிரண்டு. “அப்படியில் … லை. சுப்ரியா, நான் வேண்டாம் என்றுதான். சொன்னேன் வீட்டு மாப்பிள்ளை. நீங்கள் வராவிட்டால் எப்படி என்கிறாள்  …தட்ட முடியவில்லை! இந்த ஒஒரு …” என்று அவன் தட்டித் தடுமாறுகையில். “அடெடே. நம்ம சுபிம்மா! வந்துவிட்டாயாம்மா?” என்று உற்சாகத்துடன் யோகலட்சுமியின் குரல் குறுக்கிட்டது,

“மாப்பிள்ளை. இவள் சுப்ரியா, சுபி. இவர் சிவானந்தன், எங்கள் குடும்பத்து முதல் மருமகன், “ என்று அறிமுகம் செய்தவள். அதே மூச்சில். “நீ உள்ளே வாம்மா, மாமாவும் அத்தையும் உட்புறமாக உட்கார்ந்திருக்கிறார்கள், உன்னை இன்னும் காணோமே என்றார்கள், பார்க்க வந்தால். பொன் மகள் வந்தாள் என்று பாட்டே பாடலாம்போலப் பிரமாதமாக வந்து நிற்கிறாய்! வா. பெரியவர்களிடம் போகலாம்,” என்று. சுப்ரியாவை அழைத்துச் சென்றாள்,

அங்கே சென்றால். தாத்தாவும் பாட்டியும். அவளை மிக ஆவலாக வரவேற்றார்கள்,                இந்த ஆவலும் வரவேற்பும் எதற்கு என்று அறிந்திருந்த சுப்ரியாவுக்கு உள்ளூர வேதனையாக இருந்தது, இவர்கள் நினைப்பது எதுவும் நடக்கப் போவது இல்லை எனும்போது. அவள் வருவதைத் தவிர்த்திருக்க வேண்டுமோ?

அத்தோடு. இவர்களுக்கும் மேலான ஆவலோடு வரவேற்றிருக்க வேண்டியவன். எங்கெங்கோ இருந்து. யார்யாருடனோ பேசினானே தவிர. அவள் அருகே வரவே இல்லை,

ஆனால். அவன் செல்ஃபோன் பேச்சில் சொன்னது போல. அவளைக் கவனித்துக் கொண்டேதான் இருந்தான் என்பது. அவ்வப்போது அவன் பார்வையைத் திருப்பிக் கொள்வதில் இருந்து தெரிந்தது,

ஆனால். அப்படிக் கண்குத்திப் பாம்பாய்க் கவனித்து. யுகேந்திரன்

எதைக் கண்டுவிடப் போகிறான்?

அவள் என்னமோ. தானாகப் போய். யாரிடமும் வழியவில்லை, மற்றவர்களாக. முக்கியமாக அவனுடைய பெற்றோரே ஜாடைமாடையாக எதையாவது சொன்னால். அதற்கு அவள் எப்படிப் பொறுப்பாவாள்?

சொந்தப் பெற்றோரிடம். “எனக்கு இவளிடம் ஆசை. மண்ணாங்கட்டி ஒன்றும் இல்லை, திருமணமும் நடக்காது” என்று சொல்லத் தைரியம் இல்லை! அவளிடம் என்ன வாய் வீச்சு?

சஞ்சலத்தைக் காட்டிக்கொள்ளாமல். இயன்றவரை சாதாரணமாகப் பேசிப் பழகினால். அவளுக்கு இன்னுமொரு தொல்லையாக சிவானந்தன் இருந்தான்,

அவள் எங்கே போனாலும். பின்னோடு வந்து சுற்றினான், அவளிடம். பிறர் அறியாமல். ஏதோ சொல்லத் துடித்தான் என்பது. தெளிவாகத் தெரிந்தது, அவன் சொல்ல விரும்புவதும். அதை விடவும். மற்றவர்களிடம் அவள் சொல்லிவிடாதபடி அவன் தடுக்கத் துடிப்பதும் என்ன என்று நன்றாகத் தெரிந்திருந்ததால். இப்படி ஒரு மடத்தனமா என்று. அவளுக்கு அது வேறு ஆத்திரமாக இருந்தது,

இந்த அழகில். ஒரு கட்டத்தில் சுப்ரியாவைக் கூப்பிட்டு. அந்தப் பெண் வானதியை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்து. “பாரம்மா. இவள் உன் அண்ணியானால் எவ்வளவு நன்றாக இருக்கும்? எங்களுக்கெல்லாம் ஓகேதான்மா,” என்று யோகலட்சுமி சொல்லிவிட்டாள்!

“ஆஹா!” என்று வானதி ஆர்ப்பரித்ததில். “ஆன்ட்டி, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்,. இன்னும் எதுவும் முடிவாகவில்லை!” என்று சுப்ரியா அவசரமாகத் தடுக்க முயன்றது. வெளியே கேட்கவே இல்லை,

வானதியும். ஆசையாக சுப்ரியாவின் கையைப் பிடித்துக்கொண்டு. “எங்கள் அண்ணனின் திருமணத்துக்காக நாங்கள் எல்லோரும் எப்படி ஏங்கிக்கொண்டு இருக்கிறோம். தெரியுமா? எனக்குப் பெரியப்பா மகன் என்றாலும். நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம்  போலத்தான், நான்தான் உங்களுக்கு … என் வயதுதானே இருக்கும் போல? அதனால் ஒருமையிலேயே பேசிக் கொள்வோமா? நான்தான். உனக்கு நாத்தனார் …” என்று ஏதேதோ பேசத் தொடங்கிவிட்டாள்,

வானவில்லாய் ஜாலம் காட்டிய வண்ணக் கனவுகளை

அடக்கிக்கொண்டு. "ப்ளீஸ் வானதி. இன்னும் அஅதெல்லாம் உறுதியாகவில்லை, அதனால் ... அதனால். இப்படிப் பேச வேண்டாமே!" என்று கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டாள்,

ஆச்சரியமாக அவளை உற்றுப் பார்த்துவிட்டு. "அப்படியெல்லாம் எங்கள் பெரியம்மா. சும்மா வாயை விட மாட்டார்களே, நிச்சயமாக. அவர்களுக்கு உறுதியாகப் பட்டிருக்கும், அது மட்டுமல்ல, நானும் கவனித்துக்கொண்டுதானே இருக்கிறேன், கொஞ்ச நேரத்துக்கு முன்பாக நான் பக்கத்திலிருந்து பேசியதைக் கவனிக்காமல். அண்ணன் எங்கோ கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார், அப்படி என்ன பார்க்கிறார் என்று ஆராய்ந்தால். உன்னைத்தான் கண்ணால் விழுங்கிக் கொண்டிருந்தார், அப்புறம். நானும் கவனித்தேன், அவ்வப்போது ராஜாவின் பார்வை. இந்த ராணியின் பக்கம்தான்! அதுதான். பெரியம்மாவிடம் போய்க் கேட்டேன், பெரியம்மாவும் ... பெரியம்மா சொன்னதைத்தான் கேட்டாயே! " என்று வானதி விளக்கம் சொன்னபோது. சுப்ரியாவால். ஒரேயடியாக மறுத்துச் சொல்லவும் முடியவில்லை,

சொல்ல வாய்ப்பும் தராமல். ஆளுக்கொரு பக்கத்திலிருந்து. யுகேந்திரனும். சிவானந்தனும். அங்கே வந்து சேர்ந்தார்கள்,

முதலில் வந்துவிட்ட யுகேந்திரன். "அங்கே ஒரு நண்பர் வீட்டில் பிறந்தநாள் அழைப்பும் மறு பரிசும். உங்கள் நிறுவனத்தில் செய்து கொடுத்தீர்களாமே! அவருடைய மனைவி. உன்னிடம் பேச வேண்டும் என்று தேடினார்கள், வருகிறாயா?" என்று அழைத்தான்,

"ஏய் அண்ணா. உன்னோடு பேசவேண்டும் வா. என்று கூப்பிட வேண்டியதுதானே? அனாவசியமாக. நண்பர் மனைவியை ஏன் இதில் இழுக்கிறாய்? " என்று வானதி நகை முகத்துடன் கேட்கும்போதே. சிவானந்தனும் அங்கே வந்துவிட்டான்,

சுப்ரியாவைக் கெஞ்சுதலாகப் பார்த்துவிட்டு. "வனி. கொஞ்சம் என்னோடு வாயேன், ஒரு சின்ன வேலை, எனக்கு ... வந்து ... எனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும்," என்று வானதியைக் கையைப் பிடித்துக் கூப்பிட்டான்,

"என்ன நீங்கள்? தண்ணீர் எடுத்துத் தரக்கூட. நான் வரவேண்டுமா? அங்கேயே மூலை மேஜையில் இருக்கிறதே ..." என்றவளை. யுகேந்திரனோடு நகரத் தொடங்கிய சுப்ரியா. நின்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்,

இவள்தான் சிவானந்தனுடைய மனைவியா? சிரித்த முகமாக

இருக்கும் இவளிடம் பயந்துகொண்டா. சிவா மடத்தனமாக நடந்து கொள்கிறார்?

“போகலாம்,” என்ற யுகேந்திரனை. “நில் அண்ணா!” என்று உரிமையோடு தடுத்தாள் தங்கை,

“சுப்ரியா. இவர் என் கணவர் சிவானந்தன், சிவா. சுப்ரியாதான் என் அண்ணியாகப் போகிறாள்,” என்று அறிமுகம் செய்து வைத்தாள்,

“எஎஎன்னது?!!” என்று வியப்புடன். சிவானந்தன் வாயைப் பிளந்தான்,

புன்னகையோடு. “வாழ்த்துக்கள்!” என்று தொடங்கியவன். உடனேயே முகம் மாறி. நிநிஜமாகவா? சொல்லவே இல்லையே!” என்று தடுமாறினான்,

“ “சொல்லவே இல்லையே” என்றால். உங்களுக்கு முன்னரே சுப்ரியாவைத் தெரியுமா?” என்று விசாரித்தாள் அவன் மனைவி,

அவனை ஒருதரம் நேராகப் பார்த்துவிட்டு. “உங்கள் கடையில் சீட்டுப் போடுகிறவர்களுக்குப் பரிசு ஏதோ. இவள் நிறுவனத்தில் வாங்கினார் போல, நம் “சுரபி”க்கு வாங்கியிருப்பது போல, அவ்வளவுதான் பழக்கம்,” என்று முந்திக்கொண்டு சொன்னான் யுகேந்திரன்,

தொடர்ந்து. “என்ன. வருகிறாயா? அவள் மாப்பிள்ளைக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுக்கட்டும்,” என்று. சுப்ரியாவைத் தன்னோடு வருமாறு அழைத்தான்,

இப்போது. சுப்ரியா தயங்கவில்லை,

அவளிடம் எப்படியோ? ஆனால் இவன். வானதியிடம் மிகவும் பிரியமுள்ள உறவினன், இவன் காதுகளில் விஷயத்தைப் போட்டுவிட்டால். அதன் பிறகு. அவன் பாடு, அவள் நிம்மதியாக இருக்கலாம்,

இப்படி எண்ணி. யுகேந்திரனோடு நடந்தபடி. “உங்கள் தங்கை வானதியுடைய கணவர் விஷயமாக. உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்,” என்று. சுப்ரியா தொடங்கினாள்,

சரியான காரணம் புரியாவிட்டாலும். தன் மீது யுகேந்திரன் ஏதோ கோபம் கொண்டிருப்பது. சுப்ரியாவுக்குத் தெரியும், இப்போது வானதியின் அறிவிப்பால். அந்தக் கோபம் மிக அதிகம் ஆகியிருக்கும் என்பதும். அவள் எதிர்பார்த்ததே,

அது எப்படி இருந்தாலும். தங்கை பெயரைச் சொன்னால் அக்கறையோடு கேட்பான் என்று எண்ணியே. அவள் வானதி என்று தொடங்கியதே,

ஆனால். "ஒன்றும் தேவையில்லை, எல்லாம் எனக்கே தெரியும்!" என்று தணிந்த குரலில் அவன் சீறவும். அவளுக்குத் திகைப்புடன் எரிச்சலும் வந்தது,

அவள் என்ன பேசினாலும். இப்படியா?

"என்ன தெரியும்?" என்று. வெடுக்கெனக் கேட்டாள் அவள்,

அவனும் அசரவில்லை, "உன் வண்டவாளம்!" என்று அவளைப் போல எடுப்பாகவே பதில் சொன்னான்,

சுப்ரியாவின். இழுத்துப் பிடித்த பொறுமை பறந்தது, "மண்ணாங்கட்டி! எவ்வளவு முக்கிமான விஷயம்! சொல்ல வந்தால். வண்டவாளம். தண்டவாளம் என்று உள ... கண்டபடி பேசிக்கொண்டு! போங்கள்! எப்படியோ போங்கள்! யார் எப்படிப் போனால் என்ன என்று இராமல். நல்லது செய்ய எண்ணினேன். பாருங்கள்! எனக்கு இது ...இதற்கு மேலும் தேவைதான்! அந்தப் பெண். அண்ணன் அண்ணன் என்று உருகுகிறதே,. உங்களுக்கும் பாசம் இருக்கும் என்று நினைத்தேன்! அண்ணனும் தங்கையும் எப்படியும் போங்கள்!" என்று படபடவென்று பொரிந்து கொட்டிவிட்டு. விலகிச் செல்லலானாள்,

சட்டென அவளது வழியை மறைத்து நின்று. "பாசமா? எங்கள் வீட்டுப் பாசம் பற்றித் தனி ஆளாக வளர்ந்த உனக்கு என்ன தெரியும்?" என்றான் அவன் குத்தலாக,

அவனை வெறித்துப் பார்த்தாள் சுப்ரியா,

அவள் அப்படித் தனியாக வளர. யார் காரணம்? அவளுடைய தந்தை! மட்டமான புத்தியுள்ள ஓர் ஆண்பிள்ளை! அங்கே பார்த்தால். சிவானந்தனுக்குத் தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளும் அசட்டு புத்தி! இவனுக்கோ. என்னமோ எல்லாமே தனக்குத்தான் தெரியும் என்கிற திமிர்!

போகட்டும், எல்லோரும் எப்படியோ போகட்டும்,

இவர்கள். யார் எப்படிப் போனால். அவளுக்கு என்ன வந்தது?

கண் முன்னே ஒருவன் வீணாகப் போக வேண்டாம் என்று முயன்றால். என்னவோ. அவள் தனக்காகச் சொல்வது போல. விட்டுவிடு. விட்டுவிடு என்று கெஞ்சுகிறான் ஒருவன்,

அக்கறையுள்ள உறவினன் என்று அடுத்தவனிடம் சொல்லப் போனால். அவளையே மட்டம் தட்டி ...அதைவிட மோசமாகத் தூக்கி எறிந்து பேசுகிறான்,

ஐயோ. அப்பா! எல்லாம் போதுமடா. சாமி! இத்தோடு போதும்! யார் எப்படிப் போனால். அவளுக்கென்ன? இனி. இவர்கள் சங்காத்தமே வேண்டாம்!

யுகேந்திரனிடம் எதைப் பேசவும் அவளுக்குப் பிடிக்கவில்லை,

அதற்கு மேல். அங்கே இருக்கவும் பிடிக்கவில்லை,

திடீரென்று அலுவலகத்தில் அவளுக்கு வேலை வந்துவிட்டதாக யோகலட்சுமியிடம் சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்,

விடை பெறுவதற்காக யோகலட்சுமியிடம் சென்றால். அவள் எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்,

சுப்ரியாவைக் கண்டதும். முகம் மலர. “வாம்மா, நாமும் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரலாம், பக்கத்து ஹாலிலேயே ஏற்பாடு, பஃபேதான், இஷ்டப்பட்டதைச் சாப்பிட்டுவிட்டு வரலாம். வா!” என்று அழைத்தாள்,

ஏதோ தோன்ற. “எல்லோரும் ஒன்றாகவா? பெரியவர்களுக்கு எப்படி? “ என்று கேட்டாள் சின்னவள்,

மெச்சிக் கொள்ளும் பார்வையோடு. “அத்தை மாமாவுக்குக் கிண்ணங்களில். எடுத்து வந்து கொடுக்கச் சொல்லிவிட்டேன், உணவில் பெரிதாகக் கட்டுப்பாடு தேவையில்லை என்றாலும். அவர்கள் வயதில் ஐந்து பேர், எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடப் பிரியப்படுவார்கள், அதனால். அவர்களுக்கு பார்த்துப் பரிமாற ஏற்பாடு செய்தாயிற்று, இனி. நாம் போகலாம். வா,” என்று அழைத்த பெரியவளோடு சேர்ந்து. சுப்ரியா உணவறைக்குச் சென்றாள்,

அங்கே. அவள் எதிர்பார்த்ததுதான் நடந்து கொண்டிருந்தது,

பெயர்தான் “இஷ்டப்பட்டதை எடுத்து உண்பது” என்பது!

அப்போதைக்கு. குடும்பத்துடைய ஒரே மருமகனான சிவானந்தனை. எல்லோரும் உபசாரத்தால். திணறடித்துக் கொண்டிருந்தார்கள்,

பட்டர் சிக்கன் நன்றாக இருக்கிறது. மச்சான். நெய்யில் பொரித்த சாப்ஸ். சிக்கன் லாலிபாப் என்று. ஆளாளுக்கு . சிவானந்தனின் தட்டை நிரப்பிக் கொண்டிருந்தார்கள்,

இன்னும் ஒருவர். “மாப்பிள்ளை. சொல்லிச் செய்த திருநெல்வேலி

அல்வா, முதலில் ஒரு வாய் வாங்கிக் கொள்ளுங்கள், அப்புறம் மீதி இருக்குமோ. என்னவோ?” என்று நெய் ஒழுகும் அல்வாவைக் கையில் உருட்டி எடுத்து வந்தார்,

வேண்டவே வேண்டாம் என்று அழுத்தமாகச் சொல்லத் தைரியம் இல்லாமல். அரைகுறையாக வாய்க்குள்ளேயே ஏதோ முனங்கிக் கொண்டிருந்தான். சிவா,

பார்த்தால். அவனுக்கே இவைகளை உண்பதில் ஆசை போலல்லவா தெரிகிறது! சட்டென முன்னே சென்று. சிவானந்தனை முறைத்துப் பார்த்தாள். சுப்ரியா,

அவ்வளவுதான். வீட்டு மாப்பிள்ளை வெலவெலத்துப் போனான்,

கெஞ்சல் பார்வையில் பலனேதும் இல்லாமல் போகவே. வருத்தத்துடன்.

“இஇப்போது. ஒரு ஒரு கெட்ட சேதி. உங்களிடம் சொல்ல வேண்டியிருக்கிறது... ,” என்று அவன் தொடங்குமுன். “அப்படியானால். இன்றைக்கு அதைச் சொல்ல வேண்டாமே. மாப்பிள்ளை!” என்று குறுக்கிட்டான். யுகேந்திரன்,

“இன்றைக்கு நாம் எல்லோரும் சந்தோஷமாகக் கூடியிருக்கிறோம், இப்போது போய்க் கெட்ட சேதியை ஏன் சொல்வது?” என்று அவன் கேட்கவும். முகம் மலர. ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டான் சிவானந்தன்,

நல்ல நேரத்தில் வந்து குறுக்கே விழுந்தானே என்று ஆத்திரத்துடன் நினைத்தாள். சுப்ரியா, வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்கக் கூடாதா?

சும்மாவே. நழுவி ஓடிக் கொண்டிருப்பவன் சிவானந்தன், இப்படியே தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பான், நச்சுத் தாவரம இது, செடியாக இருக்கும்போது வெட்டாமல். மரமாக வளர விடுவதா?

இப்போது. யுகேந்திரனின் பேச்சை. எப்படி மாற்றுவது?

“பாவம்.வானதி!” என்றாள். அவன் தங்கையின் கையைப் பற்றி, “ஏதோ கெட்ட சேதி என்று. சிவா சொல்லிவிட்டார், இப்போது. அது என்ன என்ன என்று. அவள் மனம் தவித்துக்கொண்டே இருக்கும், விவரம் தெரியாதவரை. நிம்மதியே இராது, ஆனால். விஷயம் தெரிந்துவிட்டால். சே. இதற்குப் போய். என்ன “பில்ட்அப்” என்று கூடத் தோன்றலாம், அப்படித்தானே வானதி?”என்று அவளை உசுப்பிவிட்டாள், “

“ஆமாம். சிவா, நீங்கள் சொல்லி விடுங்கள், சுப்ரியா சொல்வது போல அப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருக்கும், இல்லாவிட்டால். என்னவோ. ஏதோ என்று. எனக்கு மண்டைக்குள் ஒரே குடைச்சலாகிவிடும், “ என்று. சுப்ரியாவுக்கு ஒத்து ஊதினாள். வானதி,

சிவானந்தன். தன் ஆபத்பாந்தவனை நோக்க. “என்னம்மா. விடு என்றால். விடவேண்டாம்? நீயும் மற்ற பெண்களைப் போல “ஙைஙை“ என்பதா? அண்ணன் சொல் வேதம் என்பாயே. அதெல்லாம் சும்மா. உடான்சா?” என்று கிண்டல் போலக் கூறித் தடுத்தான்,

சிறு திகைப்புடன் அண்ணனைப் பார்த்த வானதி அதற்கு மேல் பேசவில்லை,

அதற்குள்ளாகத் தட்டில் எதையெதையோ நிரப்பிக்கொண்டு வந்த யோகலட்சுமி. “என்னம்மா. நீ இன்னமும் எடுக்கவில்லையா?” என்று சுப்ரியாவிடம் கேட்டாள்,

“அதற்குத்தானம்மா. இவளைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்,” என்றான் யுகேந்திரன். கன அக்கறையோடு,

“ஓ! நீ பக்கத்தில்தான் இருக்கிறாயா? பின்னே. நான் கவலைப்பட வேண்டாம், போங்கள், போய்ச் சாப்பிடுங்கள்,” என்று. யோகலட்சுமி முன்னே நகர்ந்தாள்,

ஓர் ஏளனச் சிரிப்புடன். உணவு வைத்திருக்கும் பக்கம் கைகாட்டி. முன்னே நடக்கும்படி சைகை செய்தான் யுகேந்திரன்,

பொறுக்க மாட்டாமல். “ஏன் அப்படிச் செய்தீர்கள்?” என்று சுப்ரியா விவவினாள்,

“பின்னே? உன் பைத்தியக்காரத்தனமான முயற்சிகளை. நான் கைகட்டி. வாய் பொத்திப் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பேன் என்று எண்ணினாயா?” என்றான் அவன் சினத்தோடு,

நின்று திகைப்புடன் அவனைப் பார்த்தாள் அவள்,

பைத்தியக்காரத்தனமான முயற்சியா?

யார் செய்தது பைத்தியக்காரத்தனம்!

முதலில் இருந்தே. சிவானந்தனும். இப்போது இவனும்!

செய்வதையும் செய்துவிட்டு. அவளைப் பைத்தியக்காரி என்கிறானே!

ஆனால். இவன் எப்படி ... இல்லை, இதில் என்னவோ தப்பு

இருக்கிறது,

என்ன தப்பு என்று யோசிக்கும்போதே. தன்னை அறியாமல். அவளது பார்வை சிவானந்தனிடம் பாய்ந்தது,

திருநெல்வேலி அல்வாக்காரர். “முதலில் இந்த அல்வாவை ...” என்று. சிவானந்தனின் வாயிலேயே ஊட்டிவிடக் கைநிறைய இருந்த அல்வாவை நீட்டிக் கொண்டிருந்தார்,

“வேண்டாம்!” என்ற கத்தலோடு ஓடிப் போய். அல்வாக்காரரின் கையை இறுகப் பற்றித் தடுத்தாள் சுப்ரியா,

என்ன இவள் என்பது போல எல்லோரும். அதிர்ந்து நோக்க. “இல்லை, சுப்ரியா மேலே தப்பு இல்லை! நான்தான் இனிப்பு உண்ணக் கூடாது!எனக்கு ... எனக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது, “என்று. ஒருவாறு. செல்லியேவிட்டான். சிவானந்தன்!

# அத்தியாயம் -11

சற்று நேரம் அங்கே இயக்கம் நின்று போயிற்று,

சுப்ரியாவின் பின்னோடு விரைந்த யுகேந்திரன் அப்படியே நின்றான், அல்வாக்காரர் நீட்டிய கை நீட்டியபடி. சிலையானார், மற்றவர்களும் அப்படியே,

“திருவிளையாடல்” திரைப் படத்தில். சிவாஜி கணேசன் பாட்டை நிறுத்தியதும் ஒரு கணம் உலகத்தில் அசைவெல்லாம் நின்றுபோகுமே. அதைப் போல!

சில வினாடிகளில். அந்தப் பாட்டில் போலவே. உலகம் இயல்புக்கு வந்தது, யுகேந்திரன் தவிர!

வானதி ஓடி வந்து. அவன் தோளைப் பற்றி. “ஐயோ. என்ன சிவா இது? இப்படிக் குண்டைத் தூக்கிப் போடுகிறீர்களே!” என்று கண்ணீருடன் கேட்டாள்,

என்ன மாப்பிள்ளை. என்ன அத்தான் என்று அவரவர் உறவுக்குத் தக்க அழைத்து. “ ஐயோ ஐயோ “ என்று பதறினார்கள்,

இதற்காகத்தான் என்பது போல சுப்ரியாவைப் பார்த்துவிட்டு. தப்பு செய்தவன் போல. சிவானந்தன் தலை குனிந்து நின்றான்,

சுப்ரியாவுக்கு எரிச்சல் வந்தது, என்னவோ உயிர்க் கொல்லி நோய் வந்தவிட்டது போல. எதற்காக இந்த சோகம்?

“எல்லோரும் இவ்வளவு கவலைப்படுவதற்கு. இதில் என்ன இருக்கிறது? சொல்லப் போனால். இது வியாதியே இல்லை, ஒரு சின்ன. ஆரோக்கியச் சீர்கேடு, கொஞ்சம் உணவைக் கட்டுப்படுத்தினால். முக்கியமாக இனிப்பை விலக்கினால். அதிலேயே தீர்ந்து விடுகிற பிரச்சினை, அதைச் சொல்லப் பயந்து. தருகிற எல்லாவற்றையும் சாப்பிட்டு. சிவா சிக்கலை இன்னும் அதிகமாக்கிக் கொண்டார், அவ்வளவே!” என்றாள் சற்றே பொறுமை குறைந்த குரலில்,

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு. வானதி. சுப்ரியாவிடம் திரும்பினாள், “மெய்யகவே அவ்வளவுதானா. அண்ணி? பயப்பட ஒன்றும் இல்லையா?” என்று கவலையோடு கேட்டாள்,

அவளது “அண்ணி” எரிச்சலையும். உள்ளூர ஓர் ஏக்கத்தையும் ஏற்படுத்தியதை ஒதுக்கி. “மெய்யாக. உண்மையாக. சத்தியமாக. இதில் பயப்பட ஒன்றும் இல்லை. வானதி, இதற்கு மிக முக்கியமான மருந்து.

உணவுக் கட்டுப்பாடு, உரிய மருத்துவரிடம் போனால். எதெது செய்ய வேண்டும். எதெது கூடாது என்று சொல்லுவார், அதன்படி நடந்துகொண்டு. சாதாரணமாக இருக்க வேண்டியதுதான், இதற்குப்போய். என்னவோ படுக்கையில் கிடக்க வேண்டிய நோய் மாதிரி. எல்லோரும் முகத்தை சோகமாக வைத்திருக்கத் தேவையே கிடையாது, " என்றாள் சுப்ரியா, "டீவியில். பத்திரிகைகளில் சர்க்கரை வியாதி பற்றி அடிப்படி வருகிறதே! பார்த்தது இல்லையா?" என்று கேட்டாள்,

"இல்லையே அண்ணி, எங்கள் குடும்பம் கொஞ்சம் ...அதிலும் நான் இனிப்புப் பிரியை, "டயபெட்டிக்" என்றால். என்னவோ ஓர் அலட்சியம், சானலை மாற்றி விடுவேன் ........................................................................"

"ஓஹோ! இது பற்றி உன்னிடம் சொல்லக் கூட. சிவா ஏன் இப்படிப் பயந்தார் என்று இப்போதுதான் புரிகிறது, நானும். மனைவியிடம் சொல்லி. உரிய உணவு சாப்பிடுங்கள் என்று எத்தனையோ முறை சொல்லச் சொல்லி அலுத்துவிட்டேன்,

என்னவோ. வருத்தப் படுவீர்கள்,. இளப்பமாக எண்ணி விடுவீர்கள் என்று. அவ்வ்வளவு தயங்கினார், பலமுறை சொல்லிப் பார்த்து. அலுத்துப்போய். நானே மனைவியிடம் சொல்லப் போவதாக மிரட்டக் கூடச் செய்தேன், இப்போது கூட. சொல்லிவிடாதே என்றுதான் கேட்டார், ஆனால். உங்கள் வீட்டு உபசாரத்தைப் பார்த்த பிறகு. சும்மா இருப்பது தவறு என்று பட்டது, " என்றாள் சுப்ரியா,

"பொறுப்போடு சரியாகத்தான் செய்திருக்கிறாய்! " என்றார் கேசவமூர்த்தி, "ஆக. மாப்பிள்ளை இதை மனதில் கொண்டுதான். வீட்டு விருந்துகளுக்கு வராமல். வேலை வேலை என்று ஓடியது போல! இனிமேல் தைரியமாக வாருங்கள். மாப்பிள்ளை, உங்களுக்கு வேண்டாத உணவு இல்லாமல் பார்த்துக் கொள்ளுகிறோம், விருந்து என்றால். என்ன மாப்பிள்ளை? சாப்பாடு மட்டுமா? நாம் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பழகுவதுதானே? என்ன? வருவீர்கள்தானே?"

அவர் தொடர்ந்து கேட்க. "கட்டாயம். பெரிய மாமா! இனி ஒன்றையும் விடுவதில்லை, இனிப்பைத் தவிர!" என்று சிவானந்தன் கூறிய விதத்தில். எல்லோர் முகங்களிலும் சிரிப்பு மலர்ந்தது,

"வராமல் நானும் விட்டுவிட மாட்டேன், வந்து. இவர் பங்கையும் சேர்த்து. நான் விழுங்கலாமே!" என்று வானதி இலகுவாகப் பேச. எல்லோரும் மறுபடி நகைத்தனர்,

விவகாரத்தில். சுப்ரியாவின் முயற்சி பாராட்டப்பட்டது,

“ஆமாம், அவள் மட்டும். யாரோ எப்படியோ கெட்டுப் போகட்டும் என்று சும்மா இருந்துவிடாமல். தைரியமாகக் குறுக்கிட்டாளே! அதைச் சொல்ல வேண்டும், ” என்று பெருமைப் பட்டாள் யோகலட்சுமி,

“சிவாண்ணனுக்கு சர்க்கரை வியாதி என்று. உங்களுக்கு எப்படித் தெரியும். சுப்ரியா? என்னமோ நகத்தைப் பார்த்தால் தெரியும் என்று. என் நண்பன் சொல்லுவான், அப்படியா?” என்று ஓர் இளைஞன் கேட்டான்,

“ஊகூம், அதெல்லாம் எனக்குத் தெரியாது, சிவானந்தனின் கடையில் மாதாந்திரச் சீட்டுக்கு. மனதைக் கவர்கிற மாதிரி ஏதாவது பரிசுப் பொருள் வேண்டும் என்று அது பற்றிப் பேச வந்தார், வந்தவர். அது பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ”என்று சிவானந்தனைப் பார்த்துப் புன்னகை செய்து. அவள் மேலே சொல்லுமுன் அவனே குறுக்கிட்டான்,

“இதற்கு மேல் நான் சொல்லுகிறேன், அல்லது. வேண்டாத விவரங்களை. சுபா நீட்டி முழக்கப் போகிறாள்! “ என்று தொடங்கிச் சொல்லலானான்,

“நீட்டி முழக்குவதா? எங்கே? அதுதான் வந்ததுமே. மயக்கம்போட்டு தொப்பென்று விழுந்துவிட்டீர்களே!” என்றாள் சுப்ரியா,

“மயக்கமா? ஐயோ!” என்றார்கள் யாரோ,

“விழுந்ததில் அடி பட்டதாப்பா?” என்று கவலையோடு கணவனை விழிகளால் ஆராய்ந்தாள் வானதி,

“ஏய். என்றைக்கோ நடந்ததற்கு. இன்றைக்கு அடையாளம் தேடுகிறாயா? அன்றைக்கே. எனக்கு ஊமையடி கூடப் படவில்லை, “ஸ்பெஷல்” அலுவலகத்தில் மெத்தென்று அழகான கம்பளம் விரித்திருந்ததால். உள்காயம். வெளிக்காயம் எதுவுமே படவில்லை!” என்றான் சிவானந்தன்,

“பெரிதாக ஆர்டர் கொடுக்கிற எண்ணத்தில் உள்ளே போன எனக்கு. நாற்காலியில் உட்காரத் தொடங்கியதுதான் தெரியும், அப்புறம். நீட்டி நிமிர்ந்து தரையில் கிடக்கிறேன், ஒரு டாக்டர் என்னைப் பரிசோதித்துக் கொண்டிருக்கிறார், வாட்ச்மேனை எனக்கும் பிரதிமாவுக்கும் துணை வைத்துவிட்டு. சுப்ரியாவே நேரில் போய்ப் பக்கத்துத் தெருவில் இருந்த டாக்டரை. அவள் வண்டியிலேயே அழைத்து வந்துவிட்டாள், என் நல்லகாலம். அவர் “டயபெட்டிக்”

பார்க்கிறவர், உடனேயே குத்திப் பார்த்துக் கண்டுபிடித்து. சிகிச்சை செய்தார், ஆனால் என் கெட்டகாலம். டாக்டரின் கிளினிக் அலங்கார வேலை செய்தது. இந்தம்மாவின் “ஸ்பெஷல்” தான், அதிலிருந்து. வீட்டில் சொல்,. வீட்டில் சொல் என்று அதே டார்ச்சர்தான்,” என்று முறுவலித்தான்,

அவன் முடிக்குமுன். “கெட்டகாலம் என்று சொல்லாதீர்கள், எல்லாமே நல்ல காலம்தான், சுப்ரியா விரட்டாவிட்டால். நீங்கள் இதை எந்த அளவுக்குக் கொண்டு போயிருப்பீர்களோ? யார் கண்டது? என்னைப் பொறுத்தவரையில். சுப்ரியா. என் மாங்கல்யத்தைக் காப்பாற்றியவள், ரொம்பத் தாங்க்ஸ். சுப்ரியா, இந்த வார்த்தை ரொம்ச் சின்னது, ஆனால். என் நன்றியைத் தெரிவிக்க. வேறு என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை,” என்றாள் உணர்ச்சி ததும்ப,

“ஒன்றுமே சொல்ல வேண்டாம், என் இடத்தில் நீ இருந்தாலும். யார் இருந்தாலுமே. இயல்பாகச் செய்யக் கூடியதுதான், சிவாவின் உணவில் கண்டிப்பாக இரு அது போதும்,” என்றாள் சுப்ரியா,

“போதாது. போதாது! குறைந்த பட்சமாக. சுப்ரியாவுக்கு ஒரு பட்டமாவது கொடுத்தாக வேண்டும், என்ன பட்டம் கொடுக்கலாம்? தாலி காத்த மாரியாத்தா? என்ன. நன்றாக இருக்கிறதா?” என்று ஒரு கல்லூரிக் குரல் ஒலியெழுப்பியது,

“ஏய். சே! என்ன பழங்காலம் மாதிரி “மாரியாத்தா”? சுப்ரியாத்தா என்று முடிக்கலாம், “ என்றது. இன்னொன்று,

“இல்லைப்பா, தாலி காத்த சுப்ரியாத்த என்றால். “ரிதும்” சரியாக வரவில்லை, சுபம் காத்த சுப்ரியாத்தா! இது எப்படி இருக்கு?” என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக்கொண்டு கேட்டான். இன்னோர் இளைஞன்,

“ஐயோ! சுப்ரியா என்று அழகான பெயர்! அதனோடு. ஆத்தாவைச் சேர்த்து குழப்புகிறீர்களே, இதைக் கேள், சுபம் காத்த சுபா! பிரமாதமாக இல்லை! எதுவானாலும். என்னைப் போலப் பிறவிக் கவிஞனிடம் கேளுங்கப்பா!” என்றது. இன்னொன்று!

“கவிஞன்! நீ? என்னடா. இந்தப் பைந்தமிழ் நாட்டுக்கு வந்த பெரும் சோதனை!” என்று பல்லி மாதிரிப் பலமுறை உச்சுக் கொட்டினாள் ஒருத்தி,

சிவானந்தனுக்குச் சர்க்கரை வியாதி என்றதும் கனத்த சூழ்நிலை. இந்தக் வேடிக்கைப் பேச்சிலும். கேலிச் சிரிப்பிலும் அடியோடு மாற.

எல்லோரும் உற்சாகத்தோடு. கலந்து உரையாடலாயினர்,

இரண்டு பேர் தவிர!

இந்த உற்சாகக் கூட்டத்தில் யுகேந்திரனின் குரல் கலந்துகொள்ளவில்லை என்பதை. சுப்ரியாவின் செவிகள் துல்லியமாகக் கண்டுபிடித்திருந்தன,

யுகேந்திரனுக்கோ. கண் முன்னே இருந்த திரை மறைந்து. துலாம்பரமான வெளிச்சத்தில் கண்கள் கூசின, அதை விடவும் மனம்!

சுப்ரியாவின் மனதில் கொஞ்சமேனும் கள்ளம் இருந்திருந்தால். அவனது அநியாயக் குற்றச்சாட்டு. சிவானந்தனைப் பற்றியது என்று. உடனே புரிந்திருக்கும், ஆனால். அங்கே அணுவளவும் தவறு இல்லையே! அதனால்தானே. அவன் பேச்சை உளறல் என்றிருக்கிறாள்!

உளறலேதான் என்று. இப்போது புரிகிறது! அவளைப் பற்றி. எப்படிப்பட்ட. என்னென்ன வார்த்தைகளை விட்டுவிட்டான்!

இப்போது. என்ன சொல்லி சமாதானம் செய்வது? அவளது ரோஷமும் நிமிர்வும். அவனே அறிந்தவைதானே?

தப்பே செய்தாலும் நிமிர்வு என்று நினைத்தான், ஆனால். இது தப்பே அறியாத நிமிர்வாக அல்லவா இருக்கிறது! இவளை என்ன சொல்லிச் சமாதானம் செய்ய முடியும்?

வாய்ப்பே கிடையாது போலத் தெரிகிறதே!

கிடையாதுதான், ஆனால், தோல்விக்குப் பயந்து. முயற்சியே செய்யாமல் இருப்பவன் யுகேந்திரன் அல்ல,

முதல் முயற்சியாக. சத்தமில்லாமல். அவள் அருகே போய் நின்றான்,

சற்று நேரத்தில் பார்த்தால். அவளும் வெளியே காட்டிக் கொள்ளாமலே. அவனை விட்டுத் தூரப் போயிருந்தாள்,

இரண்டு முறை இப்படி அவன் முயன்று. அவள் விலகிச் சென்றபோதும். யுகேந்திரனுக்குக் கோபம் வரவில்லை, “சபாஷ். சரியான போட்டி” என்று உள்ளூர சுப்ரியாவைப் பாராட்டத்தான் தோன்றியது,

அடுத்த முயற்சியாக. சுப்ரியா கிளம்புவதைக் கவனித்து. அவளைக் கொண்டுவிட முன் வந்தான், அவள் வரும்போது. ஸ்கூட்டியில் வரவில்லை என்பதை. யுகேந்திரன் முதலிலேயே கவனித்திருந்தான்,

திரும்பும்போது ஓசிப் பயணத்துக்கு யாரையாவது பிடிப்பாள் என்று அப்போது நினைத்தற்கு மாறாக. இந்த மாதிரி விழாவுக்கு. இந்த உடையணிந்து. ஸ்கூட்டியில் வருவது நன்றாக இராது என்று புரிந்து. டாக்சியில் வந்திருக்கிறாள் என்று. இப்போது தோன்றியது,

எதையுமே இரண்டுவிதமாகச் சித்தரிக்கலாம் போலும், அவரவர் மனநிலையைப் பொறுத்து. அவர்களே தீட்டுகிற வண்ணம்! அப்புறம். அந்த வண்ணம்தான் நிஜம் என்று. அசட்டுத்தனமாக எண்ணிக் கொள்வது!

சுப்ரியா விடை பெறத் தொடங்கியதும். “கிளம்பிவிட்டாயா? வா, கூட்டிப் போகிறேன், “ என்று அவனும் கிளம்பினான்,

இது வரை. “பாசம் பற்றித் தனியாக வளர்ந்த உனக்கு என்ன தெரியும்” என்று யுகேந்திரன் கேட்டதிலிருந்து ஒரு வார்த்தை கூட. இருவரும் பேசிக் கொள்ளவில்லை,

சிவாவின் சர்க்கரை வியாதிக்கும். யுகேந்திரனின் பேச்சுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா. இல்லையா என்று. இன்னமும் சுப்ரியாவுக்குத் தெரியாது,

இதை என்ன மாதிரி அவளிடம் எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்பது என்று மனதினுள் பலவிதமாக யோசித்தபடியே. “போகலாமா?” என்று அழைத்தான் அவன்,

ஆனால். “நான் ஏற்கனவே சொல்லி. டாக்சி வந்துவிட்டதே, நீங்கள. உங்கள் விருந்தினரைக் கவனியுங்கள், உங்களுக்காக வந்தவர்கள், அவர்களை விட்டு வந்து. எனக்காகக் கஷ்டப்பட வேண்டாம், “ என்று உதட்டில் புன்னகையோடு. அவனை நிமிர்ந்து பாராமலே கூறியவள். வாசலை நோக்கி விரைந்தாள்,

கூடவே நடந்தபடி. “உன்னுடன் பேச வேண்டுமே. சுப்ரியா, அதனால். டாக்சியை அனுப்பிவிட்டு “ என்றவன் பேச்சில் குறுக்கிட்டு. “எனக்கு ஒரே ஒரு கேள்விதான், இப்போதே கேட்டு விடலாம், என்னமோ கவனித்துக்கொண்டே இருக்கப் போவதாகச் சொன்னீர்களே! கவனித்ததில் ஏதாவது சிக்கியதா? கிடைத்திருக்க வேண்டும், அதனால்தானே. தன்னந்தனியே வளர்ந்த விதத்தால். பாசம் தெரியாது என்றீர்கள்! ஆனால். அதுவே போதும், இன்னும் உங்கள் மற்ற கண்டுபிடிப்புகளைக் கேட்டு ரசிக்கும் மனநிலை எனக்கு இல்லை, அதை இன்னொரு நாள் ...இல்லையில்லை,. ஒருபோதுமே வேண்டாம், கண்டுபிடிப்புகளை உங்களிடமே பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், வருகிறேன்,” என்று. குரல் உயர்த்ததாமலே அவள்

சொல்லிக்கொண்டே நடந்தபோது. அந்தக் கட்டடத்தின் போர்டிகோவுக்கே வந்துவிட்டார்கள்,

அங்கே டாக்சியும் வந்து நிற்கவே. வேகமாகச் சென்று . அதில் ஏறினாள்,

அப்போதும் கூடவே சென்று. அவள் ஏறியதும் கார்க்கதவைச் சாத்துகிறவன் போலக் கதவைப் பற்றியவன். அதைச் சாத்தாமலே குனிந்து அவளிடம் சொன்னான், “உன்னிடம் பேசியே தீர வேண்டும். சில விளக்கங்கள். உனக்கு நான் தந்தே ஆக வேண்டும், இன்றில்லாவிட்டால். நாளை! இன்னொரு நாள்! கேட்ட பிறகு முடிவு உன் விருப்பம், ஆனால். கேட்கவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்காதே, நாளை வருவேன்,” என்று கார்க் கதவைச் சாத்தி. காரை எடுக்கும்படி. டிரைவருக்குச் சைகை செய்தான்,

ஹூம்! இவன் அனுமதிக்காமல். டிரைவர் காரை எடுக்க மாட்டாராமா? பெரிதாக. சைகை என்ன என்று. மனதினுள் புகைந்தாள் அவள்,

நாளை வருவானாமே விளக்கம் சோல்ல!

அதை. யார் காது கொடுத்துக் கேட்கப் போகிறார்கள்? ஒரு வார்த்தை பேசாமல் திருப்பி அனுப்ப வேண்டும் ... , ஆனால். அவன் என்ன விளக்கம் சொல்லக் கூடும்? அது தெரியாமலே போய்விடுமே!

வாய்ப்பே கொடுக்க மாட்டேன் என்பது. சினிமாத்தனம், அது கூடாது, ஒருவேளை ... ஒருவேளை எதிர்பாராத விதமாக. அவளும் ஒப்புக்கொள்ளும் விதமாகவே. ஏதேனும் நடந்திருக்கலாம்!

அப்படி ஏதேனும் நடந்திருக்க வேண்டும் என்று ஒரு நப்பாசை உள்ளே துடிப்பது. அவளுக்குப் புரியாமலில்லை,

ஆனால். அவன் முழுதும் நடித்திருக்கிறானே! தொடக்கத்தில் இருந்தே வேஷம், அதிலும். அந்த ஐஸ்கிரீம்! ஒரு பெண்ணின் மனதில் ஆசையைத் தூண்டிவிட்டு. பழி வாங்க முயன்றிருக்கிறான், அது மன்னிக்க முடியாதது! மறக்கவும் கூடாதது,

சொன்னது போலவே. மறுநாள் அலுவலகம் திறக்கும்போதே. முதல் ஆளாக. யுகேந்திரன் வந்து நின்றான்,

மறுநாள் “சுரபி” திறப்புவிழாவை வைத்துக்கொண்டு. அது தொடர்பான ஆயிரம் கடைசி நிமிஷத்து வேலைகளை ஒதுக்கி. அவன் அங்கே வந்தது பெரிய விஷயம்தான்,

ஆனால். அதில் உச்சி குளிர்வது மடத்தனம்! அவள் ஒன்றும். வாவா என்று அவனை அழைக்கவில்லையே!

யுகேந்திரனைக் கண்டதும். சுப்ரியா எழுந்தாள்,

“அக்கா. காஃபி ...” என்ற வண்ணமதியை ஒரு முறை முறைத்துவிட்டு. “இது அலுவலகம், சொந்த விஷயம் பேசும் இடமல்ல, பக்கத்தில் ஒரு பூங்கா இருக்கிறது, நீங்கள் சொல்ல வேண்டியதை. அங்கே இடையூறின்றிச் சொல்லலாம்,” என்று. அவனை முந்திக்கொண்டு வெளியே சென்றாள்,

மற்ற இருவரையும் பார்த்து லேசாகத் தலையசைத்து. விடை பெற்றுக்கொண்டு. சுப்ரியாவைப் பின் தொடர்ந்தான் அவன்,

கட்டடத்துப் படியிறங்கியதும். “காரில் வேண்டுமானால் ...” என்று தொடங்கியனை. இடைமறித்து. “உங்கள் காரிலா? நான். மாடு. பூனையை விடக் கேவலம் இல்லை, ஒரு சூடு போதும்!” என்றாள் அவள்,

இந்தப் பேச்சு. நல்ல அறிகுறி இல்லைதான், ஆனால். எப்போதும். இவள் இப்படித்தான் இருக்கப் போகிறாள், உண்மை அறிந்தபின் ...ஒரு வேளை

பூங்காவை அடைந்து. ஒரு சிமெண்ட் பெஞ்சில் ஓரமாக அமர்ந்து. அவள் கைக் கடிகாரத்தை அவள் திருப்பிப் பார்த்ததை. அவனாலும் பொறுக்க முடியவில்லை,

எனவே. “வேறு வேலை இருந்தால். இன்னொரு நாள் பேசலாம். சுப்ரியா, “ என்றான்,

“என்னது? இதை. இன்னொரு நாள் தொடருவதா? வேண்டாம்,. வேண்டாம், எதுவானாலும். இப்போதே சொல்லி முடித்து விடுங்கள்! அத்தோடு எல்லாம் முடியட்டும்,” என்றாள் அவள்,

“ஆனால். இப்படி எதிர்மறை முடிவை மனதில் வைத்துக்கொண்டு. நீ அவசரப்பட்டால். நான் எதைச் சொல்லி. என்ன பயன்? கொடுக்கும் வாய்ப்பை நியாயமாகத் தர வேண்டாமா?”

சைத்தானின் வேதமா? நியாயத்தைப் பற்றி யார் பேசுவது?

ஆத்திரத்துடன் பார்த்து. “என்ன காரணம் கூறினாலும். நீங்கள் ஒரு பெண்ணின் உணர்ச்சிகளோடு விளையாடி இருக்கிறீர்கள், அது மன்னிக்க முடியாத குற்றம்!” என்றாள் அவள்,

அவன் தணிந்துபோனான், “இல்லையென்று நான் சொல்லவில்லையே! ஆனால். என்ன மாதிரி நிலையில். எந்த

உணர்ச்சிகளோடு. நான் அப்படிச் செய்தேன் என்று விளக்கத்தான். இந்த சந்திப்பே, ப்ளீஸ். ப்ரியா, கொஞ்கம் பொறுமையோடு கேள்," என்று கேட்டுக் கொண்டான்,

அவனது அழைப்பு மனதைத் தாக்கிய விதத்தை வெளிக்காட்டாமல் மறைத்தபடி. "சொல்லுங்கள்," என்றாள் கம்மிய குரலில்,

முதல் பார்வையில். அவளது தோற்றம். அவனைத் தாக்கிய விதத்தை அவன் சொன்னபோது. அவள் சற்று அதிர்ந்து கூடப் போனாள் எனலாம்,

ஆனால். உடனேயே சிவாவிடம் அவள் சொன்ன வார்த்தைகளுக்கு . யுகேந்திரன் அர்த்தம் கண்ட விதம். அவள் முகத்தைச் சிவக்கடித்தது,

"சிவாவிடம் எனக்கு ரொம்பப் பிடித்த விஷயம். அவர் மனைவி மீது வைத்திருக்கும் பிரியம்தான், என் சொந்த வாழ்வு காரணமாகப் பொதுவாக எனக்கு ஆண்களைப் பிடிக்காது, ஆனால். அன்று மயக்கம் தெளிந்து எழும்போதே. "வீட்டுக்குச் சொல்லி விடவில்லையே. என் மனைவி தாங்க மாட்டாளே" என்றுதான் பதறினார், . தன் உடல் நிலையை விட. மனைவியின் மன நிம்மதிதான் அவருக்குப் பெரிதாக இருந்தது, அதுதான். அவர் மீது எனக்கு அக்கறையையும் ஏற்படுத்தியது, தொழில் தொடர்பாகவும். வாராவாரம் டிசைன் மாற்றுவதால். தொடர்ந்து சந்திக்கவும் நேர்ந்தது, சே! இதைப் போய் ஏன்? ஏதாவது நல்ல காரணம் இருக்கக் கூடுமோ என்று ஒரு தரம் யோசிக்கக் கூடத் தோன்றவில்லையா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்,

"பலமுறை! எண்ணில் அடங்காத எத்தனையோ தடவைகள்! யோசித்து. யோசித்து உன்னுடைய அந்த வார்த்தைகள் எனக்கு மனப்பாடமே ஆகிவிட்டன, அடுத்து. சம்பந்தப் பட்டவன். என் ...எங்கள் குடும்பத்துக்கே செல்லப் பெண்ணுடைய கணவன், தப்புத் தண்டா என்றால். தங்கை தாங்க மாட்டாளே என்ற கவலை, சிவா எல்லோரையும் தவிர்ப்பது போல நடந்தது ... விருந்துகளைத் தவிர்த்ததை. எங்களை விட்டு விலகிப் போவதாக நினைத்தேன், மனைவியின் இதயம் உடைந்துவிடாது என்றாயே. ஒரு மனைவியின் இதயம் எப்போது உடையும்? எல்லாவற்றையும் விட. என் ஏமாற்றம்!

அதுதான். ரொம்பவும் என்னை மழுங்கடித்திருக்கும் என்று நினைக்கிறேன், உனக்கு என்ன தோன்றுகிறது. சுப்ரியா?" என்று அவளையே கேட்டான் அவன்,

கெட்டிக்காரன்தான், அவன் செய்த தப்புக்கு இதெல்லாம்தான் காரணங்கள் என்று அவளையே அபிப்பிராயம் சொல்ல வைத்து. மற்றபடி அவன் நல்லவன் என்று. மறைமுகமாக அவளை ஏற்க வைக்கிறானாம்,

“எல்லவற்றையுமே அனுபவித்தவர் நீங்கள், நீங்களே சொல்லும்போது. அது சரியாகத்தான் இருக்கும், ஆனால். பழி வாங்குவதற்கு நீங்கள் தேர்தெடுத்த பாதை? அதை எப்படி ஒப்புவது? உங்கள் இனத்துக்கே உரிய முறையில். என் பெண் மனதை நீங்கள் நடித்து ஏமாற்றியிருக்கிறீர்கள், ... “

“எல்லாமே நடிப்பில்லை. பிரியா, உன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்போது. பழி வாங்கும் நோக்கமே. எனக்கு மறந்துவிடும்,” என்று அவள் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னான் யுகேந்திரன்,

“நம்புவதற்கு இல்லை, அப்படி ஏதோ ஒரு சமயம் மறந்தாலும். நீங்கள் நோக்கத்தை. அடியோடு கைவிட்டதே இல்லை, முதலில் என் தந்தை, இப்போது நீங்கள், இதை என்னால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. யுகேந்திரன், அதனால். இனி நீங்கள் என்னைப் பார்க்க வராதீர்கள், தொழிலுக்கும் வாழ்வுக்கும் சம்பந்தம் இல்லை என்று ஒருமுறை சொன்னீர்கள், இன்னமும் அதே கருத்து இருக்குமானால். தொழில் தொடர்பை. இனிப் பிரதியுடன் வைத்துக் கொள்ளுங்கள், நான் போகிறேன்,” என்று எழுந்தாள்,

அவசரமாக. அவளோடு கூடவே எழுந்து. “நாளைக்கு வருவாயல்லவா?” என்று கேட்டான் அவன்,

“நிறுவன சார்பாகப் பிரதி வருவாள்,” என்று சுருக்கமாகப் பதில் வந்தது,

“அங்கே எல்லோரும் உன்னை எதிர்பார்ப்பார்களே. உனக்குத் தெரியாதா?”

“மற்றவர்கள் எதிர்பார்ப்பை எல்லாம். யாராலும் நிறைவேற்ற முடியாது. யுகேந்திரன், அத்தோடு. தாங்க முடியாத தலைவலியோடு யாரும் வரவும் முடியாதுதானே? உரியவாறு பிரதி கூறுவாள், “ என்றவள். அதற்கு மேல் நில்லாமல். மடமடவென்று நடந்து போய்விட்டாள்,

சற்றுப் பொறுத்து. சோர்வுடன் காரை எடுக்க வந்தான் யுகேந்திரன்,

“அத்தான். ஷ்! “ என்று மேடை ரகசியமாகப் பக்கவாட்டில் இருந்து அழைத்தது. ஒரு குரல்,

திகைப்புடன். சத்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தால். வண்ணமதி, உள்ளிருந்து பார்த்தால் தெரியாதபடிக்கு. சுவரை ஒட்டி நின்று. அவனை அழைத்தாள் அவள்,

அவன் பார்த்ததும். அருகில் வருமாறு. சைகை காட்டினாள்,

அவன் சென்றதும். “என்ன? அக்கா எதற்கும் ஒத்து வரவில்லையா? ஆனால். கவலைப்படாதீர்கள், எப்படியும். சீக்கிரமே. நீங்கள்தான். எனக்கு அத்தானாகப் போகிறீர்கள்,” என்றாள் நம்பிக்கையோடு,

“எப்படிம்மா?” என்றான் அவன் நம்பிக்கையற்று, “சுப்ரியாவைத் தவறாக நினைத்து. பெரிய தப்புப் பண்ணிவிட்டேன், ஒரேயடியாக வெறுத்துவிட்டாளே! எவ்வளவு மன்னிப்புக் கேட்டும். முடியவே முடியாதாம்! யானை மாதிரி. என் தலையில் நானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன், இனி என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டாளோ என்று இருக்கிறது!” என்று. யாரிடம் சொல்கிறோம் என்பது கூட இல்லாமல் அரற்றினான் ,

“ஷ்ஷ் அத்தான். முதலிலே வருத்தப் படுவதை நிறுத்துங்கள்!” என்று வண்ணமதி அவனை அதட்டினாள்,

வியப்புடன் நிமிர்ந்து. “நீ. என்னை. என்ன சொல்லிக் கூப்பிட்டாய்?” என்று கேட்டான் யுகேந்திரன்,

லேசாக முகம் சிவக்க. “அத்தான் என்றேன், அக்கா கணவர் அத்தான்தானே? என்னவோ. முதலில் இருந்தே. எனக்கு. உங்களை அப்படித்தான் நினைக்கத் தோன்றும், அன்றைக்குப் பார்த்த பிறகு. உங்களை அப்படி மட்டும்தான் நினைப்பதே! அன்றைக்கு என்ன பார்த்தேன் என்று கேட்கவில்லையே!” என்று. புன்னகை பூத்தாள் அவள்

“சொல்லேன். என்ன பார்த்தாய்,?” என்று ஆர்வமாக வினவினான் அவன்,

அவள் சொன்னதும். ஸ்விட்ச் போட்டது போல. அவன் முகமும் ஒளிர்ந்தது,

ஆனால். உடனே வாட. “ஆனால். என்னோடு பேசவே முடியாது என்றுவிட்டாளே! தொழில் பற்றிக் கூடப் பிரதிமாவோடுதான் பேச வேண்டுமாம், “ என்றான் வருத்தத்தோடு,

“அதெல்லாம். தப்பு செய்ததாகச் சொன்னீர்களே. அந்தக்

கோபத்திலே சொல்வது, அதற்காக வராமல் இருந்து விடாதீர்கள், எங்கள் அக்கா. நாளுக்கு ஒரு தரம் மனதை மாற்றிக் கொள்கிற ஆள் கிடையாது, அக்காவின் கோபம் தீர. கொஞ்சம் நாள் பிடிக்கும், ஆனால். ஒருவரை நினைத்துவிட்டால். அப்புறம். அதேதான், மாற்றமே இராது! அதனால். விடாமல் நீங்களும் வாருங்கள், இன்னும் சாவி கொடுப்பதற்கு. நான். என் அம்மாவை வரவழைக்கிறேன், என் அம்மா ரொம்பக் கெட்டிக்காரி! என் அப்பாவையே சமாளிக்கிறவர்கள், அக்காவைக் கட்டாயம் மாற்றி விடுவார்கள், " என்று வண்ணமதி உற்சாகத்தோடு கூற. யுகேந்திரனின் மனதிலும் நம்பிக்கை துளிர் விட்டது!

# அத்தியாயம் - 12

ஆனால். என்னதான் வண்ணமதி நம்பிக்கையோடு கூறினாலும். எத்தனை விதமாக யுகேந்திரன் வாதாடினாலும். சுப்ரியா சற்றும் இளகுவதாகவே தெரியவில்லை,

குடும்பத்தில் எல்லோரும் ஆவலாக இருக்கிறார்கள் என்றால். வேறு யாரையேனும் மணந்து. அவர்களைத் திருப்திப் படுத்துங்கள் என்று யோசனை சொன்னாள்,

வண்ணமதி. தான் எடுத்துக்கொண்ட பொறுப்பைக் குறைவற்றுச் செய்தாள், யுகேந்திரனுடைய பெற்றோர் வந்த போது யுகேந்திரன் புது ஆர்டர் கொடுத்தது ,என்று. யுகேந்திரனின் உயரம் ...ஏன்று. ஏதாவது பேச்சில். அவன் பெயரை. அவள் நுழைத்துக் கொண்டேதான் இருந்தாள்,

ஆனால். ஒவ்வொரு தரமும். அவள்தான் வாங்கிக் கட்டிக் கொண்டாள்,

“உனக்குப் பேசுவதற்கு. நல்ல விஷயங்களே கிடைக்கவில்லை என்றால். வாயை மூடிக் கொண்டிரு!” என்று சுப்ரியா எரிந்து விழுந்தாள்,

“இல்லைக்கா. அவர் மாதிரி உயரம். நமக்குத் தெரிந்தவர்களில் யாருக்குமே இல்லைதானே? அதைத்தான் சொன்னேன், அதற்குப் போய்க் கோபப்படுகிறாயே!” அப்பாவியாய்க் கண்ணைக் கசக்கினாள் தங்கை,

“எல்லாம் எனக்குத் தெரியும், உனக்கு அழுகை வரவில்லை என்றும் தெரியும், சும்மா. நன்றாக இருக்கிற கண்ணைக் கசக்கி. ஏதாவது கண் நோயை இழுத்துக் கொள்ளாதே! இன்னும் இதே பேச்சுப் பேசினால். மூட்டை கட்டிக்கொண்டு. மும்பைக்குப் போக வேண்டியதுதான்,” என்று அதட்டினாள் சுப்ரியா,

எல்லாவற்றையும் சும்மாப் பார்த்துக் கொண்டிருந்த பிரதிமாவிடம். தங்கையைக் காட்டி. “இவளுக்கு வாய் நீண்டுவிட்டது, “ என்று புகார் செய்தாள்,

“ஒரு சாதாரண நடப்பைச் சொன்னால். அதை உன்னால் தாங்க முடியவில்லை என்றால். தப்பு இருப்பது. அவளிடம் அல்ல,” என்றாள் தோழியும்,

“எல்லாரையும் தாஜாப் பண்ணித் தன் பக்கமாகச்

சேர்க்கிறாராக்கும்! ஆனால்.  இதனால் ஒரு பயனும் கிடையாது என்று மட்டும் சொல்லி வை,"  என்றாள் மற்றவள், "நான் ஒருபோதும் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை," என்றாள் உறுதியோடு,

பத்து நாட்கள். தமக்கையோடு போராடிவிட்டு. வண்ணமதி. தாயை வரவழைத்தாள்,

அன்னையின் இடத்துக்கு வந்தவள் என்று பிடிவாதமாக எண்ணிப் பார்த்தும். சுப்ரியாவால். அவளை வெறுக்க முடியவில்லை, மாறாக. தந்தையிடம் இந்தத் தாயும் என்ன பாடு பட்டாளோ என்று பரிவுதான் உண்டாயிற்று,

ஆனால். அவள் பேசியதற்கும். சுப்ரியா மசியவில்லை,

"இருபது ஆண்டுகளுக்கும் மேலாக. அப்பாவிடம் கஷ்டப்பட்டும். ஓர் ஆண் மகனைக் கல்யாணம் செய்துகொள் என்று உங்களால். எப்படி முடிகிறது? என்னவோ சொல்வார்களே. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்" என்று! அதைப்போல. நான் பட்ட துன்பம் எல்லோரும் படட்டும் என்றா?" என்று . கடுமையைக் கேலியில் மறைத்துக் கேட்டாள் சுப்ரியா,

மென்மையாகச் சிரித்துவிட்டு. "உன் அப்பாவை வைத்து எல்லோரையும் எடை போடாதே. சுபிம்மா, சொல்லப் போனால். அவர் ஒரு விதிவிலக்கு, அவ்வளவுதான், விதிவிலக்கைப் பொதுவிதியாக நினைத்து. உன் நல்ல எதிர்காலத்தை வீணாக்கிக் கொள்ளாதே," என்றாள் அந்த அன்னை,

"எனக்கு எல்லோரும் ஒரே மாதிரிதான் தெரிகிறது, எல்லாம்தான். மதி எல்லாம் ஒப்பித்திருப்பாளே! இன்னொரு மாதிரித் துரோகம்!"

"தங்கைக்காகச் செய்த தியாகம் என்று கூடச் சொல்லலாம், யோசிடா. ஏன் உன் அப்பாவையே உதாரணமாக நினைக்கிறாய்? யுகேந்திரனுடைய தந்தை. தாத்தா இல்லையா? உன் தாத்தாவே எப்படி? நல்ல ஆண்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்?" என்று எடுத்துச் சொன்னாள்,

ஆனால். "இதே தாத்தாதானே அப்பாவைத் தேர்ந்தெடுத்ததும்," என்று. சுப்ரியா அதற்கும் ஒரு பதில் வைத்திருந்தாள்,

ஆனால். சிற்றன்னை அதை ஒப்பவில்லை, "இங்கே வருமுன். குன்னூருக்குப் போய். பெரியவர்கள் காலில் விழுந்து ஆசி வாங்கிக் கொண்டுதான் வந்தேன், உன்அம்மாவின் தேர்வுதான் உன் தகப்பனாராம், பெரியவர்கள் இருவருக்குமே. அவ்வளவாகப்

பிடிக்கவில்லை என்றாலும். அக்கா பிடிவாதமாக இருந்தார்களாம், சரி. அவ்வளவு தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தால் சரி என்று எண்ணி. ஒத்துக் கொண்டார்களாம், அதனால். இந்த விதிவிலக்கோடு. அவர்களைச் சேர்க்காதே," என்றாள்,

"நானும் தெளிவாகத்தான் இருக்கிறேன், திருமணமே வேண்டாம் என்கிற தெளிவு," என்று எங்கோ பார்த்துக்கொண்டு சொன்னாள் பெண்,

மெல்ல அவளது கூந்தலை நீவி விட்டாள் தாய், அந்த வருடலில் நெகிழ்ந்தவளை. "ஆனால். உன் மறுப்பில் உறுதியே இல்லையேம்மா," என்று சொல்லித் திடுக்கிட வைத்தாள்,

உண்மைதான், நிச்சயமாக நினைத்தால். இந்த வலியும் தவிப்பும் ஏன் வரவேண்டும்?

சிறு அமைதியின் பின். "திருமணத்தையும். என்னால் உறுதியாக நினைக்க முடியவில்லையே," என்றாள் அவள்,

"நம்பு. அம்மா, யுகேந்திரன். உன் அப்பா மாதிரி ஆள் இல்லை, அவரது நோக்கத்தில் தப்பு இல்லை, ஆனால். செயல்பட்ட விதம் தவறு, அதை. அவரே ஒத்துக்கொண்டு மன்னிப்பும் கேட்டபிறகு. விட்டுவிடலாமே!"

சுப்ரியா யோசனையில் ஆழ்ந்தாள்,

சற்றுத் தெம்போடு. யுகேந்திரன் மீண்டும் வந்தான், "இதையும் யோசி, எங்கள் வீட்டில். நான் ஒரே பிள்ளை! உன் தாத்தா பாட்டிக்கு. நீ ஒரே பேத்தி, நம் இருவர் தலைமுறையும் அழிந்து போகாதா?" என்று அவன் கேட்டபோது. அவள் ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள்,

"ஆமாம். பெரிய்ய ராஜராஜசோழன் பரம்பரை! அதெல்லாமே போன இடம் தெரியவில்லை, ஆனால். இந்த டெஸ்ட் ட்யூப் பேபி காலத்தில். இப்படிப் பேசுவது அசட்டுத்தனமாக இல்லை?"

"ஊகூம். இது. எதுவும் சரிப்படாது, அதிரடி தான் பலன் தரும்,"

திகைத்து நோக்கிவிட்டு. "என் கை ஒன்றும் பூப்பறித்துக் கொண்டிராது," என்றாள் அவள்,

"அது என்ன செய்யும் என்று எனக்கும் தெரியும்!" என்றான் அவன் புன்னகை புரிந்து,

அந்தப் புன்னகையைப் பாராதிருக்க முயன்றபடி. "என்ன தெரியும்?" என்று கேட்டாள் அவள்,

“கேட்டால் சொல்லித்தான் ஆகவேண்டும் இல்லையா? உன் கைகள் என்ன செய்யும் என்றுதானே. தெரியவேண்டும்? கேட்டுக்கொள், பக்கத்தில் ஆள் இல்லாதபோது. என் படத்தில் கன்னத்தை வருடி உதட்டைத் தொட்டு... , “

முகம் ரத்தமெனச் சிவக்க. சுப்ரியா குறுக்கிட்டாள், “ஏய்ய். இந்த தங்கை. சரியான ஐந்தாம்படை. எங்கே போனாள்? அவளை ...இப்போது மட்டும் அவள் என் முன் வரட்டும்!”

“ஆமாம் வரட்டும், ஆனால். அவள் இப்போது வர மாட்டாள், யாரும் வந்துவிடாமல் காவலும் இருப்பாள், காவல் முடிந்து அவள் வரும்போது. மைத்துனிக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று தீர்மானிப்போம், அதற்கு முன்னே. படத்துக்குப் பதிலாகப் பக்கத்திலேயே இருக்கிறேனே! ஒரே ஒரு ப்ளீஸ் ப்ரியா ”என்று.

தன் சொர்க்கத்தை ஆவலோடு அணுகினான் யுகேந்திரன்.